க.பொ.த.
உ/த

தேர்ந்த தமிழ்ச்
சிறுகதைகள்

தொகுப்பாக்கம் :

புலவர் இளங்கோ

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

YOGA COMMUNICATION &
BOOK SHOP
No. 495, Nuwara-Eliya Road
PUSSELLAWA.
T. P. 08-478486

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்ந்த தமிழ்ச்

சிறுகதைகள்

(க.பொ.த. உயர்தர வகுப்புக்குரியது)

* புதுமைப்பித்தன்
* கு.ப.ராஜகோபாலன்
* கு.அழகிரிசாமி
* இலங்கையர்கோன்
* சி.வைத்தியலிங்கம்

* கதாசிரியர்கள் பற்றிய குறிப்புக்கள்.
* மாதிரி வினாக்களும் -விடைகளும்.

தொகுப்பாக்கம் :-

புலவர் இளங்கோ

விற்பனை

லங்கா புத்தகசாலை,

F.L. 1/14, டயஸ் பிளேஸ்,

குணசிங்கபுர,

கொழும்பு - 12.

T.Phone:- 341942

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் விவரம்

நூல் : தேர்ந்த தமிழ்ச் சிறுகதைகள்

தொகுப்பாக்கம் : புலவர் இளங்கோ

அளவு : டெமி 1/8

முதற்பதிப்பு : ஒக்ரோபர், 1995

திருத்திய பதிப்பு : ஜூன், 2003

பதிப்புரிமை : தொகுப்பாசிரியருக்கு

வெளியீடு : ஸ்ரீ லங்கா புத்தகசாலை,
234, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

கணினி வடிவமைப்பு : ITI Computer College,
379- 1/2, Galle Road,
Wellawatta,
Colombo-06

அச்சுப்பதிவு : நிசான் பிறின்ரேஸ்,
கொழும்பு -12.

விலை :

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்புரை

சிறுகதை இலக்கியம் உலக மொழிகள் அனைத்திலுமே இன்று முக்கியமான ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளது. இதற்குக் காரணம் உலகெங்கிலுமே மக்களிடையே கதை கேட்கும் ஆர்வம் எல்லாக் காலத்திலும், எல்லா மொழியினங்களிலும் இருந்து வருவதேயாகும். பல நூற்றாண்டுகளாகக் கதை சொல்லும் கலை தமிழிலும் வளர்ச்சி பெற்றுள்ளது. நமது இதிகாசங்களிலும், புராணங்களிலும் எத்தனையோ சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன.

பெரும் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூல்களிலும் அகநானூறு, கலித்தொகை, குறுந்தொகை போன்ற சங்க நூல்களிலும் அரிய பல சிறுகதைகள் பின்னிப் பிணைந்திருக்கின்றன. என்றாலும் இவை அனைத்தும் கவிதை வடிவிலே அந்தக் காலத்தில் வழங்கிவந்த உத்திகளையும், நெறிமுறைகளையும் தாங்கி நிற்கின்றன.

இருபதாம் நூற்றாண்டில் இந்நிலை மாறி உரைநடையில் சிறு கதைகள் பல உருவாயின. சிறுகதை இலக்கியம் வளம் பெற்ற காலமிது. தமிழகத்திலும் ஈழத்திலும் சிறந்த பல சிறுகதைகள் இந்நூற்றாண்டில் படைக்கப்பட்டுள்ளன. அமர சிருட்டிகளாக அவை போற்றப்படுகின்றன. தமிழகத்தில் சிறுகதை மன்னன் எனப் போற்றப்பட்ட புதுமைப்பித்தன், கு.ப.ராஜகோபாலன், கு.அழகிரிசாமி ஆகியோரதும் ஈழத்துச் சிறுகதை இலக்கிய முன்னோடிகளாகப் போற்றப்படும் இலங்கையர்கோன், சி.வைத்தியலிங்கம் ஆகியோரதும் சிறுகதைப் படைப்புக்களை ஆராய்ந்து மிகச் சிறந்த சிறுகதைகள் எனக் கருதப்படும் ஐந்து சிறுகதைகளைத் தேர்ந்த தமிழ்ச் சிறுகதைகள் என்னும் நூலாக வெளியிடுகின்றோம். இந்நூலில் இடம்பெறும் கதைகள் ஒவ்வொன்றும் பொருளிலும், உத்திகளிலும், நடையிலும் தனித்தன்மை வாய்ந்தவை. சிறுகதைகளை விரும்பிப் படிக்கும் வாசகர்களுக்கு மட்டுமன்றி க.பொ.த.உயர்தர வகுப்பு மாணவர்களுக்கும் இந்நூல் பெரும்பயன் நல்க வல்லது.

க.பொ.த.உயர்தர வகுப்பில் கற்கும் மாணவர்களுக்குப் பயன்தரும் வகையில் கதாசிரியர்கள் பற்றிய குறிப்புக்களும் மாதிரி வினா-விடைகளும் இந்நூலில் இடம் பெற்றுள்ளது. பல்வேறு பாடநூல்களைப் படைத்துள்ள புலவர் இளங்கோ இந்நூலைத் தொகுத்தளித்துள்ளார். அன்னாருக்கு எங்கள் நன்றி. பரீட்சையில் மாணவர் உச்சப் புள்ளிபெற இந்நூல் பெரிதும் துணைபுரியுமென நம்புகிறோம்.

நன்றி - பதிப்பகத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே.......

01.	தமிழ்ச் சிறுகதை வளர்ச்சி - ஒரு நோக்கு	- 01
02.	புதுமைப்பித்தன் - கவிதை	- 08
03.	புதுமைப்பித்தன் - குறிப்பு	- 11
04.	ஒரு நாள் கழிந்தது	- 12
05.	புதுமைப்பித்தன் சிறுகதைகள் - ஒரு பார்வை	- 24
06.	கு.ப.ராஜகோபலன் - குறிப்பு	- 28
07.	கனகாம்பரம்	- 30
08.	கு.ப.ராஜகோபாலன் கதைகள்	- 37
09.	கு. அழகிரிசாமி - குறிப்பு	- 45
10.	தவப்பயன்	- 47
11.	கு. அழகிரிசாமியின் கதைகள்	- 56
12.	ஈழத்தில் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சி	- 60
13.	இலங்கையர்கோன் - குறிப்பு	- 64
14.	வெள்ளிப்பாதசரம்	- 66
15.	இலங்கையர்கோன் சிறுகதைகள் - ஒரு நோக்கு	- 74
16.	சி.வைத்தியலிங்கம் - குறிப்பு	- 76
17.	பாற்கஞ்சி	- 78
18.	சி.வைத்தியலிங்கத்தின் சிறுகதைகள் - ஒரு பார்வை	- 84
19.	மாதிரிவினாக்களும் - விடைகளும்	- 87

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1

தமிழ்ச் சிறுகதை வளர்ச்சி - ஒரு நோக்கு

நாவலுக்கும் சிறுகதைக்கும் வேறுபாடு உண்டு. நாவல் நீண்டதொரு வரலாற்றையும் குறிப்பிடட கதைமாந்தர்களின் முழு வரலாற்றையும் சித்திரிக்கிறது. சிறுகதையோ வாழ்க்கையில் தொடர்ச்சியற்றதொரு பகுதியையும், குறுகிய காலத்தையுமே சித்திரிக்கிறது. நாவலாசிரியர் வாழ்க்கையில் நிறை குறை அனைத்தையும் விரிவாக விளக்குகிறார். சிறுகதை ஆசிரியரோ இவற்றைப் பலபட விரித்துரைக்காமல் குறைந்த சொற்களிலேயே குறிப்பு நுட்பமாய்ப் புலப்படுத்துகிறார்.

தமிழ்ச் சிறுகதையின் தந்தையாகக் கருதப்படுபவர் வ.வே.சு.ஐயர் ஆவர். அவர் காலத்துக்கு முன்னரும் சிறிய அளவிலான கதைகள் எழுதப்பட்டு வந்தன. வீரமாமுனிவர் எழுதிய 'பரமார்த்தகுரு' கதை உரைநடையில் படைப்பிலக்கியம் தோன்ற அடித்தளமிட்டது. 19ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வீராசாமி செட்டியார் எழுதிய ''வினோதரச மஞ்சரி'' யும் தாண்டவராய முதலியார் மொழிபெயர்த்து எழுதிய ''பஞ்சதந்திர''மும் வசன இலக்கியத்துக்குத் தூண்டுகோலாக அமைந்தன. இவ்விருவரைப் போலவே மகாகவி பாரதியாரும், அ.மாதவையாவும் சிறுகதைத் துறையில் ஆர்வம் காட்டினார்.

வ.வே.சு.ஐயரின் ''மங்கையர்க்கரசியின் காதல் முதலிய கதைகள்'' (1925) எட்டுக்கதைகள் அடங்கிய தொகுப்பு. இதில் உள்ள ''குளத்தங்கரை அரசமரம் சொன்ன கதை'' என்பது அந்தக் காலத்தில் ஓர் எரியும் பிரச்சினையாகக் கருதப்பட்ட பால்ய விவாகம் பற்றிப் பேசுவது. எடுத்துக்கொண்ட பொருளாலும், கையாளப்பட்ட உத்தியாலும், சொல்லும் முறையாலும் இக்கதை அக்காலத்தில் புதுமைமிக்கதாகக் கருதப்பட்டது. தமிழில் தோன்றிய நவீனப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்புகள் கொண்ட முதல் சிறுகதை இதுவே எனலாம். வ.வே.சு.ஐயர் தம் கதைகள் ஒவ்வொன்றிற்கும் ‘‘சூசிகை” எழுதினார். கதையின் பின்னணியை அறிமுகம் செய்துவைக்க இது உதவிற்று. நூலின் முன்னுரையில் ஐயரவர்கள் ‘‘தலைப்பில் எழுதியிருக்கும் சூசிகைகளைப் படிக்காமல் கதைகளையே துவங்கிப் படித்தால் சுவை அதிகமாகத் தெரியும். ஆனால், ரீதி புதிதாகையால் சிலருக்கு விளங்காமலும் போகலாம் என்று சூசிகையைச் சேர்த்திருக்கிறேன்” என்று குறிப்பிட்டார். ‘‘ரீதி புதிது” என்னும் தொடர் இக்கதைகள் பழைமையினின்றும் வேறுபட்ட நவீன பண்புகள் உடையன என்பதையே காட்டுகின்றன.

வ.வே.சு.ஐயருக்குப்பின் ஏறத்தாழப் பத்தாண்டு காலம் வரை தமிழ்ச் சிறுகதைத் துறையில் பெரியமாற்றம் எதுவும் நிகழ்ந்து விடவில்லை. அதற்கான காரணமும் உண்டு. காந்திய இயக்கம் எழுச்சி பெற்று நாட்டின் அனைத்து சக்திகளும் விடுதலை ஒன்றே குறிக்கோளாய் இயங்கி வந்தமையால் இலக்கியப் படைப்புகளில் யாரும் கவனம் செலுத்தவில்லை. 1932 வாக்கில் கல்கி ‘ஆனந்தவிகடன்’ மூலமும், டி.எஸ்.சொக்கலிங்கம் ‘காந்தி’ மூலமும், வ.ரா.‘மணிக்கொடி’ மூலமும் புதிய படைப்புகளுக்கு ஊக்கம் தர முன்வந்தனர்.

கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி (1899-1954) ‘ஆனந்தவிகடன்’ வாயிலாகப் பல சிறுகதைகளை வெளியிட்டார். ‘கேதாரியின் தாயார்’ என்னும் அவரது சிறுகதை அக்காலத்தில் பலராலும் போற்றப்பட்ட சிறுகதையாகும். பிராமண சமூகத்து விதவை ஒருத்திக்குச் செய்யப்படும் அலங்கோலமே கதையின் பாடுபொருள். கல்கியின் கதைகள் அளவால் நீண்டும், கதைக்குள் கதையாகவும், எந்த ஒன்றையும் பலபட விவாதித்துக் கூறுவது போலவும் அமைந்திருக்கும். இலேசான பரிகாசத்தொனி அவரது கதைகளில் இடம் பெற்றிருக்கும். கல்கியின் கதைகள் அவற்றின் ஜனரஞ்சகப் பண்பிற்காகவே போற்றப்பட்டன.

தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் ‘மணிக்கொடி’ (1933) இதழுக்கு மிக முக்கியமான பங்குண்டு. முதலில் கே.சீனிவாசன் இதன் பொறுப்பாளராக இருந்தார். பின்னர் அது 1935 இல் பி.எஸ்.ராமையாவின் கைக்கு வந்தது. அவர் ஏறத்தாழ நான்காண்டு காலம் அதனை நடத்தி வந்தார். இந்தக் காலகட்டத்தில் புதுமைப்பித்தன், ந.பிச்சமூர்த்தி, கு.ப.ராஜகோபாலன், சிதம்பர சுப்பிரமணியன், சி.சு.செல்லப்பா போன்றவர்கள் ‘மணிக்கொடி’ யில் எழுதத்தொடங்கினார்கள். இவர்களைத் தவிர மௌனி போன்றோரும் அவ்வப்போது எழுதி வந்தனர். இவ்வெழுத்தாளர்களே பின்னாளில் ‘மணிக்கொடிக் குழு’ என்று அழைக்கப்பட்டனர். கல்கியின் ‘ஆனந்தவிகடன்’ மக்களின் இரசனைக்கேற்பப் பொழுதுபோக்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைகளை வெளியிட்டு வந்த காலத்தில், மணிக்கொடிக் குழுவினர் அப்போக்கிற்கு எதிராக இலக்கிய நனவுடைய சிறுகதைகளை எழுதிவந்தனர். மேலும் சிறுகதை இலக்கியம் தொடர்பான விவாதங்கட்கும் இடமளித்தனர். சுருங்கக் கூறின், மணிக்கொடிக் குழுவினரின் சாதனை சிறுகதைத் துறையின் எதிர்கால வளர்ச்சிக்குச் சரியான வழிகாட்டியாக அமைந்தது.

தமிழ்ச் சிறுகதை இலக்கிய வரலாற்றில் புதமைப்பித்தன் ''சிறுகதை மன்னர்'' என்று போற்றப்பட்டவர். அன்றாட வாழ்வின் நடைமுறைச் சிக்கல்களையே அவர் கதைகளாக எழுதினார். புராணக் கதைகட்கு நவீனத்துவத்தை ஏற்றிப் புதுவிளக்கம் தந்தார். நனவோட்டம் போன்ற புதிய உத்திகளைக் கையாண்டார். அவர் தமக்குப் பழக்கமான நெல்லை மாவட்டப் பேச்சுத் தமிழைப் பயன்படுத்தினார். கருத்தின் வேகத்தையே முதன்மையாகக் கொண்டு, வார்த்தைகளை வெறும் தொடர்பு சாதனமாக மட்டும் கொண்டு தாவிச் செல்லும் ஒரு புதிய நடையை உருவாக்கினார். 'விடியுமா..?', 'கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்', 'நினைவுப்பாதை', 'ஞானக்குகை', 'பொன்னகரம்' முதலியன அவரது கதைகளில் குறிப்பிடத்தக்கன.

கு.ப.ராஜகோபாலனின் சிறுகதைகள் பெரும்பாலாக ஆண்-பெண் உறவையே அடிப்படையாகக் கொண்டவை. பாலுணர்வு என்பதைக் கதைகளில் கலைத்திறத்தோடு கையாண்ட பெருமை அவருக்கு உண்டு. 'ஆற்றாமை' என்னும் கதையில் ஒரு பெண்ணின் மனவக்கிரம் நன்கு காட்டப்படுகிறது. கு.ப.ரா.வின் கதைகளில் 'சிறிது வெளிச்சம்', 'மோகினி மாயை', போன்றவையும் இங்கு நினைவுகூரத் தக்கவை.

புதுமைப்பித்தன், கு.ப.ரா. போலவே ஏனைய மணிக்கொடி எழுத்தாளர்களும் ஒவ்வொரு வகையில் சிறந்து விளங்கினர். பி.எஸ்.ராமையாவின் அனுபவக் களமும், ந.பிச்சமூர்த்தியின் தத்துவச் சிந்தனைகளும் சி.சு.செல்லப்பாவின் நுணுக்கச் சித்திரிப்பும். ந.சிதம்பர சுப்பிரமணியனின் சீரிய கலைப் பண்பும் தமிழ்ச் சிறுகதைக்கு வளம் சேர்த்தன. இக்காலகட்டத்து எழுத்தாளர்களில் மௌனி தனி நிலையில் குறிப்பிடத்தக்கவர். புதுமைப்பித்தனால் ''தமிழ்ச் சிறுகதையின் திருமூலர்'' என்று பாராட்டப்பட்டவர். காதலின் தோல்வி, சோகம், மனப்பிரமை போன்றவை அவரது கதைகளில் பேசப்பட்ட பொருள். அவரது கதைமாந்தர்கள் மனத்தால் வாழ்பவர்கள்; சற்றே வித்தியாசமான மனிதர்கள். வினோதமான கனவுகளில் வாழ்வதையே விரும்பி ஏற்றவர்கள். மௌனியின் கதைகளில் 'நிகழ்ச்சிகள் குறைவு, மனத்தின் 'நெகிழ்ச்சிகள்' மிகுதி. இவரது கதைகள் வாசகனுக்கு முதல் வாசிப்பில் புரியும் என்று கூறமுடியாது. புரியாத தன்மையும், இருண்மையும் இவரது கதைகளில் உண்டு. 'அழியாச் சுடர்', 'பிரபஞ்ச கானம்', 'குடை நிழல்', போன்றன இவரது கதைகளில் குறிப்பிடத்தக்கவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலைக்கு முற்பட்ட காலகட்டத்தில் (1948 வரை) தமிழ்ச் சிறுகதை தவழ் பருவத்திலேயே இருந்து வந்தது. அதன் பின்னர் வார, மாத இதழ்களின் வளர்ச்சியால் தமிழ்ச் சிறுகதைக்கு வரவேற்பு கிடைத்தது. விடுதலைக்குப் பின் ஏற்பட்ட கல்வி வளர்ச்சியால் படிப்போர் தொகையும் மிகுதியாயிற்கு.

ஐம்பதுகள் காலகட்டம் சிறுகதை வளர்ச்சியில் குறிப்பிடத்தக்கது. அகிலன், அழகிரிசாமி, தி.ஜானகிராமன், லா.ச.ராமாமிர்தம், ஜெகசிற்பியன் போன்றோர் இக்கால கட்டத்தில் புகழ்பெற்ற எழுத்தாளர்களாக விளங்கினர். அகிலன் தொடக்க காலத்தில் காதல் கதைகளையே மிகுதியாக எழுதினார். பின்னர் சமூகப் பிரச்சினைகளில் நாட்டம் செலுத்தி 'காந்திய யதார்த்தவாதம்' என்னும் கொள்கையைப் பேசினார். நாவல் துறையில் அவர் பெற்ற வெற்றியின் ஒளியில் அவரது சிறுகதைக் கலை ஒளி மங்கி விட்டது. அழகிரிசாமி கதை சொல்லும் கலை கைவரப் பெற்றவர். 'குமாரபுரம் ஸ்டேஷன்', 'கல்யாணகிருஷ்ணன்', 'திரிவேணி' முதலியகதைகள் அவரது கலைத்திறனைப் புலப்படுத்துவன. தி.ஜானகிராமனின் கதைகள் அவற்றில் அடங்கி இருந்த விரிந்த தன்மைக்காகவும், கலைத்திறனுக்காகவும், தனித்தன்மைக்காகவும் மிகுதியும் பாராட்டப்பட்டன. லா.ச.ராமாமிர்தம் மௌனியைப் போலத் தனக்கெனத் தனிப்பாதை வகுத்துக்கொண்டு எழுதினார். பேராசிரியர் எழில் முதல்வன் மௌனியின் கதைகளையும் லா.ச.ரா.வின் கதைகளையும் பற்றி விளக்கும்போது. அவர்தம் கதைப்போக்கிற்கு, கதைப் பண்பிற்கு 'மௌனீயம்' என்றும் 'லாசரம்' என்றும் முறையே பெயர் கொடுத்துப் போற்றுவார்.

அறுபதுகளில் புகழ்பெற்று விளங்கிய சிறுகதையாசிரியர் ஜெயகாந்தன். இவரையும் தமிழ் உலகம் 'சிறுகதை மன்னர்' என்று பாராட்டி மகிழ்ந்தது. 'சரஸ்வதி' என்னும் இதழ் வாயிலாக எழுதத் தொடங்கிய அவர், 'ஆனந்தவிகடன்' மூலம் மக்களிடையே வரவேற்பைப் பெற்றார். சரஸ்வதி இதழ் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் சுந்தரராமசாமி. கிருஷ்ணநம்பி, கி.ராஜநாராயணன் போன்ற நல்ல எழுத்தாளர்களை உருவாக்கித் தரும் பட்டறையாக இருந்தது. ஜெயகாந்தனின் முதல் சிறுகதைத் தொகுதியான. 'இனிப்பும் கரிப்பும்' ஐம்பதுகளின் இறுதியில் வெளிவந்தது. பிச்சைக்காரர்கள், விபச்சாரிகள், குஷ்டரோகிகள், மனநோயாளிகள் முதலியோரைக் கதை மாந்தராக்கி முதன் முதலில் கதைகள் படைத்தவர் ஜெயகாந்தன், சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்ட இத்தகு மக்கள் அதுவரை தமிழ்ச் சிறுகதைகளில் இடம் பெற்றாரில்லை. அறுபதுகளின் இறுதியில் ஒரு புதிய போக்கு உருவாயிற்று.

நாடு விடுதலை பெற்றபின், எதிர்காலத்தில் நம்பிக்கை வைத்து

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

முற்போக்குச் சிந்தனைகளை வெளியிட்ட எழுத்தாளர்கள் தாங்கள் எதிர்பார்த்தபடி கனவுகள் நிறைவேறவில்லை என்று கண்டனர். இதனால், எழுத்துத்துறைக்கு வந்த புதியகோபம் கொண்ட இளைஞர்கள் ஒருவகையான மனமுறிவு மனப்பான்மையோடு உலகைக் காணத்தலைப்பட்டனர். அதுவரை உலகத்தை புறநிலைப் பார்வையோடு கண்டவர்கள் தம் பாதையை மாற்றிக் கொண்டு தம்மையே உள் முகமாகக் காணத்தொடங்கினர். அதன் விளைவாகத் தமிழ்க் கதை உலகில் புதிய போக்கு உருவாயிற்று, சமூக விமரிசனமாக மலர்ந்த சிறுகதைகள், பின்னர் வெறும் அகமனத்தைச் சித்திரிப்பனவாக மாறிற்று. அறுபதுகளின் இறுதியிலும், எழுபதுகளின் முதற்பாதி காலகட்டத்திலும் நாட்டில் அவ்வப்போது தோன்றி மறைந்த சிறு பத்திரிகைகளும் இதற்குத் தூண்டுகோலாக இருந்தன. ''கசடதபற', 'நடை', 'பிரக்ஞை' போன்ற சிற்றேடுகள் இங்கே சுட்டிக் காட்டத்தக்கன.

சா.கந்தசாமி, பாலகுமாரன், நீல. பத்மநாபன். வண்ணநிலவன். வண்ணதாசன் போன்றோர் எழுபதுகள் காலகட்டத்தில் சோதனை ரீதியான கதைகளைப் படைத்தனர். அசோகமித்திரனும் நீல.பத்மநாபனும் இப்புதிய எழுத்தாளர் அணியில் தம் முத்திரையை அழுத்தமாகப் பதித்தனர். நனவோடை என்னும் உத்தியைத் தம் நாவல்களிலும், சிறுகதைகளிலும் திறம்படக் கையாண்டவர் நீல.பத்மநாபன். சாதாரண விஷயங்களையும் கதைப்பொருளாகத் தேர்ந்துகொண்டு தன் அசாதாரணத் தன்மையை அழுத்தமாக வெளிப்படுத்தியவர் அசோகமித்திரன். 'கணையாழி' என்னும் இதழ் வாயிலாக ஒரு புதிய எழுத்தாளர் பரம்பரை உருவானதற்கு இவரும் ஒரு காரணமாக இருந்தார்.

எண்பதுகளின் தொடக்கத்திலிருந்து இன்று வரை எழுத்தாளர்கள் பலர் எழுதி வருகின்றனர். இவர்களது சாதனைகளை நாம் இன்றைய நிலையில் உடனடியாக மதிப்பீடு செய்வது கடினம். எனினும் இவர்கள் இதுவரை யாரும் கையாளத் துணியாத பல புதிய விஷயங்களைக் கையாளுகிறார்கள் என்பதும் கதை சொல்லும் முறையில் பல புதிய முறைகளைத் துணிச்சலாகக் கையாளுகிறார்கள் என்பதும் நாம் அறியத்தக்க உண்மையாகும். தலைமுறை இடைவெளி. ஒரு பாலினர் உறவு, எலெக்ரா மனச்சிக்கல், அடையாளச் சிக்கல், அந்நியமாதல் போன்றவை அவர் தம் படைப்புகளில் மிகுதியாகப் பேசப்படுகின்றன.

தமிழ்ப் புனைகதைகளை- நாவல், சிறுகதை, இரண்டையும் ஒரு சேரப் பார்க்கின்றபோது, சில குறிப்பிடத்தக்க போக்குகளை நாம் காணமுடிகிறது. தொடக்க காலத்தில் நம் எழுத்தாளர்கள் கதை சொல்வோர் என்னும் நிலையிலேயே நின்றனர். புனைகதை இலக்கியத்தின் பேராற்றலைத் தெரிந்து கொண்ட நிலையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் தம் எழுத்துக்களை சமூக விமரிசனத்திற்கு உரிய கருவியாக மாற்றினார். தம் காலத்து சமூக மாற்றங்களைத் தம் படைப்புக்களில் நுணுக்கமாகப் பதிவு செய்தனர். இந்த நுணுக்கப்பதிவு. அவர்களது முதன்மை நோக்கமாக மாறியபோது, வட்டாரப் புனைகதைகள் பிறந்தன. சமூக மறுமலர்ச்சியை எதிர்பார்த்து உழைத்த அவர்கள் ஏமாற்றமடைந்தபோது, தம் எழுத்துக்களில் சமூகச் சித்திரிப்புக்குக் கொடுத்திருந்த முதன்மை இடத்தை அவர்கள் தூக்கி எறிந்தனர். நேர் மாறாக அவர்கள் அகமுக நோக்காளராக மாறி, மனவுலகை ஆராய்ந்தனர். நனவோடை குறியீடு, எக்ஸ்பிரஷனிசம் போன்ற புதிய உத்திகளைக் கையாண்டனர். மேலை இலக்கிய நவீன உத்திகளும் அலுத்துப் போன நிலையில் இன்னும் ஆழமான புதிய பரிசோதனைகளை அவர்கள் செய்யத் தொடங்கினர். காலவரன் முறைப்படி கதைகளை அமைக்காமல் நிகழ்ச்சிகளை முன்பின்னாக மாற்றி நிரலற்ற அமைப்பில் கதைகளைப் புனைந்தனர். நிரலற்ற எழுத்து, எதிர்க்கதை போன்ற போக்குகளும் மெல்ல மெல்லத் தலைகாட்டிவருகின்றன. எதிர்காலப் புனைகதை உலகம் இன்னும் என்னென்ன கோலங்களைக் கொள்ளும் என்றெல்லாம் இப்போதே ஆருடம் கூறமுடியாது. பொறுத்திருந்தே காணவேண்டும்.

நன்றி :- ‘‘மனோரமா” Year Book 1995.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2

புதுமைப்பித்தன்

சொ.விருத்தாசலம் - என்று
சொன்னால் விளங்காது;
'புதுமைப்பித்தன்' என்றால்
புவிமிசை
ஆர் இருப்பர் - அவர்
ஆரென்று விளங்காது?

'சிறுகதை மன்னன்' என்று
சொல்வதெல்லாம் போதாது;
அந்த
அபூர்வ ஆன்மாவின்....
அறிவை,
ஆற்றலை,
அநாயாசமான - மொழி
ஆளுமையை;. என்னதான்
முயன்றாலும் - என் கவிதை
முழுமையாய் ஓதாது!

***

மரபுகளை
மீறிய -
மேனாட்டு எழுத்தாளன்
'மாபசா'னின்.....

சாயல் என்று - சிலர்
சொல்வர் -
அற்றை நாளில்
அவரது கதைகளை;
அன்னணம் சொல்வது
அறமல்ல-
அவர் நம்
அகவயலில்
தூவிய
விதைகளை!

அவரது பேனா-
ஆண்மை நிறைந்தது;
அது-
அச்சம் இன்றி-
காகிதத்தில்- ஊழிக்
கூத்தாட.....

'ஓ!
உலகம் இதுவோ?' என-
உள்ளது உள்ளபடி
உணர நேர்ந்த - வாசகனின்
உள்ளம் வெருண்டு - அவனது
உதிரம் உறைந்தது.

***

பர்வதம் அம்மாள்
பெற்றெடுத்த - பசுந்தமிழ்ப்
பர்வதம்....

புதுமைப்பித்தன் - எனும்
புனைபெயரில் புகுந்து கொண்டு
சிறுகதைகளால் - புவியை
சொக்கவைத்த
பிள்ளை; அன்னணம்-
சொக்கவைத்த பிள்ளையின் -
தந்தை
சொக்கலிங்கம் பிள்ளை!

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமைப்பித்தன் - படித்துப்
பட்டதாரி ஆனார்; ஆனால்-
பத்திரிகைகள் மேல்
பிரேமை கொண்டு-
பேனாவும் கையுமாய்ப்
பட்டணம் போனார்!

எழுத்துலகில் - அவர்
ஏற்றினார் தனிக்கொடி: அந்த-
மாமனிதரின்
மேதைமைக்கு-
களம் அமைத்துக்
கொடுத்து....

அற்றை நாளில் - புகழில்
ஆர்த்து நின்ற ஏடு
'மணிக்கொடி!'

***

சமூகத்தில் நிலவிய
சிறுமைகளை;
மனித
மனங்களில்-
ஒளிந்திருந்த
ஒழுக்கக் கேடுகளை;
வெளியே காட்ட
வெட்கப் பட்டு-
பொத்திப் பொத்திப்
புரையோடிப் போய்ப் -
புழுத்துக் கிடந்த
பெரிய இடத்துப் புண்களை;

எல்லோர் முன்பும்
எடுத்துப் பரப்பிவைப்பதுதான்
எழுத்தின் தருமம்- என
எண்ணினார்;

ஏச்சும் பேச்சும்
எதிர்கொண்டு-
பிரபஞ்சத்தைத்-தன்
பேனாவால் சுத்தம் பண்ணினார்!

ஒரு
கால கட்டத்தில்
கல்கி போன்றவர்களால்....

புதுமைப்பித்தன்
பலமாக -
விமர்சிக்கப்பட்டார்; ஒருசிலர்
வசைகளாலும் அவரைச் சுட்டார்;

போகப் போகப்
புதுமைப்பித்தனோ-
புடம் போட்ட
பொன்னேபோல் சுடர்விட்டார்!

***

'கடவுளும் -
கந்தசாமிப் பிள்ளையும்!'

'கவந்தனும்-
காமனும்!'

'புதிய கூண்டு!'
'பிரேத மனிதன்!'
'சிற்றன்னை!'
'சாபவிமோசனம்!'

இத்தியாதி;
இத்தியாதி;

இன்னும்பல-
இயம்பும் அவர் கியாதி;

அவரது
அறிவுக் கூர் மிகுந்த-
கையெழுத்தே - ஒரு
கத்தியாகி.....

சஸ்திர சிகிச்சை புரிய-
சொஸ்தமானது சமூக வியாதி!

***

புதுமைப்பித்தனின்
புகழ்வாய்ந்த பேனா....

படத்துறையிலும் நுழைந்தது;
படமெடுக்கவும் விழைந்தது;
அந்நிலையில் - நோய் வந்து
அவரோடு இழைந்தது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***

கமலாம்பாள் - எனும்
கற்பரசியின் மணாளனை;
புகழ்சால்-
புதுமைப்பித்தன் எனும்
குணாளனை;

கடைசி நாள்களில் -
கொஞ்சம் கொஞ்சமாக -
வறுமை தின்றது; எமனை -
'வா! வா! என்றது!'

சாகாத எழுத்துக்களை
சமைத்தவனை;
பூந்தமிழுக்கு - ஒரு
புதிய தளம் அமைத்தவனை;

அழைத்துக் கொண்டது
ஆகாயம்;
ஆனால் -
அருந்தமிழ் நினைவு கொள்ளும் -
அவனால் - தான்
அடைந்த ஆதாயம்!

நன்றி :- கவிஞர் வாலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

புதுமைப்பித்தன்

(1906-1948)

தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் புதுமைப்பித்தன் ''சிறுகதை மன்னர்'' என்று போற்றப்பட்டவர். இவரது இயற்பெயர் சொ.விருத்தாசலம். தமிழ்ச் சிறுகதை இலக்கிய வகையில் வெவ்வேறு அடிக்கருத்துக்கள், உத்திகள் என்று சோதனை செய்து பார்த்ததன் மூலம் தமிழ்ச் சிறுகதைகளை உலக இலக்கியத் தரத்திற்கு உயர்த்தியவர். கவிதை, விமர்சனம் என்று பல முயற்சிகளில் முத்திரை பதித்தவர்.

தமிழ்ச்சிறுகதைகளில் மேலை இலக்கியங்களின் தாக்கத்துக்கு இடமளித்தல், மரபுகளை எதிர்த்தல், புதிய சமூக மதிப்புக்களை உண்டாக்குதல், இலக்கியத்தில் மனித வாழ்க்கைக்கு முக்கியத்துவம் கொடுத்தல், இந்த வாழ்க்கையின் மீது புறநிலை யதார்த்தத்தின் தாக்கத்தைக் கண்டறிதல் அல்லது புறநிலை யதார்த்தங்களின் பின்னணியை அனுகுதல், சிறுகதைகளில் யதார்த்தத்தைப் புகுத்துதல் என்று பல நிலைகளில் புதுமைப்பித்தன் கதைகள் படைத்தார். புராணக் கதைகளுக்கு நவீனத்துவத்தை ஏற்றிப் புது விளக்கம் கொடுத்தார். நனவோடை போன்ற புதிய உத்திகளைக் கையாண்டார். கருத்தின் வேகத்தையே முதன்மையாகக் கொண்டு வார்த்தைகளை வெறும் தொடர்பு சாதனமாக மட்டும் கொண்டு தாவிச் செல்லும் ஒரு புதிய நடையை உருவாக்கினார்.

'பலிபீடம்', 'பிரேதமனிதன்', 'அதிகாரம் யாருக்கு?' 'ஸ்டாலினுக்குத் தெரியும்', 'வாக்கும் வக்கும்', (நாடகங்கள்), செல்லும் வழி இருட்டு (கவிதைகள்), புதுமைப்பித்தன் மொழிபெயர்த்த உலகச் சிறுகதைகள்.

'பாஸிஸ்ட் ஜடாமுனி', 'அன்னை இட்ட தீ', 'புதுமைப்பித்தன் கவிதைகள்', 'புதியஒளி', 'சித்தி', 'ஆண்மை', 'காஞ்சனை', 'புதுமைப்பித்தன் கதைகள்', 'புதுமைப்பித்தன் கட்டுரைகள்', 'சிற்றன்னை' முதலியன இவரது படைப்புக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4

ஒரு நாள் கழிந்தது.

"கமலம், அந்தக் கூஜாவிலே தண்ணீர் எடுத்தா! வெற்றிலைச் செல்லம் எங்கே? வச்சது வச்ச இடத்திலேயே இருந்தால்தானே?" என்று முணுமுணுத்தார் முருகதாசர்.

கையில் இருக்கும் கோரைப் பாயை விரிப்பதே ஒரு ஜாலவித்தை. நெடுநாள் உண்மையாக உழைத்தும் பென்ஷன் கொடுக்கப்படாததால், அது நடு மத்தியில் இரண்டாகக் கிழிந்து, ஒருகோடியில் மட்டிலும் ஒட்டிக்கொண்டிருந்தது. அதை விரிப்பது என்றால், முதலில் உதறித் தரையில் போட்டுவிட்டு, கிழிந்து கிடக்கும் இரண்டு துண்டுகளையும் சேர்த்துப் பொருந்த வைக்க வேண்டும். அதுதான் பூர்வாங்க வேலை.

பின்பு விடுதலை பெற முயற்சிக்கும் அதன் கோரைக் கீற்றுகள் முதுகில் குத்தாமல் இருக்க, ஒரு துண்டையோ, அல்லது மனைவியின் புடவையையோ, அல்லது குழந்தையின் பாவாடையையோ, எதையாவது எடுத்து மேலே விரிக்க வேண்டும்.

முருகதாசரைப் பொறுத்தவரை- அது அவரது புனைபெயர்- அது இரண்டு பேர் செய்ய வேண்டிய காரியம்.

மறுபடியும், "கமலா!" என்று கூப்பிட்டார்.

சமையல் + உக்கிராண+ ஸ்நான அறை, மூன்று நான்கு கட்டுகள் தாண்டி, துண்டாக, அலாதியாக இருப்பதால், இவருடைய பாய் விரிப்புக் கஷ்டங்கள் அந்த அம்மையாருக்கு எட்டவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்னையில் 'ஒட்டுக்குடித்தனம்' என்பது ஒரு ரசமான விஷயம். வீட்டுச் சொந்தக்காரன், குடியிருக்க வருகிறவர்கள் எல்லோரும் 'திருக்கழுக்குன்றத்துக் கழுகு' என்று நினைத்துக் கொள்ளுவானோ என்னமோ!

'குடித்தனக்காரர் குடியிருக்க இரண்டு ரூம் காலி' என்று வெளியில் போட்டிருந்த போர்டை நம்பித்தான் முருகதாசர் வீடு வேட்டையின் போது அங்கே நுழைந்தார்.

உள்ளே வீட்டின் பாக வசதிதான் விசித்திரமாக இருந்தது. முன் பக்கம் ஒற்றைச் சன்னல் படைத்த ஒரு சிற்றறை. அதற்கப்புறம், எங்கோ பல கட்டுகள் தாண்டி, மற்றொரு அறை. அதுதான் சமையல் வகையறாவுக்கு. முதல் அறை படிக்க, படுக்க, நாலுபேர் வந்தால் பேச- இவை எல்லாவற்றிற்கும் பொது இடம்.

முதலில், முருகதாசர் பொருளாதாரச் சலுகையை உத்தேசித்தே, அதில் குடியிருக்கலாம் என்று துணிந்தார். அதனால், தமக்கும் தம் சகதர்மிணிக்கும் இப்படி நிரந்தரமான 'பிளவு' இருக்கும் என்று சிறிதும் எட்டி யோசிக்கவில்லை: மேலும் அவர், யோசிக்கக்கூடியவரும் அல்லர்.

பக்கத்தில் இருந்த அரிக்கன் விளக்கை எடுத்துக் கொண்டு, அவர் சமையல் பகுதியை நோக்கிப் பிரயாணமானார்.

இடைவழியில், குழாயடியில் உள்ள வழுக்குப் பிரதேசம். அடுத்த பகுதிக்காரர் விறகுக் கொட்டில் முதலிய விபத்துக்கள் உள்ள 'பிராட்வேயை' எல்லாம் பொருட்படுத்தாது, ஒருவாறு வந்து சேர்ந்தார். சமையல் அறை வாசலில் ஒரே புகை மயம். ''கமலம்!'' என்று கம்மிய குரலில் கூப்பிட்டுக் கொண்டு, உள்ளே நுழைந்தார்.

உள்ளே புகைத் திரைக்கு அப்பாலிருந்து, ''வீடோ லட்சணமோ விறகைத்தான் பாத்துப் பாத்து வாங்கிக் கொண்டு வந்தியளே ஒங்களுக்கண்ணு தண்ணீலே முக்கிக் குடுத்தானா? எரியவே மாட்டுதில்லை! இங்கே என்ன இப்போ? விறகு வாங்கின சீரை பாத்து மகிழ வந்திட்டியளாக்கும்!'' என்று வரவேற்புப் பத்திரம் வாசிக்கப்பட்டது.

''தீப்பெட்டியை இப்படி எடு! அதுக்காகத்தான் வந்தேன்!'' என்று நடைப்பக்கமாகப் பின்நோக்கி நடந்தார்.

''இங்கே குச்சியுமில்லை, கிச்சியுமில்லை! அலமுவெத் தீப்பெட்டி வாங்க அனுப்பிச்சேன் மண்ணெண்ணெய் விளக்கெ நீங்கதான் துடைச்சுக் கொள்ளணும்!'' என்றாள் கமலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''குழந்தையை அந்தியிலே வெளியிலே அனுப்பிச்சையே, நான் வந்த பிறகு வாங்கிக் கொள்ளப்படாதா'' என்று அதட்டினார் முருகதாசர்.

''ஆமாம், சொல்ல மறந்தே போயிட்டுதே..... செட்டியார் வந்து விட்டுப் போனார்: நாளை விடியன்னை வருவாராம்! '' என்றாள் கமலா.

முருகதாசர் இந்தப் பாசுபதாஸ்திரத்தை எதிர்பார்க்கவில்லை.

''வந்தா, வெறுங்கையை வீசிகிட்டுப் போக வேண்டியதுதான்! வர்றதுக்கு நேரம் காலம் இல்லை?'' என்று முணுமுணுத்துக் கொண்டே வெளியேற முயற்சித்தார்.

''அங்கே, எங்கே போயிட்டிஹ, ஓங்களைத்தானே! கொஞ்சம் நல்லெண்ணை வாங்கிக்கிட்டு வாருங்களேன் !''

''எங்கிட்ட இப்போ துட்டுமில்லே, காசுமில்லை!'' என்று திரும்பி நின்று பதிலளித்தார் முருகதாசர்.

''அதுவும் அப்படியா ! இன்னா இந்த மிளவொட்டியிலே மூணு துட்டு இருக்கு: அதை எடுத்துக்கிட்டுப் போங்க !

''வந்ததுக்கு ஒரு வேலையா? அங்கே ஒரு பாடு எழுதித் தொலைக்கணும்: இங்கே உனக்கு இப்பதான் எண்ணெ புண்ணாக்கு-பகலெல்லாம் என்ன செய்திக்கிட்டு இருந்தே? இருட்னம் பொறவா எண்ணை வாங்கிறது ! எல்லாம் நாளைக்குப் பார்த்துக்கலாம்!''

''சோம்பல் வந்தா சாத்திரமும் வரும், எல்லாம் வரும். ஏன், அண்ணைக்குப் போய் வாங்கிட்டு வரலியா... எல்லாம் ஒங்களுக்குத்தான். இப்பத்தான் அப்பளக்காரன் வந்து கொடுத்துவிட்டுப் போனான், பிரியமா சாப்பிடுவேளென்று சொன்னேன். பின்னே அந்தச் சின்னக் கொரங்கே என்ன இன்னும் காணலே! போனாப் போனதுதான். நீங்கதான் சித்தப் பாருங்களேன்.!''

இவ்வளவிற்கும் அவர் இருந்தால்தானே ! விறகுப் பிரதேசத்தைத் தாண்டி வழுக்குப் பிரதேசத்தை எட்டிவிட்டார். புகையையும் பேச்சையும் தப்பி வந்தால் போதும் என்றாகிவிட்டது. முருகதாசரின் ஆஸ்தான அறையில் ஒரு விசித்திரம் என்னவென்றால். சென்னையில் ' லைட்டிங் டைம்' அட்டவணையைக் கூட மதிக்காமல், அது இருண்டுவிடும்.

இம்மாதிரி மண்ணெண்ணெய் நெருக்கடி ஏற்படாத காலங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த அறைக்குத்தான் முதலில் இராத்திரி. ஆனால், எண்ணெய் நெருக்கடிக் காலங்களில் சிவபிரானின் ஒற்றைக்கண் போன்ற அந்த அறையின் சன்னல் எதிர்ப்பக்கம் நிற்கும் மின்சார விளக்குக் கம்பத்திலிருந்து கொஞ்சம் வெளிச்சத்தைப் பிச்சை வாங்கும், கார்ப்பரேஷன் தயவு வரும்வரை. ஸ்ரீ முருகதாசர், வேறு வழியில்லாமல், தெருநடையில் நின்று அலமுவின் வருகையை எதிர்நோக்கியிருக்க வேண்டியதாயிற்று.

முருகதாசர் வானத்தை அளக்கும் கதைகளைக் கட்டுவதில் மிகவும் சமர்த்தர்; 'சாகா வரம் பெற்ற' கதைகளும் எழுதுவார். அந்தத் திறமையை உத்தேசித்து, ஒரு விளம்பரக் கம்பெனி மாதம் முப்பது ரூபாய்க்கு வானத்தையளக்கும் அவரது கற்பனைத் திறமையைக் குத்தகைக்கு எடுத்துக்கொண்டது. அதனால் அவர், வீர புருஷர்களையும், அழியாத சித்திரங்களையும் எழுத்தோவியமாகத் தீட்டுவதை விட்டு விட்டு, சோயாபீன்ஸ் முதல் மெழுகுவர்த்தி வரையிலும், வெளிநாடுகளிலிருந்து வந்து குவியும் பண்டங்களின் காவியங்களை இயற்றிக் கொண்டிருக்கிறார்.

'டபாஸா' வீரிய மாத்திரையின் மீது பாடிய பரணியும், தேயிலைப் பானத்தின் சுயசரிதையும், அந்தத் தமிழ் தெரியாத வெள்ளைக்காரனையும் இவர்மீது அனுதாபம் காட்டும்படி செய்து விட்டன. இதற்காகத்தான் அந்த முப்பது ரூபாய்.

வீட்டு எதிரில் நிற்கும் மின்சார விளக்கின் உதவியைக் கொண்டும் பிள்ளையவர்களால் அலமுவைக் கண்டுபிடிக்க இயலவில்லை. வெற்றிலை, வேலை, குழந்தை வராத காரணம்- எல்லாம் அவரது மனத்தில் கவலையைக் கொண்டு கொட்டின. நடையிலிருந்து கீழே இறங்கிச் சந்தின் மூலைவரை சென்று பார்த்து வரலாமா என்று புறப்பட்டார்.

பக்தி மார்க்கத்தில் ஏகாக்கிரக சிந்தையைப் பற்றிப் பிரமாதமாக வர்ணிக்கிறார்கள். மனம் ஒரே விஷயத்தில் லயித்துவிட்டால் போதுமாம். பிள்ளையவர்களைப் பொறுத்தவரை, அவர் இந்தப் 'பணம்' என்ற மூன்றெழுத்து மந்திரத்தில் தீவிர சிந்தை செலுத்துபவர். பணத்தை வாரிச் சேர்த்துக் குபேரனாகிவிட வேண்டும் என்ற எண்ணம் ஒன்றுமில்லை. கவலையில்லாமல் ஏதோ சாப்பிட்டோம், வேலை பார்த்தோம், வந்தோம் என்று இருக்க வேண்டும் என்பதற்காக, எத்தனையோ வித்தைகளை எல்லாம் செய்துவிட்டார். அவருடைய குடும்பத்தின் வரவு செலவுத் திட்டத்தை மட்டிலும். அவரால் எப்பொழுதும் சமன் செய்ய முடியவில்லை.

நிதிமந்திரியாக இருந்தால், பட்ஜட்டில் துண்டுவிழுவதற்குப் பொருளாதாரக் காரணங்கள் காட்டிவிட்டு, உபமான்யங்களைத் தைரியமாகக் கேட்கலாம், கவலையில்லாமல், கொஞ்சம் உடம்பில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிக்காமல், கடன் கேட்டுப் புறப்படுவதற்கு முடியுமா? குடும்பச் செலவு என்றால், சர்க்கார் செலவாகுமா?

கவலை இருக்கப்படாது என்ற உறுதியின் பேரில் தான் நம்பிக்கை என்ற இலட்சியத்தை மட்டும் திருப்தி செய்விக்க, 'சாகா வரம் பெற்ற' கதைகளை எழுதுவதைக் கொஞ்சம் கட்டிவைத்துவிட்டு, இந்த 'லிப்டன் தேயிலை', காப்பி, கொக்கோ ஆகியவற்றின் மான்மியங்களை அவர் எழுத ஆரம்பித்தார். ஒரு பெரிய நாவல் மட்டிலும் எழுதிவிட்டால், அது ஒரு பொன் காய்க்கும் மரமாகிவிடும் என்று அவர் நெஞ்சழுத்தத்துடன் நினைத்த காலங்களும் உண்டு. இப்பொழுது அது ஒரு நெடுந்தூர இலட்சியமாகவே மாறிவிட்டது.

முன்பாவது, அதாவது நம்பிக்கைக் காலத்தில், ஏதோ நினைத்ததைக் கிறுக்கி வைக்கக் காகிதப் பஞ்சமாவது இல்லாமல் இருந்தது. அப்பொழுது ஒரு பத்திரிகை ஆபீசில் வேலை. ஆனால், இப்பொழுது காசு கொடுத்து வாங்காவிட்டால் முதுகில்தான் எழுதிக்கொள்ள வேண்டும். முருகதாசர் நல்ல புத்திசாலி, அதனால்தான் முதுகில் எழுதிக்கொள்ளவில்லை.

யாராவது ஒரு நண்பரைக் கண்டுவிட்டால் போதும், தமது தூர இலட்சியத்தைப் பற்றி அவரிடம் ஐந்து நிமிஷமாவது பேசாமல் அவரைவிடமாட்டார். நண்பர்கள் எஸ்.பி.ஸி.ஏ. (ஜீவஹிம்சை நிவாரணச்சங்கம்) யின் அங்கத்தினர்களோ என்னவோ, அத்தனையையும் சகித்துக் கொண்டிருப்பார்கள்...

சந்தில் திரும்பிப் பார்த்தால் அலமுவின் ராஜ்யம் நடந்து கொண்டிருந்தது.

"ஏட்டி, என்ன! நீயோ உன் லட்சணமோ!" என்று ஆரம்பித்தார் முருகதாசர்.

ஒரு ரிக்ஷா வண்டி. ஏர்க்கால் பக்கத்தில் வண்டிக்காரன் உட்கார்ந்து கொண்டிருக்கிறான். அலமு, ஒரு சுண்டெலி மாதிரி, ஜம்மென்று மெத்தையில் உட்கார்ந்திருக்கிறாள். ரிக்ஷாக்காரனுடன் ஏதோ நீண்ட சம்பாஷணை நடந்து கொண்டிருந்தது போலும்!

"ஏட்டி!" என்றார் முருகதாசர் மறுபடியும்.

"இல்லையப்பா! நீ இனிமே என்னை அலமுன்னு கூப்டுவேன்னியே!" என்று சொல்லிக்கொண்டே, வண்டியிலிருந்து இறங்கப் பிரம்மப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தீப்பெட்டி எங்கட்டீ?'' என்றார் முருகதாசர் மறுபடியும்.

''கடைக்காரன் குடுக்க மாட்டேங்றான். அப்பா!''

''குடுக்காதெ போனா நேரே வீட்டுக்கு வாரது! இங்கே என்ன இருப்பு?''

''அப்படி கேளுங்க சாமி! நம்ம கொளந்தென்னு மெரட்டாமே சொல்லிப் பார்த்தேனுங்க. வீட்டுக்கு வண்டியிலே கொண்டாந்துவுடணுமுண்ணு மொண்டி பண்ணுதுங்க, எனக்குக் காலுலே சுளுக்கு. அந்தச் சின்னாம் பயலே காணும்...'' என்று நீட்டிக் கொண்டே போனான் ரிக்ஷாக்காரன்.

''அப்பா, அவன் பங்கஜத்தெ மாத்திரம் கூட்டிக்கிட்டே போரானே'' என்றாள் அலமு. பங்கஜம் எதிர்வீட்டு சப்ரிஜிஸ்திரார் குழந்தை. அது ரிக்ஷாவிலும் போகும்! மோட்டாரிலும் போகும். அந்த விஷயம் ரிக்ஷாவுக்குத்தான் புரியுமா, குழந்தைக்குத்தான் புரியுமா...?

''அலமு! ராத்திரிலெ கொழந்தைகள் ரிக்ஷாவிலே போகப்படாதுடீ! எறங்கி வா!'' என்று குழந்தையைத் தூக்கிக் கொண்டு. வாடிக்கைக் கடைக்காரனிடம் சென்றார் முருகதாசர்.

பிள்ளையவர்கள் கடையை எட்டு முன்பே, கடைக்காரன் ''சாமி! இந்தமாதிரியிருந்தாக் கட்டுமா..? போனமாசத்திலே தீர்க்கலியே! நானும் சொல்லிச் சொல்லிப் பார்த்தாச்சு. பாக்கியை முடிச்சு, கணக்கெத் தீர்த்திடுங்க! எனக்குக் குடுத்துக்கட்டாது. நான் பொளைக்க வந்தவன்!'' என்றான்.

''நானும் பிழைக்க வந்தவன்தான். எல்லாரும் சாகவா வருகிறார்கள்! மின்னெ பின்னெதான் இருக்கும். நான் என்ன கொடுக்கமாட்டேன் என்று சொல்லுகிறேனா?''

''போங்க சாமி அது ஒண்ணு தான் பாக்கி! ரூ. 2-5-4 ஆச்சு: எப்பவரும்?''

''தீப்பெட்டியைக் குடு சொல்றேன்!''

''பெட்டிக்கென்ன பிரமாதம்! இந்தாருங்க. எப்ப வரும்?''

''எப்பவா? சம்பளம் நாளைக்குப் போட்ருவாங்கன்னு நினைக்கிறேன்! நாளை இல்லாவிட்டால் திங்கக்கிழமை.''

''திங்கக்கிழமெ நிச்சயந்தானே? நான் சீட்டுக் கட்டணும்!'' என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சரி பார்க்கிறேன்!'' என்று திரும்பினார் தாசர்.

''பார்க்கிறேன்னு சொல்ல வேண்டாம். நிச்சயமாக வேண்டும்!''

ஒரு கவலை தீர்ந்தது... அதாவது திங்கட்கிழமை வரை.

பாதி வழியில் போகையில். ''அப்பா!'' என்றது குழந்தை.

அவர் எதையோ நினைத்துக் கொண்டிருந்ததால், தன்னையறியாமல் கொஞ்சம் கடினமாக, ''என்ன! '' என்றார்.

''நீதான் கோவிச்சுக்கிறியே, அப்பா! நான் சொல்லமாட்டேன், போ!''

''கோவம் என்னட்டி கோவம்! சும்மா சொல்லு''

''அதோ பார், பல்லு மாமா!''

முருகதாசரின் நண்பர் சுப்பிரமணிய பிள்ளைக்குக் கொஞ்சம் உயர்ந்த பற்கள். அவை, வெளியே நீண்டு கொண்டு, தமது இருப்பை அநாவசியமாக உலகத்திற்கு அறிவித்துக் கொண்டிருந்தன. அதனால் அலமு அவருக்கு இட்ட காரண இடுகுறிப் பெயர் அது.

''எங்கட்டி!''

''அதோ பார், வீட்டு நடேலே! என்னை எறக்கிவிடப்பா!'' என்று அவரது கையிலிருந்து வழுகி, விடுவித்துக் கொண்டு, வீட்டிற்கு ஓட ஆரம்பித்தது.

''மெதுவா ! மெதுவா !'' என்றார் பிள்ளை! குழந்தையா கேட்கும்?

''மாட்டேன் !'' என்றது. அதற்கப்புறம் ஏக களேபரம்.

பாவாடை தடுக்கியதோ என்னமோ, அலமு வலுக்கட்டாயமாக அங்கப் பிரதட்சணம் செய்ய ஆரம்பித்தாள்.

பிள்ளையவர்கள் ஓடிப்போய்க் குழந்தையை வாரி எடுத்தார்.

ஆனால் இவர் பதட்டத்திற்கு ஏற்ப. அங்கு குழந்தைக்கு ஒன்றும் ஏற்படவில்லை.

''தோளுக்கு மேலே தொண்ணூறு, தொடச்சுப்பாத்தா ஒண்ணுமில்லே!'' என்று பாடிக்கொண்டு குழந்தை எழுந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்ன ஸார், குழந்தையை நீங்க இப்படி விடலாமா?'' என்று சொல்லிக்கொண்டே சுப்பிரமணியம் அவர்கள் பக்கம் வந்தார்.

''என்ன ஸார், செய்யட்டும்! என்ன சொன்னாலும் கேட்கிறதில்லை என்ற உறுதி மனசிலே ஏறிப்போயிருக்கு. வெளியே புறப்பட்டாச்சா, அப்புறம் தேடிக்கொண்டு பின்னோட பத்துப்பேர். இவளைக் கடைக்கனுப்பிச்சுட்டா தாயார். இவ்வளவு நேரம் அந்த ரிக்ஷாக்காரனோட தர்க்கம்- என்ன செய்கிறது! வாருங்கள் ஸார்!, உள்ளே! ஒன் மினிட்! விளக்கை ஏத்துகிறேன்.''

குழந்தை அலமு அதற்குள் வீட்டிற்குள், ''பல்லு மாமா வந்துவிட்டார்!'' என்று மெதுவாக உச்சஸ்தாயியில் விளம்பரம் செய்து கொண்டு ஓடிவிட்டாள்.

''குழந்தை துருதுருவென்று வருகிறதே! பள்ளிக்கூடத்திற்காவது அனுப்பக்கூடாதா'' என்றார் நண்பர்.

''ஆமாம் ஸார், தொந்தரவு சகிக்கலே. அங்கேதான் கொண்டு தள்ளணும். வயசு கொஞ்சம் ஆகட்டுமே என்று பார்க்கிறேன் '' என்றார் முருகதாசர், விளக்குத் திரியை உயர்த்திக்கொண்டே.

''நேத்து பீச்சுக்குப் போயிருந்தேன்! சுந்தரத்தைப் பார்த்தேன்...'' என்று ஆரம்பித்தார் சுப்பிரமணியபிள்ளை.

''அந்த ராஸ்கல் வந்துட்டானா!'' என்றைக்கும் அவன் தொல்லை தான் பெரிய தொல்லையாக இருக்கிறது. இங்கே வந்தான்னா ஆபீஸுக்கு வந்து யாருக்காவது வத்தி வச்சுட்டுப்போயிடரது... மின்னே வந்தப்போ என்ன எழவு சொன்னானோ, அந்த ஆர்ட்டிஸ்ட் 'பதி' இருந்தானே, அவனுக்குச் சீட்டுக் கொடுக்க வழி பண்ணிட்டான்...'' என்று படபடவென்று பேசிக்கொண்டே போனார். முருகதாசர்.

''அப்படிப் பார்த்தா உலகத்திலேயே யார்தான் ஸார் நல்லவன்! அவன் உங்களைப்பத்தி ரொம்பப் பிரமாதமாக அல்லவா கண்ட இடத்திலெல்லாம் புகழ்ந்து கொண்டிருக்கிறான்?''

''சவத்தெத் தள்ளுங்க, ஸார்! பேன் பார்த்தாலும் பார்க்கும். காதை அறுத்தாலும் அறுக்கும். அவன் சங்காத்தமே நமக்கு வேண்டாம்... நீங்க என்ன சொல்ல வாயெடுத்தீர்கள்?''

''அதுதான், உங்களைப் பத்தித்தான் ஒரு இங்கிலீஷ்காரனிடம் பிரமாதமாகப் பேசிக்கொண்டிருந்தான்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இவ்வளவுதானா! கதையை எழுதரேன், அல்லது கத்தரிக்காயை அறுக்கிறேன், இவனுக்கென்ன...?''

அதே சமயத்தில் வெளியிலிருந்து, ''முருகதாஸ்! முருகதாஸ்!'' என்று யாரோ கூப்பிட்டார்கள்.

''அதுதான்! அவன்தான் வந்திருக்கிறான் போலிருக்கிறது! பயலுக்கு நூறு வயசு...''

''சைத்தான், நினைக்குமுன்னால் வந்து நிற்பான், என்பதுதான்!'' என்று முணுமுணுத்தார் முருகதாசர்.

பிறகு அவர் எழுந்து நின்று வெளியில் தலையை நீட்டி, ''யாரது?'' என்றார்.

''என்ன! நான் தான் சுந்தரம். இன்னும் என் குரல் தெரியவில்லையா?'' என்று உரத்த குரலில், கடகடவென்று சிரித்துக்கொண்டு உள்ளே நுழைந்தார் வந்தவர். அவரது சிரிப்புக்கு இசைந்தபடி காலில் போட்டிருக்கும் ஜோடு தாளம் போட்டது.

''என்ன, சுந்தரமா, வா! வா! இப்பொத்தான் உன்னைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். நீயும் வந்தாய்! காப்பி போடச் சொல்லட்டுமா...?'' அலமு! அலமு! என்று உரக்கக் கூவினார் முருகதாசர்.

''எங்கிருந்தோ, ''என்னப்பா!'' என்று அலமுவின் குரல் வந்தது.

''அம்மாவை மூணு கப் காப்பி போடச் சொல்லு. சீக்கிரம் ஆகணும்!''

''நீ என்ன பத்திரிகையை விட்டு விட்டாயாமே! இப்பத்தான் கேள்விப்பட்டேன்.''

''வயிற்றுப் பிழைப்பிற்கு எதில் இருந்தால் என்ன? சீலைப் பேன் குத்துகிறதும் ஒரு 'பிஸினஸ்' ஆக இருந்து, அதில் ஒரு 'சான்ஸ்' கிடைத்தால், அதையும் விட்டா வைக்கிறது? நான் பத்திரிகையை விட்டுவிட்டா, கதை எழுதாமல் இருந்துவிடுவேனா? ஒரு பெரிய நாவலுக்குப் 'பிளான்' போட்டிருக்கேன். தமிழன்களுக்கு அதிர்ஷ்டம் இருந்தால், எனக்குக் காகிதம் வாங்கவாவது காசு கிடைக்கும். அதில 'சென்ட்ரல் ஐடியா' என்ன தெரியுமா?...''

''நீங்க நேற்றுப் பொருட்காட்சிக்குப் போனீர்களாமே?'' என்று பேச்சை மாற்ற முயன்றார் சுப்பிரமணிய பிள்ளை. இந்த விஷயத்தைத் தொட்டுவிட்டால், முருகதாசர், கீறல் விழுந்த கிராமபோன் பிளேட்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மாதிரி, விடாமல் திருப்பித் திருப்பி அதையே கதைத்துக் கொண்டிருப்பார்.!

"அப்பா! காப்பியாயிட்டுது. நீதான் வந்து எடுத்துக்கிட்டுப் போகணும். சுடுது!" என்று சொல்லிக்கொண்டு, நிலைப்படி இரண்டு பக்கத்தையும் தொட்டவண்ணமாய், ஒற்றைக்காலை ஒட்டிக்கொண்டு நின்றாள் அலமு.

"அம்மா எங்கே?"

"அம்மா சாதத்தெ வடிச்சிக்கிட்டிருக்கா, அப்பா!"

"சரி! இதோ வாரேன், போ!"

"வர்ரேன்னா, போட்டீ உள்ளே!"

"காப்பி ஆறிப்போயிடும், அப்பா!"

"இதோ, ஒரு நிமிஷம்!" என்று சொல்லிக்கொண்டு, உள்ளே சென்றார்.

"மாமா! நீ என்ன கொண்டாந்தே?" என்று கேட்டுக்கொண்டு சுப்பிரமணியபிள்ளை மடியில் உட்கார்ந்து கழுத்திலிருக்கும் நெக் டையைப் பிடித்து விளையாட ஆரம்பித்தாள் அலமு.

"அதெப் பிடித்து இழுக்காதே! மாமாவுக்கு கழுத்து வலிக்கும்!" என்றார் சுந்தரம்பிள்ளை.

"வலிக்காதே!" என்று மறுபடியும் ஆரம்பித்தாள்.

முருகதாசரும், மேல் துண்டின் உதவியால் ஒரு செம்பை ஏந்திய வண்ணம், உள்ளே நுழைந்தார்.

"என்னப்பா, மூணு டம்ளர் கொண்டாந்தே! எனக்கில்லையா?"

"உனக்கென்னட்டி இங்கே! அம்மா கூடப் போய்ச் சாப்பிடு."

"மாட்டேன்" என்று ஒரு டம்ளரை எடுத்து வைத்துக்கொண்டது குழந்தை.

முருகதாசர் காப்பியை ஆற்றி, சுந்தரம் கையில் ஒரு டம்ளரைக் கொடுத்தார்.

சுந்தரம் வாங்கி மடக் மடக்கென்று மருந்து குடிப்பது போல் குடித்துவிட்டு, "காப்பி வெகு ஜோர்" என்று சர்டிபிகேட் கொடுத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றொரு டம்ளர் சுப்பிரமணிய பிள்ளையிடம் கொடுக்கப்பட்டது.

''மாமா! எனக்கில்லையா!'' என்று அவரிடம் சென்று ஒண்டினாள் அலமு.

''வாடி, நாம் ரெண்டுபேரும் சாப்பிடுவோம்'' என்றார் முருகதாசர்.

''மாமாகூடத்தான்!'' என்றது குழந்தை. சுப்பிரமணிய பிள்ளை கையிலிருந்த டம்ளரில் அலமுவைக் குடிக்கச் செய்தார்.

பாதியானதும் ''போதும்'' என்றது குழந்தை.

''இந்தாருங்க ஸார்!'' என்று மற்ற டம்ளரையும் நீட்டினார் முருகதாசர்.

''வேண்டாம் வேண்டாம்! இதுவே போதும்!'' என்றார் சுப்பிரமணியபிள்ளை.

''நான்சென்ஸ்!'' என்று சொல்லிவிட்டு, குழந்தை எச்சிற்படுத்தியதைத் தாம் வாங்கிக்கொண்டார் தாசர்.

''நேரமாகிறது, மவுண்டில் ஒரு நண்பரைப் பார்க்கவேண்டும்!'' என்று எழுந்தார் சுந்தரம். ''அதற்குள்ளாகவா? வெற்றிலை போட்டுக் கொண்டு போகலாம்!'' என்றார் முருகதாசர்.

''கையில் எடுத்துக் கொண்டேன். நேரமாகிறது! அப்புறம் பார்க்கிறேன்!'' என்று சொல்லிக் கொண்டு வெளியேறினார் சுந்தரம்.

கையில் இருந்த புகையிலையை வாயில் ஒதுக்கிவிட்டு, சிறிது சிரமத்துடன், தமக்கு நேரமாவதைத் தெரிவித்துக் கொண்டார் சுப்பிரமணியபிள்ளை.

தொண்டையைச் சிறிது கனைத்துக் கொண்டு, ''சுப்பிரமணியம், உங்களிடம் ஏதாவது சேஞ்ச் இருக்கிறதா? ஒரு மூன்று ரூபாய் வேண்டும்!'' என்றார் முருகதாசர்.

''ஏது அவசரம்?''

''சம்பளம் போடலே, இங்கு கொஞ்சம் அவசியமாக வேண்டியிருக்கிறது... திங்கட்கிழமை கொடுத்துவிடுகிறேன்!''

''அதற்கென்ன...?'' பர்ஸை எடுத்துப் பார்த்துவிட்டு, ''இப்போ என் கையில் இதுதான் இருக்கிறது!'' என்று ஓர் எட்டணாவைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தார் சுப்பிரமணியம்.

''இது போதாதே!'' என்று சொல்லி, அதையும் வாங்கி வைத்துக் கொண்டார் முருகதாசர்.

''அப்போ..'' என்று மீண்டும் ஏதோ ஆரம்பித்தார்.

''பார்ப்போம் ! எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கிறது'' என்று சுப்பிரமணியமும் விடை பெற்றுச் சென்றார்.

முருகதாசர், தமது ஆஸ்தான அறையின் சிம்மாசனமான பழைய கோரைப்பாயில் உட்கார்ந்துகொண்டு, அந்த எட்டணாவைத் திருப்பித் திருப்பிப் பார்த்துக் கொண்டு, நீண்ட யோசனையில் ஆழ்ந்திருந்தார்.

''அங்கு என்ன செய்யறீங்க?'' என்றது மனைவியின் குரல்.

''நீதான் இங்கே வாயேன்!''

''கமலம் உள்ளே வந்து. ''அப்பாடா'' என்று உட்கார்ந்தாள். அவர் கையில் இருக்கும் சில்லறையைப் பார்த்துவிட்டு, ''இதேது?'' என்றாள்.

''சுப்பிரமணியத்திடம் வாங்கினேன்.!''

''உங்களுக்கும்... வேலையில்லையா?'' என்று முகத்தைச் சிணுங்கினாள் கமலம். பிறகு திடீரென்று எதையோ எண்ணிக்கொண்டு,'' ஆமாம், இப்பத்தான் நினைப்பு வந்தது. நாளைக்குக் காப்பிப் பொடி இல்லை. அதெ வச்சு வாங்கி வாருங்களேன்!'' என்றாள்.

''அந்தக் கடைக்காரனுக்காக அல்லவா வாங்கினேன்! அதைக் கொடுத்துவிட்டால்?''

''திங்கட்கிழமை கொடுப்பதாகத்தானே சொன்னீர்களாம்!''

''அதற்கென்ன இப்பொழுது?''

''போய்ச் சீக்கிரம் வாங்கி வாருங்கள்!''

''திங்கட்கிழமைக்கு?''

''திங்கட்கிழமை பார்த்துக்கொள்ளுகிறது!''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5

புதுமைப்பித்தன் சிறுகதைகள் ஒரு பார்வை

தமிழ்ச் சிறுகதை இலக்கியத்தில் அரிய சாதனைகள் புரிந்துள்ள புதுமைப்பித்தன் என்ற சொ.விருத்தாசலம் தமிழ் வசனநடையிலும் பிரமிக்கத்தக்க அற்புதங்களைச் சாதித்திருக்கிறார். கருத்தின் வேகத்தையே பிரதானமாகக் கொண்டு வார்த்தைகளை வெறும் தொடர்புச் சாதனமாக மட்டும் கொண்டு தாவித் தாவிச் செல்லும் நடையொன்றை அவர் கையாண்டார். அவரது மணிக்கொடிக் காலக் கதைகளில் இதனை மிகுதியாகக் காணலாம்.

புதுமைப்பித்தன் பல்வேறு விதமான கதைகளை எழுதியுள்ளார். பயங்கரக் கதை, சமூகசித்திரம், புராணக் கற்பனையை ஆதாரமாகக் கொண்ட புதுக்கற்பனை, கேலிக்கதை, தத்துவக்கதை, கனவுக்கதை, வெறும்கதை இப்படி எத்தனையோ விதமான கதைகளை அவர் எழுதியிருக்கிறார். ஒவ்வொன்றும் ஒவ்வொரு கோணத்தில் பார்க்கப்பட்டு வெவ்வேறு வகையான விதங்களில் சொற்சித்திரமாகப் படைக்கப்பட்டுள்ளது. கதைக்கு ஏற்ப, உணர்ச்சிகளுக்கேற்ப, கதாசிரியரின் வீச்சுக்கும் கதை சொல்லிச் செல்லும் போக்கிற்கும் ஏற்றாற்போல நடையும் பல்வேறு வகையில் வளைந்து, நெளிந்து, துள்ளிப் பாய்கிறது. உயிர்த் துடிப்புடன் விளங்குகிறது.

சிற்பியின் நரகம், பிரம்மராட்ஸ், வாழ்க்கை, கலியாணி, அகல்யை போன்ற அவருடைய 'மணிக்கொடி' காலக்கதைகளிலே இவ்வுண்மையை நன்குணரலாம்.

'கற்பனை ஆழமும், சிந்தனை வீச்சும், உணர்ச்சி வேகமும், அனுபவ மிகுதியும், கவி உள்ளமும் பெற்றிருக்கக் கூடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசனகர்த்தாவுக்கும் பாஷை அடி பணிகிறது. உணர்ச்சியின் மாறுதலுக்கு ஏற்றபடி நடையும் கதிபெற்று மாறுகிறது' என்பதைப் புதுமைப்பித்தனின் அன்று இரவு, காஞ்சனை, செல்லம்மா, சாபவிமோசனம், கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும் ஆகிய கதைகள் நிரூபிக்கின்றன.

வாக்கியங்களில் சுற்றி வளைத்தும் திருகல் முறுகல் பண்ணியும் சொற்களை வைத்து விளையாடுகிற ஆசை, புதுமைப்பித்தனின் பிற்காலக் கதைகளில் ஒளிவீசக் காணலாம்.

''மருந்து என்ற சிறிய தடையுத்தரவிற்குப் பயந்து இத்தனை நாட்கள் பதுங்கியிருந்த வியாதிகள் மீண்டும் உறவாட ஆரம்பித்தன.. (செல்லம்மாள்)

''ஐயோ அது புன் சிரிப்பா! எலும்பின் செங்குருத்துகள் ஐஸ் ஈட்டியைச் செருகியது மாதிரி என்னைக் கொன்று புரட்டியது அது." (காஞ்சனை)

''வர்ணக் கடதாசியொட்டிய ஜப்பான் விளக்கு மாதிரியான சுடாத புகழ் வெளிச்சத்தில் உடம்பைக் கொஞ்சம் காய வைத்துக் கொண்டேன்." (புரட்சி மனப்பான்மை)

இம்மாதிரி வாக்கியங்கள் புதுமை பண்ண வேண்டும் என்ற புதுமைப் பித்தனின் தாகத்தின் வெளிப்பாடாகப் படைக்கப்பட்டவை எனலாம். உவமைகளையும் உருவகங்களையும் புதுமைப்பித்தன் தனது கதைகளில் தாராளமாகக் கையாண்டுள்ளார்.

'வயது ஐம்பதுக்கு மேலாகியும் மார்க்கண்ட வாலிபம் சிறிது அசுர மோஸ்தரில்."

''வாலிபத்தில் பெண்கள் என்றால் அர்ஜுன ரசனை"

''ஸ்டோர் மானேஜர் கண்ணப்ப நாயனார் ரகத்தைச் சேர்ந்த பேர்வழி. தனது இஷ்ட தெய்வத்திற்குத் தான் ருசித்துப் பார்த்துத்தான் சமர்ப்பிப்பார் - பெண்களை".

''வலுவற்றவனின் புத்திக்கு எட்டாது நிமிர்ந்து நிற்கும் சங்கரனுடைய சிந்தனைக்கோயில் போல் திடமற்றவர்களின் கால்களுக்குள் அடைபடாத கைலயங்கிரியைப் பனிச் சிகரங்களின் மேல் நின்று தரிசித்தார்கள்.

''தமது துன்பச் சுமையான நம்பிக்கை வறட்சியை உருவகப்படுத்தின பாலையைத் தாண்டினார்கள். தம் உள்ளம் போலக் கொழுந்து விட்டுப் புகை மண்டிச் சாம்பலையும் புழுதியையும் கக்கும் எரிமலைகளை வலம் வந்து கடந்தார்கள்."

தமது மனம்போல ஓயாது அலை மோதிக்கொண்டு கிடக்கும் சமுத்திரத்தின் கரையை எட்டிப் பின்னிட்டுத் திரும்பினார்கள்.

தம் வாழ்வின் பாதை போன்ற மேடுபள்ளங்களைக் கடந்து வந்து விட்டார்கள்."

(சாபவிமோசனம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி நேரான நடையில் அழகாக அடுக்கிச் செல்லும் புதுமைப்பித்தன் சிக்கல்களும் பின்னல்களும் கொண்ட சொற்கோலம் தீட்டுவதிலும் ஆர்வம் காட்டினார். புதுமைப்பித்தனின் வாழ்நாளில் அவருடைய கடைசிச் சிறுகதையாகக் 'கயிற்றரவு' பிரசுரமாயிற்று. ஒரு மனிதனின் எண்ண ஓட்டத்தையும் அவன் வாழ்விலும் அவனது சுற்றுப் புறங்களிலும் காலம் நிகழ்த்திய சித்துகளையும் குறித்து அவன் நினைப்பதையும் அவனுடைய முடிவையும் இக்கதை வர்ணிக்கிறது. இதில் பெரும்பகுதி நனவோட்ட முறைப்படி எழுதப்பட்டுள்ளது.

இந்த உத்தியின் தனித்தன்மையை உணர்ந்து வெற்றிகரமாகக் கையாண்டிருப்பவர்களில் புதுமைப்பித்தனுக்கே முதலிடம் உரியதெனலாம். திருநெல்வேலித் தமிழை- அவ்வட்டாரத்தில் விசேடமாகத் திகழும் பழகு மொழியை- திறமையாக எழுத்தில் கொண்டுவந்து உரை நடைக்கு ஒரு தனித்துவம் சேர்த்த பெருமை இவருக்குண்டு.

புதுமைப்பித்தன் கதைகளைத் தொகுத்து நோக்கின் பின்வரும் பண்புகளை அவரது படைப்புக்களில் காணலாம்.

1. பெரும்பாலான கதைகள் யதார்த்தப் பண்புடையன.
2. பழைய கதைகளைப் புதிய நோக்கில் பார்ப்பன.
3. பேச்சுமொழியை நல்ல திறனுடன் கையாண்டமை.
4. யாரும் தொடாத, வெளிச்சத்துக்கு வராத விடயங்களைக் கலை அழகோடும் அங்கதச் சுவையோடும் அறிமுகப் படுத்துதல்.
5. சாதி வேற்றுமை, விதவைக் கொடுமை, இளமை மணம், பொருந்தாத் திருமணம், மூடநம்பிக்கைகள் போன்றவற்றைச் சாடும் திறன்.

இப்பண்புகளைப் பிரதிபலிக்கும் வகையிலேயே புதுமைப்பித்தன் தனது பெரும்பாலான சிறுகதைகளைப் படைத்துள்ளார். சிறுகதை 'வாழ்க்கையின் சாளரம்' என்றார் புதுமைப்பித்தன். 'சிறுகதை மன்னன்' எனப் போற்றப்பட்ட அவரது கதைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் சிறந்தனவாகவே மிளிர்கின்றன.

'ஒருநாள் கழிந்தது என்னும் கதை சமூக உணர்வுடைய கதைக்கு நல்லதோர் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. ''பொன்னகரம்'' என்னும் கதையில் அவரது தீவிர போக்கைக் காண முடிகிறது. கிண்டலும் கேலியும் கலந்த அவரது உரைநடைச் சிறப்பை, நகைச்சுவை உணர்வைக் கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும் என்னும் கதை வெளிக்காட்டுகிறது. 'அகலிகை' , 'தொண்டர் நாதன் தூது' போன்ற பழைய புராணக் கதைகளைப் புதிய நோக்கில் புதுமை காணும் வகையில் அவர் படைத்துள்ளமையை உணரலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அன்றிரவு', 'சாபவிமோசனம்', 'மகாமசானம்' ஆகிய கதைகள் சூழ்நிலை, பாத்திரவர்ணனை, கதாபாத்திரங்களின் மனநிலை, உணர்ச்சிகளின் சித்திரிப்பு என்பனவற்றை உயிர்த்துடிப்புடன் எடுத்துக் காட்டுகின்றன.

புதுமைப்பித்தன், சிறுகதைகள் படைப்பதோடு மட்டும் நின்றுவிடவில்லை. 90 சிறுகதைகளைப் படைத்ததோடு கவிதை, கட்டுரை, மொழிபெயர்ப்பு, நாடகம், சினிமா என்னும் பல்வேறு துறைகளிலும் முத்திரை பதித்துள்ளார். அவரது உலகச் சிறுகதைகள் மொழிபெயர்ப்பு அற்புதமானது. உலகின் சிறந்த சிறுகதைகளைத் தமிழ் வாசகர்கள் படித்து மகிழ வழிசமைப்பது. புதுமைப்பித்தன் பன்முக ஆற்றல் வாய்ந்த அற்புத எழுத்தாளர். அவரது ஆற்றல்களுக்கு நிகரேயில்லை.

சுருங்கக் கூறின்
புதுமைப்பித்தன் சிறந்த சிறுகதைச் சிற்பி,
தலைசிறந்த கட்டுரையாளர்,
நாடகாசிரியர்,
கவிஞர்,
மொழிபெயர்ப்பாளர்
எனலாம். 42 ஆண்டுகளே அவர் இவ்வுலகில் வாழ்ந்த போதிலும் அவரது படைப்புக்கள் சாகா வரம் பெற்றனவாகத் திகழ்கின்றன. அவை என்றும் வாசகர் நெஞ்சங்களில் புதுமைப்பித்தனை நினைவூட்டிக் கொண்டேயிருக்கும் என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6

கு.ப.ராஜகோபாலன்

(1902-1944)

மணிக்கொடி, சுதந்திரச்சங்கு முதலான பல இதழ்களில் சிறுகதைகள் படைத்தவர். ஆண்-பெண் உறவில் காணப்படும் பல்வேறு நுட்பங்களை உள்முகப் பார்வையுடன் அணுகி அவற்றுக்குச் சிறுகதை வடிவம் தந்தவர். பாலுணர்வை வெறும் பாலுணர்வாகக் காட்டாமல் மனித வாழ்வோடு இணைத்துக் காணுகிற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மை இவருடைய கதைகளின் சிறப்பாகும். மனித வாழ்க்கையை நெறிப்படுத்துவதற்காக உண்டாக்கப்பட்ட விதிகள் எதிர்வினை கொண்டு மனிதனைத் தடம் புரளச் செய்கின்ற தன்மை, அதற்கான உளவியல் மற்றும் வாழ்வியல் காரணங்கள் முதலியவை கு.ப.ரா.வின் கதைகளில் புலப்படுகின்றன.

"மனிக்கொடி" குழுவைச் சேர்ந்த கு.ப.ரா.வின் உரைநடை தனித்துவமானது. கருப்பொருளுக்கு ஏற்றவகையில் சொற்களையும் வார்த்தைகளையும் நுட்பமாகப் பயன்படுத்துவதில் வல்லவர்.

மென்மை, மௌனம், விடயத்தை உறுத்தாமல் உள்தள்ளிவிடும் லாவகம் ஆகியவை கு.ப.ரா.வின் பண்புகள். எதைச் சொன்னாலும் மென்மையாகச் சொல்லும் தன்மை கு.ப.ரா.வின் முக்கிய பண்பு. அவரது படைப்புக்களில் மட்டுமன்றிப் பிற எழுத்துக்களிலும், விவாதங்களிலும் கூட இந்தப் பண்பு பெரிதாகத் தெரியும். இவரது எழுத்தில் குறிப்பிடப்பட வேண்டிய மற்றும் ஒரு முக்கிய பண்பு எதையும் உறுத்தாமல் சொல்லுவதாகும்.

'ஆற்றாமை', 'விடியுமா', 'திரை', 'மோகினி', 'மாயை', 'புனர்ஜென்மம்', 'காணாமலே காதல்', 'கனகாம்பரம்', 'சிறிது வெளிச்சம்' முதலிய சிறுகதைகள் 'துர்க்கேச நந்தினி', 'தேவி சௌதுராணி', 'இரட்டை மனிதன்', முதலிய மொழி பெயர்ப்புக்கள், 'வேரோட்டம்' என்ற நாவல், 'அகலிகை' என்ற நாடகம் முதலியவை இவரது படைப்புக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7

கனகாம்பரம்

"மணி!" என்று வாசலில் நின்று கொண்டே ராமு கூப்பிட்டான். நண்பன் வீட்டில் இருக்கிறானோ இல்லையோ என்று அவனுக்குச் சந்தேகம்.

"எங்கேயோ வெளிலே போயிருக்கார். நீங்க யாரு?" என்று மணியின் மனைவி கதவண்டை நின்றுகொண்டு மெல்லிய குரலில் கேட்டாள்.

ராமுவுக்குக் கொஞ்சம் தூக்கி வாரிப்போட்டது. மணியும் அவனும் கலாசாலையில் சேர்ந்து படித்தவர்கள். மணியின் மனைவியைப் பற்றி அவனுக்கு அதிகமாகத் தெரியாது. அவளை அவன் அதுவரையில் பார்த்ததுகூட இல்லை. புதுக்குடித்தனம் நடத்த அவள் சென்னைக்கு வந்து ஒரு மாதந்தான் ஆகியிருந்தது. அந்தமாதம் முழுதும் ராமு சென்னையில் இல்லை. அதற்கு முன் சாரதாவும் அவனைப் பார்த்ததில்லை.

ராமுவும் மணியைப்போல மிகவும் முற்போக்கான கொள்கைகள் உடையவன்தான். கல்லூரி விவாதங்களில் பேசியபொழுது, ஆணும் பெண்ணும் சரிநிகராகப் பழக வேண்டுமென்றும், பெண்களின் முன்னேற்றம் மிகவும் அவசியமான சீர்திருத்தமென்றும் ஆவேசத்துடன் முழங்கி வந்தான். ஆனால் அந்தக் கொள்கைகளை நடைமுறையில் கொண்டு வந்த பொழுது அவன் கலவரம் அடைந்து விட்டான்.

முன்பின் பழக்கமின்றி மணியின் மனைவி தன்னுடன் பேசியது அவனுக்கு வியப்பாக இருந்தது. அவன் அதைச் சிறிதும் எதிர்பார்க்கவே இல்லை. 'வீட்டில் மணி இல்லாவிட்டால் பதில் வராது. கொஞ்சநேரம் நின்று பார்த்துவிட்டுப் போய்விடுவோம்' என்றே அவன் ஒரு குரல் கூப்பிட்டுப் பார்த்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணியின் மனைவி சாரதா படித்த பெண்ணும் அல்ல; அசல் நாட்டுப்புறம். எந்தப் பக்கத்திலும் ரெயில் பாதைக்கே இருபது கல் தொலைவிலுள்ள சோழ நாட்டுக் கிராமத்துப் பெரிய பண்ணையாரின் மகள் அவள். அவளுடைய நடை உடை பாவனைகளிலும், அந்தச் சில கணங்களில் அவன் கண்களில் பட்டமட்டில் ஒரு விதப் புதுமையும் காணவில்லை.

விலையுயர்ந்த பெங்களூர்ப் பட்டுச் சேலையை நேர்த்தியாகக் கொசுவம் விட்டுக் கட்டிக் கொண்டிருந்தாள். அதற்கேற்ற நிறம் கொண்ட பழைய மாதிரி ரவிக்கையே அணிந்திருந்தாள். தலைமயிரை நடுவே வகிரெடுத்துத்தான் பின்னிக்கொண்டிருந்தாள். பின்னல் கூட நவநாகரிகப் போக்குப்படித் 'தொள தொள' வென்று காதை மூடிக்கொண்டு இருக்கவில்லை. பின்னலை எடுத்துக் கட்டிக் கொண்டிருந்தாள்.

நெற்றியில் முழு நிலவுபோலப் பெரிய குங்குமப் பொட்டு இருந்தது. உடம்பின் மேலிருந்த வைரங்கள் பூத்துக் கொட்டிக் கொண்டிருந்தன. மூக்கில் புல்லாக்கு இருந்தது. கைக்காரியமாக இருந்தவள் அவசரமாக யாரென்று பார்த்துப் பதில் சொல்ல வந்தாள் என்பது அவளது தோற்றத்திலிருந்தே தெரிந்தது.

அப்பேர்ப்பட்டவள் தன்னுடன் வந்து பேசினதும் ராமு மனம் தடுமாறிப் போனான்.

ஒரு பெண் வந்து தன்னுடன் பேசிவிட்டாள் என்பதால் அவன் கூச்சமடையவில்லை. கல்லூரியிலும் வெளியிலும் படித்த பெண்கள் பலருடன் பேசிப் பழகினவன்தான் அவன். அது அவனுக்குப் பழக்கமாகியிருந்தது. இந்தப் படிக்காத பெண் தன்னுடன் பேசினதுதான் அவனுக்குக் குழப்பத்தை உண்டாக்கி விட்டது! படித்த பெண்கள் கூடப் புது மனிதர்களிடம் பேசுவது எளிதல்லவே! அப்படியிருக்க, நவநாகரிக முறையில் ஆண்களுடன் பழகுவது என்பதே அறியாத இடத்தில் பிறந்து வளர்ந்த பெண் வேறு ஆடவனுடன் பேசுவதென்றால், அது ராமுவுக்கு விபரீதமாகப்பட்டது.

ஆனால் அவள் பேசிய சொற்கள் மெல்லிய தொனியுடன் தான் வெளிவந்தன. அவனது முகத்தைப் பார்த்துக் கூடப் பேசவில்லை அவள். தலை குனிந்த வண்ணமாகவே இருந்தாள். இருந்தாலும் அவன் மனம் என்னவோ சமாதானப்படவில்லை.

"நான்... நான்... மணியின் சிநேகிதன்" என்று சொல்லி மேலே என்ன சொல்லுவது என்பது தெரியாமல் தத்தளித்தான்.

"இதோ வந்துவிடுவார். உள்ளே வந்து உட்காருங்கள்" என்றாள் சாரதா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைக் கேட்டதும் உண்மையிலேயே ராமு திகைத்துப் போனான். தலை கிர்ரென்று சுற்றிற்று. ஏதோ தப்புச் செய்துவிட்டவன்போலச் சுற்று முற்றும் பார்த்தான். ஒரு சிறு தனி வீட்டில், தனியாக இருக்கும் இளம் பெண் தன்னை உள்ளே வந்து உட்காரச் சொன்னால்! அவனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

''இல்லை, அப்புறம் வருகிறேன்'' என்று அரைகுறையாகக் கூறித் தலையெடுத்துப் பார்க்காமல் வெகுவேகமாய்ப் போய் விட்டான்.

ஐந்து நிமிடத்திற்கெல்லாம் இலையும், காய்கறியும் வாங்கிக் கொண்டு மணி உள்ளே நுழைந்தான்.

''உங்கள் சிநேகிதராமே?- வந்து தேடினார்'' என்று சாரதா மகிழ்ச்சி பொங்கக் குதித்துக்கொண்டு அவனை எதிர்கொண்டு போய்ச் சொன்னாள். அவளது மேனியும் குரலும் ஒரு படையெடுப்புப் போல அப்பொழுது அவனைத் தாக்கின. மணி புதுக் குடித்தனத்தின் தொல்லைகளிலும் தன்னை வந்து தாக்கிய அந்த இன்ப அலையை அநுபவித்து ஆறுதல் அடைந்தான்.

'' யார் அது?'' என்று அவளுடைய கன்னத்தைக் கிள்ளிக்கொண்டு கேட்டான்.

''யார் என்று கேட்கவில்லை'' என்று சொல்லிக்கொண்டு வலிகொண்டவள் போலப் பாசாங்கு செய்து, ''ஆ'' என்றாள்.

திடீரென்று மணியின் முகம் சிவந்தது. கோபம் பொங்கி எழுந்தது.

''எவ்வளவு தரம் சொல்லுகிறது உனக்கு? யார் என்று கேட்பதற்கு என்ன கேடு உனக்கு? ஒரு வார்த்தை கேட்டு விட்டால் என்ன மோசம்? உன் கையைப் பிடித்து இழுத்துவிடுவானோ?'' என்று வார்த்தைகளை வீசினான்.

ஒரு வாரத்திற்கு முன்புதான் இப்படி ஒரு சம்பவம் நடந்து மணி சாரதாவை தாறுமாறாகக் கடிந்து கொண்டான். ''பட்டணத்தில் நண்பர்கள் அடிக்கடி வந்து தேடுவார்கள். பதில் சொல்லாமல் உள்ளே நுழைந்து கொண்டு கதவைச் சாத்திக்கொள்ளக் கூடாது. பட்டணத்தின் நாகரிகத்திற்கு ஏற்றபடி நடந்து கொள்ள வேண்டும்'' இந்த மாதிரி உபதேசங்கள் செய்து முடித்தான். அதன் விளைவாக இருவரும் இரண்டு நாள் பேசாமல் கூட இருந்தார்கள்.

இந்தத் தடவை, தான் சொல்லப் போகிற பதில் மணிக்கு மிகவும் மகிழ்ச்சியை உண்டாக்கப் போகிறது என்ற நிச்சயமான எண்ணத்தில், 'வேண்டியமட்டும் பேசட்டும்' என்று சாரதா வாயை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூடிக்கொண்டிருந்தாள். பிறகு அவன் ஓய்ந்ததும் அமைதியாகப் பதில் சொன்னாள்.

''யார் என்று கேட்டேன். சிநேகிதன் என்று சொன்னார். பேர் சொல்லவில்லை. 'உள்ளே வந்து உட்காருங்கள், வந்துடுவார்' என்றேன். அப்புறம் வருவதாகச் சொல்லிப் போய் விட்டார்.''

சாரதா ஆவலுடன் மணியின் முகத்தை நோக்கினாள். அதில் எவ்விதமான மகிழ்ச்சிக் குறியும் தோன்றாததைக் கண்டு அவளது முகம் சுண்டிப் போய்விட்டது. சடக்கென்று திரும்பி உள்ளே போய் விட்டாள்.

மணியோ அந்தமாதிரிப் பதிலை அவளிடமிருந்து எதிர்பார்க்கவே இல்லை. முதலில் அவனுக்கு முகத்தில் அடித்தாற்போல் இருந்தது அவள் பதில். பிறகு தான் சொன்னதற்கு மேலாக அவள் நடந்து கொண்டு விட்டது அவனுக்கு அதிருப்தியை உண்டாக்கிற்று. அதன் பிறகு ஏன் அப்படிச் செய்தாள்? நாம் சொன்னதற்காகக் கீழ்ப்படிந்து நடந்த மாதிரியா அது? அல்லது... என்று கொஞ்சம் அவன் மனம் தடுமாறலாயிற்று.

எல்லாம் சேர்ந்து அவனது வாயை அடக்கிவிட்டன. சாரதாவும் அவனை அமைதிப்படுத்தவோ, பேச்சில் இழுக்கவோ முயலவில்லை. அவளுக்கும் கோபம்.

சாப்பாடு முடிந்து வெளியே போகும்வரை மணி ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. தெருவழியாகப் போய்க் கொண்டே என்ன என்னவோ எண்ணமிட்டான். அவனது மனம் சொல்ல முடியாத வேதனையை அடைந்தது. சாரதா அவ்வளவு தூரம் போய்விடுவாள் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. படித்த பெண் அம்மாதிரிச் செய்திருந்தால் அதில் ஒன்றும் குறிப்பிடக் கூடியபடி இராது. ஒரு நாட்டுப்புறப் பெண் முகம் தெரியாதவனை உள்ளே வந்து உட்காரச் சொன்னது மிகவும் அநாகரிகம்! சிநேகிதன் என்ன நினைத்திருப்பான்? 'என்ன தைரியம் இந்தப் பெண்ணிற்கு? என்றோ, அல்லது 'வெறும் அசடு!' என்றோ நினைத்திருப்பான் அல்லது...

இம்மாதிரி யோசித்துக் கொண்டே போய்க் கொண்டிருந்தான் மணி.

எங்கேயோ போய்விட்டுத் திரும்பி வந்துகொண்டிருந்த ராமு, தெருவில் மணி எதிரே வருவதைக் கண்டு தயக்கமுற்றான். அப்பொழுது மணியைக் கண்டு பேசுவதா வேண்டாமா என்று கூட அவனுக்குச் சந்தேகம் வந்து விட்டது. வீட்டுக்கு வந்திருந்ததாகச் சொல்வதா வேண்டாமா? மணியின் மனைவி சொன்னதைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்வதா வேண்டாமா? இத்தகைய கேள்விகள் அவனது மனத்தில் எழுந்தன.

ஒரு வேளை மணியின் அனுமதியின் பேரில் அவள் அப்படிப் பேசியிருந்தால் சரியாய்ப் போய்விடும். இல்லாவிட்டால், தான் சொல்லுவதால் அந்தப் பெண்ணின் அசட்டுத்தனமோ, அறியாமையயோ மணிக்குக் கோபத்தை உண்டாக்கினால்? அவர்களிடையே பெருத்த் மனத்தாங்கல் ஏற்பட்டால்? யார் கண்டார்கள்?

மனித சுபாவம் எது வேண்டுமானாலும் நினைக்கும். அந்த மாதிரி மனக் கசப்பு நேருவதற்குத் தான் காரணமாகக் கூடாது. அவள் தானாக மணியிடம் முழுவதும் சொல்லியிருக்கிறாள் என்பது என்ன நிச்சயம்? சொல்லியிராவிட்டால் அசட்டுத்தனம் ஆபத்தாக அல்லவோ முடியும்?

இவ்விதம் எண்ணியவனாய், ராமு சடக்கென்று ஒரு சந்தில் திரும்பி மணியின் கண்ணில் படாமல் தப்பினான். ஆனால் அன்று காலையில் நடந்ததைத் தன் மனத்தைவிட்டு அகற்ற அவனால் முடியவில்லை. அந்தப் பால்வடியும் புது முகத்தின் களங்கமற்ற பார்வை, தடங்கல், திகைப்பு, பயம் இவையற்ற அந்தத் தெளிவான சொற்கள்!" இதோ வந்து விடுவார்!" என்றாள் அவள்.

'அதில் என்ன நேர்மை! என்ன மரியாதை! இன்னும், தன்னை உள்ளே வரும்படி அழைத்ததில் என்ன நம்பிக்கை!- தன் கணவனின் நண்பன் என்றதால் ஏற்பட்டது. தன்னையும் நம்பினாள்... அவளா அசடு? அவள்தான் உண்மையான பெண்! நான் சந்தித்த முதல் பெண்! அதனால்தான் எனக்கு அந்தக் கலவரம் ஏற்பட்டது. மணியை மாலையில் கண்டு அவனிடம் சொல்ல வேண்டும்.

இப்படி எண்ணிக்கொண்டு ராமு நடந்தான். ஆனால் தான் முதலில் அந்தப் பேச்சை எடுப்பதற்கு முன்பு, நிலைமை எவ்வாறு இருக்கிறது என்று அறிந்து கொள்ள வேண்டுமென்று தீர்மானித்தான். மாலை ஏழு மணிக்குச் சென்றால் மணி நிச்சயம் வீட்டில் இருப்பான் என்று எண்ணினான் ராமு.

மாலை ஆறு மணி இருக்கும். சாரதா வீட்டு வேலைகளைச் செய்து முடித்துவிட்டு அறையில் தலையை வாரிப் பின்னிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். பக்கத்தில் ஒரு தட்டில் தொடுக்கப்படாத கனகாம்பர மலர்கள், எதிரே முகம் பார்க்கும் கண்ணாடி, ரிப்பன், சீப்பு, வாசனைத் தைலம் முதலியவை இருந்தன.

உள்ளே நுழைந்த மணிக்கு இவற்றையெல்லாம் பார்த்ததும் ஏதோ ஓர் ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இது என்ன பூவென்று இதை நித்தியம் வாங்கித் தலையில் வைத்துக் கொள்ளுகிறாய்?" என்று அவன் அவலை நினைத்துக் கொண்டு உரலை இடித்தான்.

ஆனால், கனகாம்பரத்தைத்தான் அவன் சொல்லுகிறான் என்று நினைத்துச் சாரதா, அந்தச் சந்தர்ப்பத்தில் அவனது பட்டண நாகரிகத்தை இடித்துக் காட்ட வேண்டுமென்று தீர்மானித்தாள்.

"பட்டணத்திலே எல்லோரும் இதைத்தானே வைத்துக்கொள்கிறார்கள்? சங்கீத சபையிலே கூட இதைத்தானே தலை தாங்காமல் வைத்துக் கொண்டு வந்தார்கள்" என்று சாரதா சொன்னாள்.

"எல்லாம் பட்டணத்திலே செய்வதுபோல செய்ய வேண்டுமென்று யார் சொன்னது? அப்படி கட்டாயமா? பட்டணத்துப் பெண்கள் மாதிரி தான் இருக்கிறது அவர்கள் வைத்துக்கொள்ளுகிற கனகாம்பரமும், வாசனையில்லாத பூவை எங்கேயாவது தலையில் வைத்துக் கொள்வதுண்டோ? காக்கரட்டான் பூவைத் தலையில் வைத்துக்கொள்கிற பெண்களுடைய வாழ்க்கைப் போக்கும் அப்படித்தான் இருக்கும்."

"நீங்கள்தானே நான் பட்டணத்து பெண் போல இருக்க வேண்டும் என்கிறீர்கள்? இல்லாவிட்டால் உங்களுக்கு வெட்கமாக இருக்கும் என்றீர்களே?" என்று சாரதா, மணியின் முகக்குறியை ஊன்றிக் கவனித்துக் கொண்டு கூறினாள்.

"அதற்காக மூன்றாம் பேர்வழியைப் போய் வீட்டுக்குள்ளே வந்து உட்காருங்கள் என்பதா?" என்று மணி ஆத்திரத்தில் கொட்டி விட்டான்.

சாரதாவின் முகம் சட்டென்று மாறுதல் அடைந்தது. என்ன நாட்டுப்புறமானாலும் அவள் பெண். அளவு கடந்த கோபத்துடன் மணியின் முகத்தை ஒரு நிமிடம் ஏறிட்டுப் பார்த்தாள். அவனுடைய எண்ணங்கள் அவனது முகத்தில் அவளுக்குத் தெள்ளத் தெளிவாகத் தெரிந்தன. தனக்கு- தன் பெண்மைக்கு அவன் செய்த அவமதிப்பை அறிந்தவள்போல் அவளுடைய முகத்தில் ஓர் ஆழ்ந்த வெறுப்புக்குறி தோன்றிற்று. பாதி போட்ட பின்னலை அவிழ்த்து முடிந்துகொண்டு கனகாம்பரப் பூவைத் தட்டுடன் அப்படியே எடுத்து அலமாரியில் வைத்துவிட்டுச் சமையலறைக்குப் போய்விட்டாள்.

மணி அயர்ந்து போனான்! அடிபட்ட நாய்போல மவுனமாக அறைக்குப் போய் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு ஒரு புத்தகத்தைப் படிப்பதாக பாசாங்கு செய்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழு அடிக்கும் சமயத்தில் ராமு வந்தான். மணி கலகலப்புடன் பேச முயற்சி செய்தும் பயன்படவில்லை. வந்ததும் வராததுமாய் ராமு, ''மணி, நான் காலையில் வந்திருந்தேன், நீ எங்கே போயிருந்தாய்?'' என்றான்.

''நீயா வந்திருந்தாய்?'' என்று கேட்டுவிட்டு மணி மவுனத்தில் ஆழ்ந்தான்.

''மணி, எனக்கு ஏற்பட்ட வியப்பில் என் பெயரைக் கூடச் சொல்ல மறந்து போனேன்.''

ராமுவின் தொண்டை அடைபட்டது. மணி தலை குனிந்து கொண்டான். அவனால் பேசவே முடியவில்லை. நண்பர்கள் இருவரும் சிலநிமிட நேரம் மவுனமாக உட்கார்ந்திருந்தார்கள். ராமு நிலைமையை உணர்ந்து விட்டான். திடீரென்று எழுந்தான்.

''மணி, நான் போய்விட்டு வருகிறேன். இதைச் சொல்லத்தான் வந்தேன்.''

''இங்கேயே சாப்பிடேன், ராமு?''

''இல்லை, இன்று வேண்டாம்!''

இரவு சாப்பாடு பேச்சில்லாமல் முடிந்தது. ஜன்னல் வழியே பாய்ந்த நிலவைக் கவனிப்பதுபோல மணி ஏங்கிப் போய் உட்கார்ந்து கொண்டிருந்தான். சாரதா பால் கிண்ணத்தை எடுத்து வந்து மவுனமாக நீட்டினாள்.

அது வரையில் அவளுடைய முகத்தைப் பார்க்கக்கூட அவனுக்குத் துணிவு வரவில்லை. அப்பொழுதுதான் தலையெடுத்துப் பார்த்தான். அவளது முகத்தில் தோன்றிய துயரக் குறியைக் கண்டு பதறிப் போனான். எழுந்து அவளது தோளைப் பிடித்துக் கொண்டான்.

''சாரதா!'' என்று சொல்லி மேலே பேச முடியாமல் நிறுத்தினான்.

'' வேண்டாம்!'' என்று சாரதா அவனது முகத்தைத் தடவினாள்.

''நான் சொன்னது!'' என்று மணி தன் மனத்தை வெளியிடலானான்.

''கனகாம்பரம் எனக்குப் பிடிக்காதே! நீங்கள் சொன்னதில் தப்பென்ன?'' என்று சாரதா, பெண்களுக்கென்றே அமைந்த முறையில் பேச்சை மாற்றிவிட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8

கு.ப.ராஜகோபாலன் கதைகள்

கு.ப.ரா.வின் கதைகள் பெரிதும் மனத்தைச் சுற்றிப் பின்னப்பட்டவை. இதுவரை மனித நாகரிகம் கண்டடைந்திருக்கும் எல்லா வெற்றிகளுக்கும் கண்டுபிடிப்புகளுக்கும் சவால் விட்டபடி தன்போக்கில் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கக் கூடிய ஒரே அம்சம், மனித மனம் மட்டுமே. ஜல்லிக்கட்டுக் காளையை வசப்படுத்தும் ஆசையுடனும் வேகத்துடனும் நெருங்கிச் செல்லும் வீரனைப் போல அம் மனத்தின் சகல சலனங்களையும் வீச்சுகளையும் கண்டடையும் கனவுடனும் நம்பிக்கையுடனும் நெருங்க முயன்றவர் என கு.ப.ரா.வைச் சொல்லலாம்.

மனம் ஒரு விதை. தன் தளிரை எத்திசையை நோக்கி அது நீட்டும் என்பது, முளைக்கும் வரை யாருக்கும் தெரிவதில்லை. மனம் ஒரு பாம்பு. தன் நாவை எத்திசை நோக்கிச் சுழற்றும் என்பதைக் கணிக்க முடிவதில்லை. பல விடைகளைத் தோற்றுவிக்கிற சிக்கலான கணக்கு அது; கண்டுபிடித்த விடை மீது ஒரு கணம் திருப்தியும் மறுகணமே அதிருப்தியும் உருவாகி விடுவதால் விடை காணும் வேகம் மீண்டும் மீண்டும் தொடர்ந்தபடியே இருக்கிறது. அந்த விடை நோக்கிய பயணத்தில் மனத்தின் அறைகள் திறக்கப்படுகின்றன. அங்கே மலை போலக் குவித்து வைக்கப்பட்டிருக்கின்றன பல மூட்டைகள். துன்பங்கள், ஏக்கங்கள், எரிச்சல்கள், புழுங்கல்கள், மயக்கங்கள், தடுமாற்றங்கள். அவற்றின் துர்நாற்றம் உவப்பாக இருப்பதில்லை.

உவப்பின்மையின் உந்துதலோடேயே மேலும் மேலும் செல்ல வேண்டியிருக்கிறது. மனம், வெடிக்கும் தருணமும் சுருங்கும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தருணமும் புரியாத புதிர்களாக உள்ளன. அத்தகு தருணங்களைத் தொகுப்பதன் வழியாக மனத்தின் சித்திரத்தைத் தீட்டிவிட முடியும் என்று கு.ப.ரா.நம்பியிருப்பார் என்று தோன்றுகிறது. படைப்புகளில் வெளிப்படும் பெருமூச்சுகளும் அதிர்ச்சிகளும் அச்சித்திரத்தைத் தீட்ட அவருக்குப் பயன்பட்ட வண்ணங்கள்.

பூட்டி வைக்கப்பட்ட அறையாக மனத்தை நினைத்துக் கொண்டிருக்கும் ஒரு வாசகன், முதன் முதலாகக் கு.ப.ரா.வைப் படிக்க முற்படும் போது விசித்திரமான கோபத்துக்கு ஆளாவதற்குக் காரணம் பூட்டிய அறை ஆராயப்பட்டு விட்டது தான். மறைவாக இருக்க வேண்டியவை என நினைக்கும் பல விஷயங்கள் அம்பலப்பட்டு நிற்பதைப் பார்ப்பதுதான். மனம் போர்த்தியிருக்கும் கம்பளியை விலக்கி உண்மையை அம்பலப்படுத்துபவை கு.ப.ரா.வின் கதைகள்.

ஆயிரமாயிரம் விஷயங்களை மனத்தில் புதைத்துக் கொண்டு மேலோட்டமாகத் தன்னைப் பற்றிய உயர்வான படிமத்தை வளர்த்துக் கொண்டிருக்கும் மனங்களுக்குக் கடுமையான அதிர்ச்சியைக் கொடுக்கின்றன. மனம் என்பது என்ன? அது விஷக் கோப்பையா? ஆசைப் பூக்கள் பூத்துக் குலுங்கும் சோலையா? அற்பத்தனம் மண்டிய புதரா?, காதல் சொரியும் அருவியா?, அதன் உருவம் எது? மரபின் மூலம் பெற்ற அறிவாலும் நம்பிக்கைகளாலும் அதை அடக்க முடியுமா?, மனத்துக்கு அடங்கிக் கட்டுப்படுவது சுகம் தருமா?, மனத்தைக் கட்டுப்படுத்தி அடக்கி வைப்பது சுகம் தருமா? இப்படிப் பல கேள்விகள் எழுகின்றன. இரவெல்லாம் பூசிக்கொண்டு வலம் வந்த அரிதாரத்தைக் கலைப்பது யாருக்கும் மகிழ்ச்சியான விஷயமல்ல, அரிதாரம் முகத்தில் படர்ந்திருக்கும் வரை, மாயக் கிருஷ்ணன். கலைந்துவிட்டாலோ, சாதாரணத் தொழிலாளி. அரிதாரத்தைக் கலைக்கும் கணம் நெருங்கியதும் உருவாகும் ஆயாசமும் வெறுப்பும், எரிச்சலும் வார்த்தைகளில் வடிக்க முடியாதவை.

கு.ப.ரா.வின் கதைகள் பெரும்பாலும் அரிதாரம் கலைபடும் கணங்களைப் பற்றியவை. வாழ்வை நல்லவிதத்தில் வாழ்வதற்கேற்ற நீதிகளையும் கருத்துக்களையும் இலக்கியம் பேசவேண்டும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்த வாசகர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் கு.ப.ரா.வின் கதைகள் மீது கோபம் வரக் காரணம் மனத்தின் நிர்வாணக் கோலத்தை அவற்றில் காண நேர்ந்ததன் விளைவே ஆகும். மனம் என்னும் குளத்தில் தொடர்ந்து கற்களை வீசி அதிர்வலைகளின் வீச்சைக் காலமெல்லாம் கவனித்துக் கொண்டே இருந்தவர்கள் கு.ப.ரா.வைப் போல யாருமில்லை.

கு.ப.ரா.கதைகளைப் படிக்கிற எவரும் இதை எளிதில் உணர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயலும். அவருடைய நடையின் எளிமையும், சொற்செட்டும் அதிசயிக்க வைக்கும் தன்மையில் உள்ளன.

தனது பேரறிவை புலப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் கு.ப.ரா. எழுதவில்லை. வாசகனை மிரட்ட வேண்டும், குழப்ப வேண்டும், திகைக்க வைக்க வேண்டும் என்பது போன்ற 'உயர்ந்த நோக்கம்' ஏதும் அவருக்கு இருந்ததில்லை. பாரதியார் வலியுறுத்திய எளிமை கு.ப.ரா.எழுத்துக்களில் மேலோங்கி நிற்கிறது.

இவ்வளவுக்கும் கு.ப.ரா.மிக ஆழமான, அழுத்தமான, நுட்பமான விஷயங்களையே தனது கதைகளுக்கு உரிய விஷயமாக எடுத்துக் கொண்டார். மனித மன இயல்புகளை, உணர்ச்சிகளை, உளப் போராட்டங்களைச் சிறு கதைகளாகச் சித்திரிப்பதில் அவர் ஆர்வம் கொண்டிருந்தார். முக்கியமாக, ஆண் பெண் உறவுகளில் மறைமுகமாகவும், நேரடியாகவும் எழுகிற - எழக்கூடிய - சிக்கல்களையும் உணர்வு பேதங்களையும் உளக்குமைதல்களையும் அவர் எழுத்தில் விவரித்தார்.

கு.ப.ராஜகோபாலனின் பிரசித்தி பெற்ற கதைகளில் 'கனகாம்பரம்' என்பதும் ஒன்று ஆகும். ராமு தன் நண்பனான மணியைச் சந்திக்க வருகிறான். மணி வீட்டில் இல்லை. அவன் மனைவி சகஜமாகப் பதில் சொல்கிறாள். அவள் நாகரிகப் பெண் இல்லை. அவளது இயல்பான போக்கு ராமுவைத் தடுமாறச் செய்கிறது. அப்புறம் அவள் கணவனைக் குழம்ப வைக்கிறது.

இந்தக் கதையின் ஆரம்பப் பகுதியே போதும், கு.ப.ராவின் எழுத்து முறையையும் உரைநடையையும் காட்டுவதற்கு....

"மணி" என்று வாசலில் நின்று கொண்டே ராமு கூப்பிட்டான். நண்பன் வீட்டில் இருக்கிறானோ இல்லையோ என்று அவனுக்குச் சந்தேகம்.

"எங்கேயோ வெளிலே போயிருக்கா. நீங்க யாரு?" என்று மணியின் மனைவி கதவண்டை நின்று கொண்டு மெல்லிய குரலில் கேட்டாள்.

ராமுவுக்குக் கொஞ்சம் தூக்கி வாரிப் போட்டு விட்டது.

மணியும் அவனும் கலாசாலையில் சேர்ந்து படித்தவர்கள். மணியின் மனைவியைப் பற்றி அவனுக்கு அதிகமாகத் தெரியாது. அவளை அவன் அதுவரையில் பார்த்ததுகூட இல்லை. குடித்தனம் நடத்த அவள் சென்னைக்கு வந்து ஒரு மாதந்தான் ஆகியிருந்தது. அந்த மாதம் முழுவதும் ராமு சென்னையில் இல்லை. அதற்கு முன் சாரதாவும் அவனைப் பார்த்ததில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராமுவும் மணியைப்போல மிகவும் முற்போக்கான கொள்கைகள் உடையவன்தான். கலாசாலை 'விவாதங்களிலும் சர்ச்சைகளிலும் பேசியபொழுது, ஸ்திரீ புருஷர்கள் சமானர்களாகப் பழகவேண்டுமென்றும், பெண்களின் முன்னேற்றம் மிகவும் அவசியமான சீர்திருத்தமென்றும் ஆவேசத்துடன் கர்ஜித்து வந்தான். ஆனால் அனுஷ்டானத்தில் அந்தக் கொள்கைகள் சோதனைக்கு வந்தபொழுது அவன் கலவரமடைந்து விட்டான். முன்பின் பரிச்சயமின்றி மணியின் மனைவி தன்னுடன் பேசியது அவனுக்கு ஆச்சரியமாகப் போய்விட்டது. அவன் அதைச் சிறிதும் எதிர்பார்க்கவே இல்லை. ''வீட்டில் மணி இல்லாவிட்டால் பதில் வராது, கொஞ்ச நேரம் நின்று பார்த்துவிட்டுப் போய் விடுவோம்'' என்றே அவன் ஒரு குரல் கூப்பிட்டுப் பார்த்தான்.

மணியின் மனைவி சாரதா படித்தபெண்ணும் அல்ல; அசல் கிராமாந்தரம். எந்தப் பக்கத்திலும் ரயில் பாதைக்கே இருபது மைல் தூரத்திலுள்ள ஒரு சோழ தேசக் கிராமத்துப் பெரிய மிராசுதாரின் பெண். அவளுடைய நடை உடை பாவனைகளிலும், அந்தச் சில நிமிஷங்களில் அவன் கண்களில் பட்டமாட்டில் ஒரு விதமான புதுமாதிரியான சின்னமும் காணவில்லை.

விலையுயர்ந்த பெங்களூர்ப் பட்டுச் சேலையை நேர்த்தியாகக் 'கொசவம்' விட்டுக் கட்டிக் கொண்டிருந்தாள். அதற்கேற்ற வர்ணம் கொண்ட பழைய மாதிரி ரவிக்கைதான் அணிந்திருந்தாள். தலை மயிரை நடுவே வகிரெடுத்துத்தான் பின்னிக் கொண்டிருந்தாள். பின்னல்கூட நவநாகரிகப் போக்குப்படித் 'தொள தொள'வென்று காதை மூடிக்கொண்டு இருக்கவில்லை. பின்னலை எடுத்துக் கட்டிக் கொண்டிருந்தாள். நெற்றியில் பூர்ண சந்திரன் போலப் பெரிய குங்குமப் பொட்டு இருந்தது. உடம்பின் மேலிருந்த வைரங்கள் பூத்துக் கொட்டிக் கொண்டிருந்தன. மூக்கில் புலாக்கு இருந்தது. கைக்காரியமாக இருந்தவள். அவசரமாக யாரென்று பார்த்துப் பதில் சொல்ல வந்தாள் என்பது அவள் தோற்றத்திலிருந்து தெரிந்தது. அப்பேர்ப்பட்டவள் தன்னுடன் வந்து பேசினதும் ராமு மனம் தடுமாறிப் போனான்.

ஒரு பெண் வந்து தன்னுடன் பேசிவிட்டாள் என்பதால் அவன் கூச்சமடையவில்லை. கலாசாலையிலும் வெளியிலும் படித்த பெண்கள் பலருடன் பேசிப் பழகினவன்தான் அவன். அது அவனுக்கு சகஜமாயிருந்தது. இந்தப் படிக்காத பெண் தன்னுடன் பேசினது தான் அவனுக்குக் குழப்பத்தை உண்டாக்கிவிட்டது.

இப்படி வளர்கிறது கதை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைமாந்தரை வர்ணிக்கையிலும் ஒரு சில வரிகளில் எளிய சொற்களைக் கொண்டு, நேர்த்தியாகச் சித்திரித்துவிடும் ஆற்றலைக் கு.ப.ரா.பெற்றிருந்தார்.

கு.ப.ரா.வின் கதைகளில் மிகமுக்கியமான கதை ஆற்றாமை. எப்போது வெடிக்கும் என்று தெரியாத திரி கொளுத்தப்பட்ட பட்டாசாக மனம் இயங்கும் கோலத்துக்குப் பொருத்தமான கதை இது. கதைகளில் இரு இளம்பெண்கள் வருகிறார்கள். ஒருத்திக்கு திருமணமாகி ஓராண்டாகிறது. திருமணமான கையோடு அவசரம் அவசரமாக அரங்கேற்றப்பட்ட சாந்திமுகூர்த்தத்தில் உடலின் சுகராகங்களை மீட்டிவிட்டுப் பட்டாளத்துக்குச் சென்ற கணவன், ஓராண்டாகத் திரும்பி வராத நிலையில் மனக் குமுறல்களைச் சொல்லி ஆற்றிக் கொள்ள முடியாத நிலை. இது முதல் ஆற்றாமை. கதையில் இடம் பெறும் மற்றொரு இளம்பெண் அப்போதுதான் புதிதாகத் திருமணம் ஆனவள்.

அறைக்கு வெளியே தன் சரச வார்த்தைகள் கேட்கும் என்ற எண்ணமற்ற நிலையில் கணவனுடன் பேசிச் சிரித்துச் சுகம் காண்பவள். பூட்டிய அறைக்குள்ளிருந்து வெளிப்படும் சிரிப்பு, பூமணம், கொஞ்சல், பேச்சொலி ஒவ்வொன்றுமே வெளியிலிருப்பவளை மிருகமாக்கிக் கொண்டிருக்கிறது. பூட்டிய மனக்கூண்டுக்குள் மிருகம் நிம்மதியின்றி அலைகிறது, புரள்கிறது. குமைகிறது. மெல்ல மெல்ல வெறியேறுகிறது. எதிர்பாராத தருணத்தில் உள்ளே இருக்கும் ஆணைத் தேடி வரும் விருந்தாளியைப் பார்த்து கதவைத் தட்டி அழைக்கச் சொல்லி குரூர ஆனந்தத்துடன் தூண்டுகிறாள்.

கதவு திறக்கப்பட்ட கணத்தில் ஆடை நெகிழ்ந்த நிலையில் படுத்திருந்த இளம் பெண்ணின் கோலத்தை வெளிச்சம் போட்டுக் காட்டி விடுகிறது. வந்த விருந்தாளிக்கும் அவளுக்கும் காட்சிபட்டு விடுகிறது அக்கோலம். ஒரே ஒரு கணம். அந்த மல்லிகை வாசம். அந்த ஊதுவத்தியின் வாசம். அந்தரங்கம் திறந்து கிடந்தது போன்ற அந்த அறையை அதற்குமேல் அவளால் பார்க்க முடியவில்லை. கண்ணும் மனமும் கூசிவிடுகின்றன. சட்டென்று மிகக் கடுமையான குற்ற உணர்ச்சி பிறந்து அவளைத் தைக்கிறது. குற்றத்தின் வெப்பத்தை ஆற்றிக் கொள்ள முடியாமல் சங்கடப்படுகிறாள். ஏகாந்தம் ஆடையற்று நின்றது போல நிற்க நேர்ந்து விட்ட இளம்பெண் எதைச் சொல்லி தன் அவமானத்தை ஆற்றிக் கொள்வது என்று விளங்காமல் திரும்பி வரும் கணவனைப் பார்த்து சீறுகிறாள். வெளியே இருக்கும் இளம் பெண், ''திருப்திதானே பேயே'' என்று தன்னைத்தானே கேட்டுக் கொள்கிறாள்.

திருமணமான இருவரிடையே ஆனந்தமாகக் கழிந்திருக்க வேண்டிய ஒரு கணத்தின் மீது எதிர் பாராதவிதமாக கசப்பு கவிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுகிறது. கைபிசகாக இனிப்பில் சர்க்கரைக்குப் பதிலாக உப்பைக் கொட்டிவிட்டது போல. வெளிச்சத்தில் காட்சிப் பொருளாகிவிட்ட தன் உடலை நினைத்துக் குறுகுறுக்கிறாள் அவள். இனி எதைச் செய்தும், அக்காட்சியை நடக்காத ஒன்றாக மாற்றமுடியாது. அந்த வலியையும் அவமானத்தையும் கசப்பையும் ஆற்றிக் கொள்ளவே முடியாது. எத்தனை ஆண்டுகள் கழிந்தாலும் ஆறாத வடுவாக நின்றுவிட்டது அக்கணம்.

இது ஒரு ஆற்றாமை. கதவைத் திறப்பதற்கு முன்னர் ஆடை நெகிழ்ந்த மனைவியின் எண்ணம் எழாத அசட்டுக் கணவன், ஞாபகமில்லை என்றும் சின்ன விஷயத்தை ஏன் பிரமாதப் படுத்துகிறாய் என்றும் சொல்லித் தன் பிழையை மறைத்துக் கொள்ளவும் அதன் குற்ற உணர்விலிருந்து தப்பிக்கவும் முயன்று தோற்கும் கணவனின் ஆற்றாமை மறுபுறம். துப்பிய விஷத்தை மறுபடியும் எடுக்க இயலாததைப் போல, நேர்ந்த கசப்புகளைச் சரிப்படுத்த இயலாத சங்கடத்திலும், தன்னுடைய மனத்தின் திடீர் எழுச்சிக்குக் காரணம் புரியாத குற்ற உணர்ச்சியிலும் தவிக்கும் பெண்ணின் ஆற்றாமை இன்னொருபுறம்.

ஆற்றிக் கொள்ள இயலாத அளவுக்கு ஒன்றை ஏதோ படபடப்பிலும் உத்வேகத்திலும் செய்வதும் மனமே. பின்பு ஆற்றாமையில் தவிப்பதும் மனமே.

இந்த ஊசலாட்டத்துக்கிடையேதான் மனிதன் மிருகமாவதும் மிருகமானவன் மீண்டும் மனிதனாவதும் நடக்கிறது.

''பூங்காவனத்திற்கு வயது இருபத்தி நாலு. சிவப்பாக இருந்ததால் அவளுக்குப் பாப்பாத்தி என்று ஒரு பெயரும் உண்டு. நன்றாக மஞ்சள் அரைத்துப் பூசிக் கொண்டு எப்பொழுதும் பளிச்சென்று இருப்பாள். பேசும் பொழுது அமெரிக்கையாகச் சிரித்துக் கொண்டேதான் பேசுவாள். ரொம்ப நல்லவள் என்று இவளுக்கு ஊரில் செல்வாக்கும் உண்டு". (அடிமைப் பயல்)

கதாபாத்திரங்களின் பேச்சை அப்படி அப்படியே கொச்சை மொழியில் எழுதுவதில் கு.ப.ரா.சிரத்தை காட்டினார். உதாரணமாக-

''இவங்கப்பனுக்குக் காலரா கண்டுருக்கு. டாகட்டரெ கூட்டியாரணும். அவருக்கு ரெண்டு ரூவா பீசாம். ஒங்களுக்கு ரொம்பப் புண்ணியம் இண்ணக்கிக் கொடுத்தா நாளெக்கி வண்டி வாடவெ-" என்று பூங்கா சொல்லி முடிப்பதற்குள் சேர்வைகாரர் குறுக்கிட்டார்.

ரெண்டு ரூவாயா! ரூபா கெளம்பரதே கஷ்டமாயிருக்குதே! நேத்துதான் இன்கம்டாக்சு வரிக்குப் பொறுக்கிப் போணச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்பினேன். அந்தப் பய வேலு குத்தவெ பாக்கி தரணும். ஏலே, அவனப் போயி."

''ஐயோ! அவசரமாச்சுங்களே! நாலுதரம் போயிருச்சு, நடக்கமாட்டல்லேங்கராரு, கண் இருட்டுதாம்.."

அவசியம் என்று தோன்றுகிற இடத்தில் சூழ்நிலை வர்ணிப்பை கு.ப.ரா. அழகாக இணைத்திருக்கிறார். அபூர்வமாக வருகிற இத்தகைய வர்ணனைகள் நயமான சொற்சித்திரங்களாக விளங்குகின்றன. 'புதிர்' என்ற கதையில் உள்ள ஒரு வர்ணிப்பு இது.

''சாலையில் இரண்டு பக்கங்களிலும் நெல்லி மரங்கள். நடுவில் சில இடங்களில் நாவல் மரங்களும் இருந்தன. ஆடிமாத முடிவாகையால் சாலையெல்லாம் நாவல் பழங்கள் கொட்டிக் கிடந்தன. இரண்டு பக்கங்களிலும் கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் நன்செய்கள். நடவுகாலம், வயல்களிலெல்லாம் ஜலம் நிறையக் கட்டியிருந்தார்கள். சேறு புளித்த மாவுபோல் நுரைத்துப் பொங்கி நின்றது. சில இடங்களில் நடவாகி இருந்தது. சோகை பிடித்த மஞ்சள் நிற நாற்றுக்கள் தூரதூரமாக நடப்பட்டிருந்தன. சில இடங்களில் பள்ளப் பெண்கள் மார்புச் சேலையை இடுப்பில் சுற்றிக் கொண்டு, முழங்கால் சேற்றில் மும்முரமாக நாற்று நட்டுக் கொண்டிருந்தார்கள்."

சில சந்தர்ப்பங்களில், பழமையான விஷயங்களைப் புதுமையான முறையில் எடுத்துச் சொல்கிற போக்கையும் கு.ப.ரா.நடையில் காணமுடிகிறது.

'அவள் தாயாரைப் பெற்ற பாட்டிதான் வீட்டில் பெரியவள். பாட்டி பழைய காலத்தின் பரிபூரணப் பிரதிநிதி, அதாவது, ஹிந்துக் கூட்டுக் குடும்ப முறையிலும், சமூக மதப் பழக்க வழக்கங்களிலும் சாரத்தை மறந்து வெறும் சக்கையை வைத்துக் கொண்டு உயிரை வாங்கும் கோஷ்டியைச் சேர்ந்தவள். பேத்தி அலமு இப்படியான பிறகு, அவளுடைய வாழ்க்கையின் நன்னடத்தைப் பொறுப்பு முழுவதையும் தன்னிடம் அவள் புருஷன் ஒப்படைத்துச் சென்று விட்டதாக அவள் எண்ணினாள். கடுமையாகப் பேசுவதால்தான் ஒழுக்கம் தவறாது என்ற நம்பிக்கை அவளுக்கு."

உரையாடல் மூலம் கதையை ரசமாக வளர்த்துச் செல்கிற போக்கையும் கு.ப.ரா. பல கதைகளில் சிறப்பாகக் கையாண்டிருக்கிறார்.

உரைநடையில் சோதனை ரீதியாக கு.ப.ரா.சிறுசிறு கட்டுரைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலவற்றை எழுதியிருக்கிறார். அழகு, கற்பனை, உண்மை என்ற தலைப்புகளில் அவர் எழுதியுள்ள இச்சிறு கட்டுரைகள் கு.ப.ரா.வின் உரைநடை அழகுக்கும் சிந்தனை வீச்சுக்கும் நல்ல சான்றுகளாகத் திகழ்கின்றன. அறிவின் கட்டளைக்கும் மரபுகளின் விதிகளுக்கும் அடி பணியாமல் தன்னிச்சையாகத் தனக்கு உகந்த திசைகளில் பயணப்பட்டு விடுகிற மனத்தின் சித்திரங்களே அவர் கதைகளில் காணக்கிடைக்கின்றன.

(எழுத்தாளர் பாவண்ணன், அறிஞர் வல்லிக் கண்ணன் ஆகியோர் எழுதிய கட்டுரைகளிலிருந்து தொகுக்கப் பெற்றது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9

கு. அழகிரிசாமி

இருபதாம் நூற்றாண்டின் சிறந்த சிறுகதை எழுத்தாளராகத் திகழ்ந்தவர் கு. அழகிரிசாமி. சிறுகதைகள், கட்டுரைகள், புதினங்கள், நாடகங்கள், மேடைநாடகங்கள், கவிதைகள், கீர்த்தனைகள், நூற்பதிப்பு எனப் பல துறைகளில் இவர் ஈடுபட்டிருந்தார். இவருக்குப் பெரும் புகழைத் தேடித் தந்த துறை சிறுகதைத் துறையேயாகும்.

இவரது கதைகளின் உள்ளடக்கம், அமைப்பு அனைத்திலுமே சிக்கலற்ற எளிமைத் தன்மை உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித உணர்ச்சிகள் இவரது கதைகளின் அடிநாதமாகத் திகழ்கின்றன. அழகிரிசாமி தமது கதைகளில் தீண்டாமை, வேலையில்லாத் திண்டாட்டம், காதல், வறுமை போன்ற பொருள்களைக் கதைக் கருக்களாக அமைத்துள்ளார். இவர் உருவம், உத்தி போன்றவற்றில் புதிய சோதனைகளைச் செய்து பார்க்காது எடுத்துக் கொண்ட வடிவத்தைச் சீராகவும், செம்மையாகவும் படைக்க முயன்று அதில் வெற்றியும் பெற்றுள்ளார்.

'சிரிக்கவில்லை', 'தவப்பயன்', 'காலகண்டி', 'தெய்வம் பிறந்தது', 'இரு சகோதரர்கள்', 'கற்பக விருட்சம்', 'அழகிரிசாமி கதைகள்', 'வரப்பிரசாதம்', 'அன்பளிப்பு', முதலிய சிறுகதைத் தொகுதிகளும் 'காளிவரம்', 'மூன்று பிள்ளைகள்' முதலிய சிறுவர் கதைத் தொகுதிகளும் 'டாக்டர் அனுராதா', 'தீராத விளையாட்டுப் பிள்ளை', 'புதுவீடு', 'புதுஉலகம்', 'வாழ்க்கைப் பாதை', நாவல்களும் 'கவிச்சக்கரவர்த்தி', 'வஞ்சமகள்' முதலிய நாடகங்களும் இவரது படைப்புக்கள். கம்பராமாயணத்தையும் காவடிச்சிந்தையும் பதிப்பித்திருக்கிறார்.

அழகிரிசாமி சிறந்த படைப்பாற்றலைப் பெற்றிருந்ததோடு, நல்ல இலக்கியச் சுவைஞராகவும் திகழ்ந்தார். இவரது இலக்கிய இரசனையும், மனித நேயப் பண்புகளும், எதையும் கூர்ந்து உற்று நோக்கும் கூர்த்தமதியும், வாழ்க்கையில் பெற்ற அனுபவங்களும், கண்ட காட்சிகளுமே இவர் படைப்புக்களுக்கு அடிப்படைகளாக அமைந்துள்ளன. மரபுவழி இலக்கியத்தில் ஆர்வமும் தமிழிலக்கியத்தில் ஆழ்ந்த புலமையும் கொண்டிருந்ததால் புதுமை இலக்கியங்களில் ஒன்றான சிறுகதை இலக்கியத்தைச் செவ்வனே இவரால் படைக்க முடிந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10

தவப்பயன்

சுவாமி நிர்மலானந்தரை ஒருநாள் மாலை திடீரென்று ஆஸ்ரமத்தில் காணவில்லை. சாயங்காலம் ஐந்து மணிக்கெல்லாம் அவர் தனியே எழுந்து உலாவப் போவது வழக்கம். அப்போது சீடர்கள் எவரையும் அழைத்துக் கொள்ளாமல், தியானத்தில் ஆழ்ந்த வண்ணம் தன்னந்தனியாகவே நடந்து செல்லுவார். அநேகமாக பொழுது இருட்டுவதற்குள் சுவாமிகள் ஆஸ்ரமத்திற்குத் திரும்பி விடுவார். திரும்பும்போது மட்டிலும் சிஷ்யர்கள் சிறிது தூரம் சென்று அவரை எதிர்கொண்டு அழைத்து வருவார்கள்.

அன்று நிர்மலானந்தர் சூரியாஸ்தமனம் ஆகி இரண்டு நாழிகைப் பொழுது கழிந்தும் வராததைக்கண்டு சிஷ்யர்கள் திடுக்கிட்டுப் போனார்கள். சுவாமிகளிடம் ஞானோபதேசம் பெறும் உயர்ந்த நோக்கத்துடன் சிலரும், திருநீறும் ஆசீர்வாதமும் பெறும் சாதாரண நோக்கத்துடன் சிலருமாக ஒரு சிறு கூட்டம் வழக்கம் போல வந்து ஆஸ்ரமத்தில் அமர்ந்திருந்தது; காத்திருந்தது.

சுவாமிகளை இன்னும் காணவில்லை.

சிஷ்யர்களைவிட பக்தகோடிகள் மிகவும் அதிகக் கவலையில் ஆழ்ந்தனர்.

சிஷ்யர்களுக்கு ஓரளவு துணிச்சல் இருப்பதற்குச் சில காரணங்கள் உண்டு.

சில சமயங்களில் நிர்மலானந்தர் உலாவப் போகும் நோக்கத்துடன் ஆஸ்ரமத்தை விட்டுப் புறப்படுவார். ஆனால், ஆஸ்ரமத்தின் வேலியைத் தாண்டியதும் வெட்ட வெளியில் அப்படியே உட்கார்ந்து விடுவார். உடனே பகவத்தியானம்தான். அன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வளவோடு உலாவும் காரியம் முடிந்துவிடும். தியானம் கலைந்ததும் நேரத்தைப் பார்த்துக் கொண்டு ஆஸ்ரமத்துக்குத் திரும்பி விடுவார். இதற்கு விதிவிலக்காகத் தியானம் கலையும் போது நள்ளிரவு ஆகிவிட்டிருந்தாலும். மேற்கொண்டும் சாயங்காலத்தைப் போலவே பாவித்து, அந்தக் காடாந்தகாரமான நிசியிலும் உலாவப் போய்வருவது உண்டு.

அன்று அவர் திருவுள்ளம் எப்படி இருந்ததோ? அவரைக் கருவியாகக் கொண்டு ஆட்டுவிப்பவனின் திருவுள்ளப் பாங்கு எதுவோ? அவர் அன்று எங்கே, எந்த நிலையில், எதற்காகத் தாமதித்தாரோ?

சமீபத்தில் எங்காவது இருப்பார் என்ற நம்பிக்கையும் நேரம் செல்லச் செல்ல சிஷ்யர்களுக்குக் குறைந்து விட்டது.

பக்தர்களின் மன வியாகூலமோ சிஷ்யர்களை அமைதியுடன் அமர்ந்து காத்திருக்கும்படி விடவில்லை.

மூவர் சிஷ்யர்கள் புறப்பட்டார்கள். பக்தகோடிகளில் வயதான கிழவர் ஒருவரும் கூடப் புறப்பட்டார்.

நல்ல நிலா அடித்தது.

பொட்டல் வெளியில் சுவடுகள் பதியாவிட்டாலும், நிர்மலானந்தர் எந்த வழியில் சென்றிருப்பார் என்பதைக் கண்டு பிடிப்பது சிரமம் அல்ல. ஏனென்றால் ஆஸ்ரமத்திலிருந்து தெற்கு நோக்கிச் செல்லும் ஒற்றையடிப் பாதைதான் பரந்த வெளியை நோக்கிச் செல்லும் பாதை. வடக்குப் பாதை ஊரை நோக்கிச் செல்லுகிறது. வேறு பாதைகள் கிடையாது.

நான்கு பேரும் நடந்தனர். சமீபத்தில் எங்காவது நிர்மலானந்தர் அமர்ந்திருக்கக் கூடும் என்ற எண்ணத்தினால் கால் நடையில் பயபக்தி தயக்கம் கொடுத்தது. சுற்றிலும் இரையும் சில்வண்டுகளின் ஓசையை நூலளவும் பாதிக்காதவாறு மௌனமாக, காலடி ஓசை கேட்காமல், பாதங்கள் அடி எடுத்து வைத்தன.

இப்படி ஒரு மைல் நடந்தார்கள்.

ஒரு மைலுக்கு மேலும் நடந்தாய் விட்டது.

பாதையின் வலது புறத்தில் சப்பாத்திக்கள்ளிப் புதரின் நடுவில் சிறிது மேடான ஒரு கரும்பாறை உண்டு. அது நிலவில், குழியில் விழுந்த யானையின் முதுகுபோலத் தோற்றமளித்தது. அதன்மேல் கரும்பரப்பை வகிர்ந்து கொண்டு செந்நிறத் தூலமாக ஏதோ கிடந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரபரப்புடன் மனம் கலங்கி நால்வரும் அந்தப் பாறையை நோக்கி ஓடினார்கள். அவர்களில் ஏழை மனம் படைத்த ஒரு சிஷ்யனின் கண்களில் கண்ணீர் திரண்டது. உடன் சென்ற கிழவரின் இரைகின்ற சுவாசம் அந்த இடத்தில் மட்டுப்பட்டு மௌனம் பூண்டது. நால்வரும் போய்ப் பார்த்தார்கள்.

காஷாயதாரியாகக் கருங்கல் சயனத்தில் கிடந்த நிர்மலானந்தர் 'பூரணம்' பெற்று விடவில்லை. அன்றையத் தியானம் சயன அவசத்தில் நடைபெற்றது. அவ்வளவேதான். எதிர்பார்த்தபடி சிஷ்யர்கள் பயப்படும்படியாக எதுவும் நடந்துவிடவில்லை. ஆனால்.......

தன்னை மறந்து படுத்திருக்கும் நிர்மலானந்தரின் வாயிலும், வாயருகில் பாறையிலும், காய்ந்து சருகாகிப் போன பெயர் தெரியாத இலைகள் ஏதோ கிடந்தன. சப்பாத்திக் கள்ளியின் காய்கள் சில பக்கத்தில் இருந்தன. சுவாமிகளின் ஒரு கால் பாறையிலும், மற்றொரு கால் சப்பாத்திப் புதரிலும் கிடந்தது. இடையில் சுற்றியிருந்த காஷாயத் துணியின் செம்பாதி காற்றில் பறந்து போய் சப்பாத்தியின் மேல் ஒட்டிக்கொண்டிருந்தது.

நால்வருக்கும் நிஷ்டையைக் கலைக்கப் பயம். ஆனால், சுவாமிகளின் பரிதாப நிலையைக் கண்டு சொல்லொணாத மனவேதனை.

அந்தப் பாறையின் சரிவான ஒரு பகுதியில், சுவாமிகளின் ஸ்தானத்துக்குச் சற்று இறக்கமாக, மரியாதையுடன் உட்கார்ந்து ஈஸ்வரத் தியானத்தில் ஆழ்ந்துவிட்டார்கள். உண்மையில் அது தியானம் அன்று, மௌனமான பிரார்த்தனையே.

எவ்வளவு நேரம் சென்றதோ?

சற்றே அபூரணம் பெற்ற அன்றைய நிலா, உச்சிவானத்தின் மைய விளிம்பைத் தொட்டது போல மேலேறி வந்துவிட்டது.

சுவாமிகளின் சரீரம் சிறிது அசைந்தது. அசைந்ததெல்லாம் இவ்வளவே. பாறையில் கிடந்த மற்றொரு காலையும் எடுத்து சப்பாத்தியின் மேல் போட்டார். தாங்க முடியாத சுமை கீழே விழுந்தது போல, கால் 'தொப்' பென்று சப்பாத்தியில் விழுந்தது. எத்தனை முட்கள் அந்த மிருதுவான கால்களில். குத்தினவோ என்று கவலைப்படத் தொடங்குமுன்பே, நல்ல பாம்பு ஒன்று சப்பாத்தி புதரிலிருந்து திடீரென்று சீறி எழுந்து, தன் படத்தை அகல விரித்து, தலையைச் சாய்த்த வண்ணம் மிகவும் பலமாக சுவாமிகளின் இடது பாதத்தில் மோதிக் கடித்து விட்டது. பாம்புக் கடியினால் சுவாமிகளின் மேனியில் சிறிதாவது சலனம் ஏற்படட்டுமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிஷ்யர்களின் ரத்தம் உறைந்து விட்டது. அடுத்தவனைப் பாம்பு படம் விரித்துக் கடிப்பதை மனித வர்க்கமே கண்ணாரக் காண்பது, அது தான் முதல் தடவையோ என்று கருதக்கூடியவாறு அவ்வளவு பிரத்யக்ஷ நிலையில் நடந்தேறிய இந்த அபாயத்தைக் கண்டு எழுந்து ஓடிய அந் நால்வரும் சம்பாத்தியிலேயே மிதித்தார்கள். ஒவ்வொரு முள்ளும் ஒரு விஷப்பல்லாகக் குத்தியது. ஆனால் பாம்பு இவர்களை நோக்கி வரவில்லை. வேறு திசையில் நெளிந்து விட்டது. பாறையின் மேல் மின்னி நெளிந்த அதன் சரீரம், பாறையில் ஏதோ விஷ ஊற்றுக் கிளம்பி வடிந்தது போல் இருந்தது.

இனி சுவாமிகளை எழுப்பாமல் இருந்தால் மரியாதைக்கு அர்த்தம் கிடையாது. பூவைப் போலத் தொடுவது போய், தரையில் புதைந்த ஆணிவேரைப் பிடுங்குவது போல் அவ்வளவு முரட்டுத்தனமாக சுவாமிகளைத் தூக்கி உட்கார வைத்தனர்.

நிர்மலானந்தர் எழுந்து அமர்ந்தார். அவருடைய விழிகள் மலர்ந்தன. வாயிலிருந்த சருகுகளைத் துப்பினார். துப்பும் போது, பாதிமென்ற கள்ளிப்பழம் ஒன்று முறிந்த முள்ளுடன் பாறையில் விழுந்தது.

''இதுவா ஆகாரம்? '' என்று பிரமித்தார் உடன் சென்ற கிழவர்.

நிர்மலானந்தரின் ஆகாரம் எதுவென்று அவருக்கு இவ்வளவு காலத்துக்குப் பின் அன்றுதான் தெரிய வந்தது. காரணம் கிழவர் ஊருக்குப் புதிது.

''தங்களை விஷம் தீண்டிவிட்டது" என்று சொன்னான் ஒரு சிஷ்யன். வாயை ஒரு கையால் மூடிக் கொண்டே.

மற்ற இருவரும், இரண்டு கால்களிலும் உள்ள சப்பாத்தி முட்களைத் தடவித் தடவிப் பிடுங்கினார்கள். அவர்களுடைய கைகளில், முள் தைத்த புண்களில் கசிந்த ரத்தம் படிந்து படிந்து மருதாணியிட்டது போல மாறி விட்டது.

''முட்களா? அவற்றை ஏன் பிடுங்க வேண்டும்?'' என்று சர்வசாதாரணமாகச் சொல்லிவிட்டு, ''எப்போது பாம்பு கடித்தது?" என்று கேட்டார் சுவாமிகள்.

கிழவர் ஆச்சரியத்தினால் ஸ்தம்பித்துவிட்டார்.

நடந்த விருத்தாந்தத்தைச் சுருக்கமாகச் சொல்லி முடிக்கு முன்பே, நிர்மலானந்தர் ''பாரம் தாங்கமுடியவில்லை, படுக்க வேண்டும்" என்று பாறையில் சாய்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாம்பு கடித்ததின் விளைவாக நிர்மலானந்தர் மயக்கம் எய்தி, பிதற்றுகிறாரென்றே நால்வரும் நினைத்தனர். விஷம் தலைக்கேறிக் கொண்டிருக்கிறது என்பது உண்மைதான் என்றாலும், பாரம் விஷத்தினால் வந்ததல்ல, மாமிசபிண்டத்தைத் தூக்கிச் சுமப்பது நிர்மலானந்தர் நெடுநாளாக அனுபவித்து வரும் வேதனை. அன்று சுமக்கவே முடியாமல் போனதனால்தான் பாறையில் போய்ப் படுத்துவிட்டார்.

பின்னும் காலதாமதம் கூடாது என்று நிர்மலானந்தரை மூவரும் எடுத்துச் சுமந்து ஆஸ்ரமத்தை நோக்கிப் புறப்பட்டார்கள். தாம் நடக்கவே சிரமப்படும் கிழவர் பரிவோடு ஒரு கையினால், நிர்மலானந்தரின் சரீரத்தைச் சுமக்க முடியாவிட்டாலும், தொட்டுக் கொண்டு தள்ளாடி நடந்து வந்தார்.

பாதி வழி தாண்டுமுன்பே, சுவாமிகளின் உதடுகள் ஒரு பக்கம் கோணித் திறந்தன. வாயில் கொப்பளித்த நுரை சிலந்திப் பூச்சியின் நூல்களைப் போலக் காற்றில் ஆடி அறுந்தன. நிர்மலானந்தரின் மண்ணுலகத் தொடர்பு நுரை நூலைக் காட்டிலும் இலகுவாக, அவ்வளவு அரவம் அற்று அறுபட்டது. நிர்மலானந்தர் தம் வாழ்நாளெல்லாம் சுமந்த பாரத்தைத் தம் சிஷ்யர்களின் தோளிலும் தலையிலும் இறக்கி வைத்து விட்டுப் போய்விட்டார்.

உபதேசத்துக்காகவும், ஆசீர்வாதத்துக்காகவும் வந்த ஜனங்களின் முன் நிர்மலானந்தரின் சரீரத்தைக் கொண்டு வந்து சேர்த்தார்கள் சிஷ்யர்களும் கிழவரும்.

மறுநாள் ஆஸ்ரமம் கல்லறையாக மாறியது.

*** *** ***

மண்பாண்ட ஓடு உடைந்து விட்டது. மாயக் குயவர் அந்த ஓட்டைச் சமைத்து அதன் உள்ளேவைத்து அனுப்பிய ஆன்ம அமிர்தம் திவலை கூட மண்ணுலகக் குழப்பத்தில் சிந்தாமல் சிதறாமல், கொடுத்தாலும் குறைவு படாத நித்ய பூரண வஸ்துவாய், குயவரிடமே திரும்பியது. அமிர்தம் ஆக வேண்டிய காலம் ஆகி நன்கு பண்பட்டு, சுவையோடும் திண்மையோடும் சுவர்க்கம் புகுந்தது.

நிர்மலானந்தர் மறைந்தார்; நிர்மலானந்தம் எஞ்சியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணற்ற முனிவர்களின், புண்ணிய புருஷர்களின், ஆன்ம சொரூபங்கள் இன்பத்தின் பரவெளியில், அமரபோகம் துய்த்துக் கொண்டிருக்கும் அந்தத் தெய்வ மண்டலத்தில் நிர்மலானந்தருக்கு மரியாதை மிகுந்த பீடம் கிடைத்தது. என்றுமாய், எதுவுமாய், காலமும் தூரமும் அற்றிருக்கும் இந்தச் சுவர்க்க போகம் அல்ல நிர்மலானந்தருடைய நித்ய தபசின் கோரிக்கை. மண்ணுலகத்தைத் துறந்த இதயம், விண்ணுலகத்தில் அதைப் பெற்று அனுபவிக்க விரும்பவில்லை.

இன்னும் 'நான்' நசியவில்லை, 'அவன்' இன்னும் அவனாகத்தான் இருக்கிறான். 'அவன்', 'நான்' ஆகவில்லை 'நான்', 'அவன்' ஆகவில்லை. கேவலம் தூல சரீரத்தைக் களைந்துவிட்டால் ஈஸ்வர ஐக்கியம் கிட்டி விடுமா?

இன்னும் எத்தனை வருஷங்கள், எத்தனை வியாழ வட்டங்கள் தபசிருக்க வேண்டுமோ, அந்த அத்வைத நிலையைப் பெறுவதற்கு? நல்லவேளையாக இங்குக் காலம் என்ற பிரக்ஞை இல்லை. ஆனாலும், சுவர்க்கத்தின் போக நிலத்தில், புழுவெனத் துடித்து உபசாந்தப் பரவெளியை நோக்கித் துள்ளித் துள்ளிக் குதித்துக் கொண்டிருந்தது நிர்மலானந்தரின் ஜீவான்மா.

பரமான்மா வந்தது; பூலோகப் பஞ்சாங்கப்படி. நிர்மலானந்தரின் ஆன்மா சுவர்க்கத்துக்குப் போன பதினைந்தாம் நாளில் கடவுள் அந்தப் புதிய விருந்தைக் காண வந்தார். மோனப் பிரார்த்தனை அன்றே கடவுளுக்கு எட்டியது என்றாலும், சுவர்க்கானுபவச் சதுரங்கத்தில் நிர்மலானந்தரின் ஆத்ம விளையாட்டு வெற்றி பெறுகிறதா, தோற்கிறதா என்று பரிசோதனை செய்யத் தொடங்கியதுதான் இந்தப் பதினைந்து நாள் தாமதத்துக்குக் காரணம்.

பதினைந்து நாட்களுக்குப் பின் நிர்மலானந்தரின் முன் பிரசன்னமானார் கடவுள். வாழ்நாளெல்லாம் தபசில் கழித்த தம் பக்த சிரோன்மணிக்கு இந்தப் பதினைந்து நாளைய அனுபவம் எவ்வளவு பெரிய சுகத்தை அள்ளிக் கொடுத்திருக்கும் என்று எண்ணி ஆனந்த பரவசத்துடன் பக்தனைக் காண வந்தார். மறு தினந்தான் நிர்மலானந்தரின் கடைசித் தளையை, எஞ்சியிருக்கும் 'நான்' என்ற பிரக்ஞையை, சுட்டறுப்பது என்பது தெய்வத் திருவுள்ளம்.

தெய்வ விஜயம், பிரக்ஞையைப் போன்ற ஒரு சங்கேதத்தின் மூலம் நிர்மலானந்தருக்குத் தெரிந்தது. இறைவனின் பாதத்தில் மலர்ப்பலி இடுவதைப் போல தம் ஆத்மாவைப் பரிபூரணமாகச் சமர்ப்பித்தார் நிர்மலானந்தர்.

''சுவர்க்கம் பிடிக்கவில்லைப் போலும்! உம் கோரிக்கையை அறிந்தோம். உம் ஆத்மத் தேட்டம் விரைவில் சித்திபெறும்'' என்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள்.

கடவுளின் வார்த்தைகளை எல்லாம் கிரகித்துக் கொண்டாலும், சுவர்க்கம் என்ற பதம் நிர்மலானந்தரைப் பிரமிக்கச் செய்து விட்டது.

''சுவர்க்கம்!...... சுவர்க்கம் என்றால்......... அப்படியானால் தற்போதைய வாசஸ்தலம் சுவர்க்கம் தானா?' என்ற திகைப்பு நிர்மலானந்தரை ஊமையாக்கி விட்டது. எழுதாக் கிளவிக்கு நாயகனாக இலங்குபவனுக்குப் பேசாத சிந்தை, தாய்மொழியைப் போலப் பரிச்சயப்பட்ட வஸ்து. நிர்மலானந்தரின் திகைப்பு அவருக்குப் புரிந்தது.

''சுவர்க்கம் இல்லாமல் வேறு என்ன? நரகம் என்று நினைத்தீரா?"

கடவுள் சிரித்தார்.!

''எதுவும் நினைக்கவில்லை. சுவர்க்கத்துக்கும் நரகத்துக்கும் பேதம் காணும் அந்தச் சரீர பரிசோதகன் என்றோ சாம்பலாகிவிட்டான் என்பது தாங்கள் அறியாதது அல்லவே? மண்ணுலகிலும் கூட மலருக்கும் முள்ளுக்கும், மலருக்கும் விஷப் பல்லுக்கும் வேற்றுமை கண்டறியாதிருந்த ஜீவன் இப்போது ஐம்பொறிக் கூட்டை உதறிவிட்ட பிறகு சுவர்க்கத்தை எங்ஙனம் உணரும்? நரகத்தை உணர்வதும் எங்ஙனம்?"

*** *** ***

மாயக் குயவர் எத்தனையோ லட்சோபலட்சம் மண்பாண்டங்களை வனைந்து கொண்டிருக்கிறார். அவற்றில் எத்தனை பங்கப்படாமல், விதித்திருக்கும் காலவரையறை வந்து சந்திக்கும் வரையிலும் பயன்பட்டு, விளைபயன்களை விண்ணுக்கு அனுப்புமோ? எத்தனை மண் பாண்டங்கள், கூத்தாடிக் கூத்தாடித் தம்மையே உடைத்துப் பாழாக்கிக் கொள்ளுமோ? மண் பாண்டங்கள், பற்பல உருவில், பற்பல வர்ணங்களில் தயாராகிக் குவிந்திருக்கின்றன.

குயவர் ஒரு சிறு பாண்டத்தை உருவாக்க முயன்று கொண்டிருக்கிறார். அது பூவுலகில் ராஜகுமாரனாக வந்து பிறக்குமோ, ஒரு முனிவனாக வந்து அவதரிக்குமோ தெரியவில்லை. ஆனால், பாண்டம் உருப்பெறாமல் குலைந்து சரிந்து கொண்டிருந்தது. வேறு பல கலவைகளைச் சேர்த்துக் குழைத்துப் பாண்டத்தை உருவாக்க முயன்றார் குயவர். பழையபடியும் அது கருவிலேயே சிதைவுற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் பல கலவைகளைக் கலந்து திரும்பவும்.......

கடவுள் நையாண்டிச் சிரிப்புச் சிரித்தார்.

''மாயக் குயவரே! பாண்டத்தின் உருவ அமைப்பைச் சிதையாமல் நிறுத்தி வைக்கும் பிரதானமான கலவை என் அடைக்கலத்தில் உள்ளது.''

கைசோர்ந்து போய் வணக்கத்துடன் திரும்பிப் பார்த்தார் மாயக்குயவர்.

''ஜீவான்மா ஒன்று மண்ணுலகிலிருந்து விடுதலை பெற்றுத் துறக்கம்பெற்றது. பிரம்ம ஐக்கியம், இரண்டறக் கலக்கும் அத்வைத நிலை- இதுதான் அதன் இன்றையக் கோரிக்கை. அந்த ஆன்மாவும், அதன் கோரிக்கையும் அந்தரத்தில் நிற்கும்போது பாண்டத்தை உருவாக்குவது எப்படி?''

மௌனமாக இருந்தார் மாயக்குயவர்.

மண்ணுலகில் அது மலருக்கும் முள்ளுக்கும் பேதம் காணவில்லை. புலன்களைச் சுட்டறுக்கும் தபசை மேற்கொண்டு விட்டது. சுவர்க்கம் எய்தியது.

சுவர்க்கத்தின் தன்மை அந்த ஜீவனைத் தீண்டக் கூட இல்லை. சுவர்க்கத்தில் இருக்கிற பிரக்ஞையாவது இருக்கட்டுமே! இன்று அதை நரகத்துக்கு அனுப்பினாலும் இன்றைய நிலையை இழக்காத பக்குவத்துடன் அது இருக்கிறது.

அது வேண்டுவது பிரம்ம ஐக்கியம், பரமாத்ம- ஜீவாத்ம சங்கமம். அது கிட்டினால் அந்த ஆத்மா மாறுதல் பெற்றுவிடுமா? இன்ப துன்பத்தை உணராத பேரின்ப உபாசகனாக இருந்த அந்த ஆத்மா எம்மோடு அத்வைத நிலையில் இருந்தால் என்ன, ஆஸ்ரமத்தில் சந்நியாசியாக இருந்தால் என்ன? இரண்டும் ஒன்றுதான்.

இன்ப துன்பத்தை உணராது சென்றாலும் கூட இந்தத் தபசு பயங்கரத் தபசு. சுவர்க்க, நரக பேதங்களையும், அத்வைத வெளியையும் ஆஸ்ரம வெளியையும் ஒன்றாக்கும் படியான இந்தப் பயங்கரத் தபசு சுவர்க்கத்திலும் சுகம்காணவில்லை. பரப்பிரம்மத்திலும் சுகம் காணப்போவதில்லை. மரத்துப்போனது, செத்தது, எங்கே கிடந்தால் என்ன? முக்தியும், முதல்வனும் சாலையோரச் சத்திரங்களாகிவிட்டன. லட்சிய ஸ்தானங்களாக இல்லை. அந்த ஆத்மாவுக்கு இனி எந்த வழியைக் காண்பிப்பது.?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தபசிற்குப் பலனாக, சுகமான வாழ்க்கையை, உணர்ந்து துய்க்கும் ஒரு பிறப்பை பழையபடியும் அதே பூலோக வாழ்க்கையை, அதற்குச் சுட்டிக் காட்டுவதை விடச் சிறந்த பிரதி உபகாரம் வேறு எதுவும் இல்லை. அதற்குச் செய்யும் பேருதவியும், பரிகாரமும், பிராயச்சித்தமும் அதுவே.

நிர்மலானந்த சுவாமிகள் காலமான பதினாறாம் நாளில், ஆஸ்ரமத் தோட்டத்தின் நடுவில் சிவலிங்கம் வைத்துக் கட்டப்பட்டு இன்னும் ஈரம் உலராது இருக்கும் அவருடைய சிமிண்ட் சமாதியின் தென்புறத்தில், அன்று தான் பிறந்த ஒரு அணில் குஞ்சு, மண்ணுலகை முதல் முதலாக ஸ்பரிசித்துக் கொண்டிருந்தது. அதன்மேல் படும் காலை இளவெய்யில் அதற்குச் சுவர்க்க போகமாக இருந்தது. தன்னை மறந்து, அந்த இன்பத்தில் ஆழ்ந்து, அதில் இரண்டறக் கலக்கவும் செய்தது அந்த அணில் குஞ்சு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11

கு. அழகிரிசாமியின் கதைகள்

நாற்பத்தேழு ஆண்டுகளே வாழ்ந்த கு. அழகிரிசாமி, எட்டுச் சிறுகதைத் தொகுதிகள், 'டாக்டர் அனுராதா', 'புதுவீடு புது உலகம்', 'தீராத விளையாட்டு' ஆகிய நாவல்கள், 'கவிச்சக்கரவர்த்தி', 'வஞ்சமகள்', ஆகிய நாடகங்கள், ஏழு கட்டுரைத் தொகுதிகள் மற்றும் மொழிபெயர்ப்புகள், கம்ப ராமாயணத்தின் பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரணியகாண்டம், கிஷ்கிந்தா காண்டம் அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்து என்று பதிப்பித்த புத்தகங்கள் என தன் குறுகிய வாழ்நாட்களுக்குள் செய்திருப்பவை ஏராளம்.

கோவில்பட்டியை அடுத்த இடைச்செவல் கிராமத்தில் ஒரு விவசாயக் குடும்பத்தில் 1923 செப்டம்பர் 23 இல் பிறந்தவர் கு. அழகிரிசாமி. இயற்பெயர் செல்லையா. இளம்வயதில் ஏற்பட்ட ஒரு சிறு விபத்தின் காரணமாக இடது கை பலவீனமான நிலையில், விவசாய வேலைக்குச் செல்ல முடியாமல் பள்ளிப்படிப்பை மேற்கொண்டிருக்கிறார். படிப்பு முடிந்ததும் சப்ரிஜிஸ்டிரார் ஆபிஸில் குமாஸ்தா வேலையில் சேர்ந்த அழகிரிசாமி, இலக்கிய ஆர்வம் காரணமாக, வேலையை ராஜினாமா செய்துவிட்டு சென்னைக்கு வந்து, பிரசண்ட விகடனில் உதவி ஆசிரியராகச் சேர்ந்தார். 1952 இல் மலேஷியாவிற்கு தமிழ்நேசன் பத்திரிகையில் வேலை பார்ப்பதற்காகச் சென்றார். 1957 வரை அங்குள்ள தமிழ் இலக்கிய ஆர்வலர்களுக்கு பெரும் உத்வேகமாக இருந்தார்.

இசை ஆர்வம் கொண்ட அழகிரிசாமி 1955 இல் மலேஷிய இசைக்குடும்பத்தைச் சேர்ந்த சீதாலட்சுமியை காதலித்து மணந்து கொண்டார். அது கலப்புத் திருமணமும் கூட. 1957-இல் சென்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பி 13 வருடங்கள் திருவல்லிக்கேணியில் தங்கி, பத்திரிகைகளில் வேலைபார்த்துக் கொண்டே இலக்கியப் பணியைத் தொடர்ந்தார். சக்தி, தமிழ்மணி, நவசக்தி, சோவியத் நாடு, ஆகிய பத்திரிகைகளில் பணியாற்றினார்.

மீண்டும் மலேசியா, சென்னை என்பதாகவே அழகிரிசாமி வாழ்க்கைச்சூழல் அமைந்தாலும், தம்முடைய கிராமிய வாழ்க்கை மதிப்பீடுகள் மற்றும் நினைவுகளுடனேயே, அவர் இறுதிவரை வாழ்ந்திருக்கிறார். இசை குறித்தும், நாட்டுப்புறப் பாடல்கள் குறித்தும் கிராமிய சொல்லாடல்கள் குறித்தும் அவர் கொண்டிருந்த உத்வேகங்கள், கரிசல்புற வாழ்நிலையும் மனிதர்களும், ஓசைகளும் அவருக்கு அளித்த மனச்சித்திரங்கள்தான். நடுநிசியில் வண்டி ஓட்டிச் செல்கிறவனின் தெம்மாங்குப்பாட்டு, ஏற்றம் இறைக்கிறவர்களின் கீதம், காலையில் ஊர் கோயிலில் வாசிக்கும் நாதசுரத்திலிருந்து பிறக்கிற பூபாளராகம், இரண்டு மைல்களுக்கப்பால் உள்ள தண்டவாளத்தில், சீட்டி அடித்துக்கொண்டு ஓடும் ரயில் முழக்கம் என மண்ணுலகத்து நல்லோசைகளை ரசிக்கும் அழகிரிசாமிக்கு சென்னையில் 'முள்ளங்கி, முள்ளங்கி' என்று கூவி விற்கும் ஏழைச்சிறுவர்களின் குரலும், கோலப்பொடியை 'மொக்குமாவு' என்று கூவி விற்கும் ஏழைச்சிறுமியின் குரலும், காற்றோடு கலந்து சங்கீதமாக ஒலிக்கின்றன.

தான் எதிர்கொள்ள நேர்ந்த வாழ்க்கையையும், மனிதர்களையும், பிரபஞ்சத்தையும் அதன் இயல்புத் தன்மையுடன் வருத்தங்கள் இன்றி நேசிக்கவும், இரசிக்கவும் தெரிந்த ஒரு கலைஞராகவே அழகிரிசாமி தென்படுகிறார். வறுமையும், இம்சையும் மனிதவாழ்வை சூறையாடுவது கண்டு பரிவும் நெகிழ்ச்சியும் கொள்ளும் இவருடைய எழுத்து, பொய்யான நம்பிக்கைகளை அளிக்காமல் நிதர்சனம் குறித்த தெளிவை நோக்கி அழைப்பதாகவே உள்ளது. தீர்மானமான முடிவுகளின்றி, வாழ்க்கையின் இயல்புத் தன்மையையும், சாத்தியங்களையும் அங்கீகரித்த அதே சமயம், ஒரு கேலியான விலகல் பார்வையுடன், வேடிக்கை மனிதராக உலவுகிறார் அவர்.

''அழகிரிசாமியின் கதைகள் மனநிலைகளை நுணுக்கமாக விவரிப்பதாலும், சௌந்தர்ய உணர்ச்சியின் பரிமாணத்தையும், உள்வளைவுகளையும் தாங்கியிருப்பதாலும், ஒரு நூதன சிரிப்புத்தன்மை பொருந்தி இருப்பதாலும் பிரத்யட்ச உலகின் தொடர்பு அறாமல் இருப்பதாலும் நம்மைக் கவருகின்றன'' என்று நகுலன் குறிப்பிடுவது போல கு.அழகிரிசாமியின் அழகியல் தன்மை புத்துணர்ச்சியும், ஈர்ப்பும் கொண்டு அவருடைய எழுத்தை சுவாரஸ்யமானதாக்குகிறது. உணர்ச்சி கலவாத ஒரு அன்புப் பிரவாகம் அவருடைய பார்வையை வடிவமைக்கிறது. இதனால் விலகிநின்று பார்க்கக்கூடிய ஒரு ஆனந்தம் இவருக்கு சாத்தியப்படுகிறது. 'குமாரபுரம் ஸ்டேஷன்' கதை இதற்கு ஒரு நல்ல சாட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை முழுவதும் ஒரு வெகுளித்தனமான சந்தோஷமும், அமைதியும் விரவிக்கிடக்கின்றன. இதேபோல் 'ஞாபகார்த்தம்' கதையில் காதலுக்காக ஏங்கித் தவிக்கும் இரு உள்ளங்களின் பரிதவிப்பு, நுட்பமாக வடிவம் பெற்றிருக்கிறது. தங்கள் காதலை நேரடியாகச் சொல்லத் தெரியாமல் தவித்துப் பூடகமாக உணர்த்தும் குறிப்புகளும் எட்டாமல் போய் எதிர்பாராத ஒரு தருணத்தில், மனம் திறந்து கொள்வதை மெல்லிய குதூகலத்துடன் சொல்கிறது கதை.

அவலங்களும் அவஸ்தைகளும் போலவே வாழ்க்கையில் விபத்துகளும், வேடிக்கைகளும், விசித்திரங்களும் நிரம்பியிருப்பதை ஒருவிதமான நிலையில் கு. அழகிரிசாமியால் பார்க்கமுடிகிறது. அதுவே அவருடைய கலைக்கு ஒருவித சரளத்தன்மையையும், செறிவையும் கொடுக்கிறது. சிறுசிறு விஷயங்கள் கூட அவருடைய பார்வையில் விசேஷக் கவனம் பெற்று, கதைகளுக்கான சாத்தியங்களை அதிகரிக்கின்றன. ஒருவன் சுவரேறி மற்றொரு வீட்டில் குதிப்பதை வைத்து, ஆதாரமின்றி எழுப்பப்படும் வதந்திகள், எப்பக்கமும் சாயக்கூடிய தன்மை கொண்டிருப்பதை 'ஆதாரம் இருக்கிறதா' கதையில் பார்க்கலாம்.

அதேபோல் ஒரு இளைஞன் ஒரு அழகான பெண்ணுடனும், ஒரு அழகில்லாத பெண்ணுடனும் பழகும்போது எழுப்பப்படும் சந்தேகங்களின் உளவியல் தன்மையை 'இரண்டு பெண்கள்' மையப்படுத்துகிறது. தாமதமாகச் செல்லும் ஒரு பஸ்ஸில் பயணிக்கும் ஒவ்வொருவருக்கும், தங்களுடைய அவஸ்தை முன்னுரிமை பெறுவதை 'உலகம் யாருக்கு' கதை சொல்கிறது. 'காதல் போட்டி'யில் காதலிக்கக் கூடாது என்று போட்டி போட்டுக்கொண்டு வெறுப்பை வளர்த்துக் கொள்ளும் இருகாதலர்கள், அந்த வெறுப்பு அனுதாபத்தில் முடிவதை ஆச்சரியத்துடன் பார்க்கிறார்கள். வாழ்க்கையின் விசித்திரமான உணர்வுகள் குறித்த அழகிரிசாமியின் கவனம் அவருடைய கதைகளுக்கு ஒரு வசீகரத்தை அளிக்கிறது.

முக்கியமற்று தனித்துவம் இழந்த, உதிரி மனிதர்களே பெரும்பாலும் அழகிரிசாமி கதைகளில் இடம்பெறுகின்றனர். காற்றுக்காக ஏங்கும் ஏழைச்சிறுமியும் (காற்று), தன் வீட்டுக்கு அனாதையாக வந்த சிறுவனைக் கொண்டு பணக்கார பள்ளித்தோழனின் கொட்டத்தை அடக்கும் ஏழைப்பெண்ணும் (ராஜா வந்திருக்கிறார்) மகனுக்காக அல்லல்பட்டு அவனுடன் சேரத் தவித்து கடைசியில் அவன் அந்தஸ்து கண்டு பின்வாங்கும் கிழவியும் (கிழவியின் லட்சியம்), அம்மா இறந்தது கூடத் தெரியாமல், அம்மாவின்மேல் போர்த்தப்பட்டிருக்கும் வெள்ளைத்துணி, தங்கள் குளிருக்கு உதவும் என்று கனவு காணும் சிறுவர்களும் (இருவர் கண்ட கனவு) தெய்வக் குற்றத்தையும் மதிக்காமல் சாமிக்கு சார்த்திய ஆடையை அணிந்து, கழிவிரக்கம் கொள்ளும் பூசாரியின் மனைவியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அக்னி கவசம்) பசிக்காக எதையும் இழக்க தயாரான நிலையிலும் கடைசி நேரத்தில் கௌரவம் காத்து, கணநேர திருப்தி கொள்ளும் ஒடிந்து போன மனிதர்களுக்காக (முருங்கைமர மோகினி, சுயதரிசனம்) போலித்தனமான கற்பிதங்களுக்குள் ஆழ்ந்து போகாமல், இயல்பான மனிதர்களை உலவ விடுகிறார் கு.அழகிரிசாமி. பல்வேறு தீவிர உணர்ச்சிகளும், கணங்களும், குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் சாதாரணமாகிப் போவதை அவரது கதை சொல்லிச் செல்கிறது.

இந்த நூற்றாண்டின் சிறப்பான வடிவமாக சிறு கதையை இனம் காணும் கு.அழகிரிசாமி தமிழின் சிறுகதைச் சாதனைகள் குறித்து உயர்வான நம்பிக்கை கொண்டுள்ளார். நவீன உலகின் சிக்கல்களைக் கணக்கில் கொண்டு அதிக பரிமாணங்களை கு.அழகிரிசாமி வெளிப்படுத்தாவிட்டாலும் குறிப்பிட்ட எல்லைகளில் இருந்துகொண்டு, தன்னளவில் ஒரு பொருள்பொதிந்த உலகத்தை உருவாக்கியவர் என்று உறுதியாகக் கூறமுடியும்.

முதுகுத்தண்டில் ஏற்பட்ட எலும்புருக்கி நோய் காரணமாக இதயம் பழுதடைந்து 1970 ஜுலை 5இல் அழகிரிசாமி காலமானார். 1971 இல் அவருக்கு இலக்கியத்துக்கான, சாகித்ய அகாதமி விருது வழங்கப்பட்டது. பல வாழ்க்கைப் போராட்டங்களின் நடுவிலும் கலை என்பது வாழ்க்கையின் சுவையை அதிகரிப்பது என்பதை உணர்ந்து வாழ்ந்த கு.அழகிரிசாமி சிறுவயதில் இறக்க நேர்ந்தது ஒரு அசம்பாவிதம் தான். இந்திய சாகித்ய அகாதமி இவரது கதைகள் அனைத்தையும் கொண்ட பாரிய சிறுகதைத் தொகுதி ஒன்றினை வெளியிட்டுள்ளது.

(வெளி. ரங்கராஜன் ''தீராநதி"யில் எழுதிய கட்டுரையிலிருந்து தொகுக்கப் பெற்றது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12

ஈழத்தில் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சி

இன்று மக்களால் பெரிதும் விரும்பிப் படிக்கப்படும் இலக்கிய வகையாகச் சிறுகதை விளங்குகிறது. இத்துறை காலந்தோறும் பல்வேறு அரசியல் பொருளாதாரச் சூழல்களினால் பாதிக்கப்பட்டுச் செம்மையும் பொலிவும் பெற்று வளர்ந்துள்ளது.

ஈழத்தில் சிறுகதை இலக்கியம் இன்று தனிச்சிறப்புப் பெற்று மிளிர்கிறது. சிறுகதைத் தொகுதிகள் நாளுக்குநாள் வெளிவந்த வண்ணமுள்ளன. வார இதழ்களும், சிற்றிதழ்களும் சிறுகதைகளை விரும்பிப் பிரசுரிக்கின்றன. இந்நிலையில் ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியினை சிறிது நோக்குவோம்.

1930 ஆம் ஆண்டளவில் ஈழத்திலும் சிறுகதை இலக்கியம் தோன்றுவதற்கான சூழ்நிலை உருவாயிற்று. மேலை நாட்டு இலக்கியங்களின் தொடர்பு தமிழ் நாட்டு எழுத்தாளர்களின் படைப்புக்களின் தாக்கம் இத்தகைய சூழ்நிலையினை உருவாக்கியது. ஈழத்துச் சிறுகதை இலக்கிய முன்னோடிகள்- மூலவர்களெனப் போற்றப்படும் சி.வைத்தியலிங்கம், இலங்கையர்கோன், சம்பந்தன் ஆகியோரின் கதைகள் 'கலைமகள்', 'கிராமஊழியன்' பத்திரிகைகளில் வெளியாயின. இவர்களது கதைகளில் தமிழ்நாட்டு எழுத்தாளர்களான கு.ப.ரா,பிச்சமூர்த்தி, சிதம்பர சுப்பிரமணியன், மௌனி ஆகியோரின் நேரடித் தாக்கமும், மேலைநாட்டுச் சிறுகதைகளின் பாதிப்பும் காணப்பட்டது. எனினும் ஈழத்து மண்வாசனையும், கிராமிய மக்களின் வாழ்க்கைச் சித்திரிப்பும் பெருமளவு பிரதிபலித்தது.

1940 - 1950 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் ஈழத்தில் சிறுகதை எழுத்தாளர்கள் பலர் உருவாகினர். இலக்கியம் சமூகத்தைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்திருத்தவும். புதியதோர் சமூகத்தை உருவாக்கவும் பயன்பட வேண்டும் என்ற இலட்சிய வேட்கையுடன் இவர்கள் தமது படைப்புக்களை வெளியிட்டனர். பிரதேச மண் வாசனையுடன் கூடிய சிறுகதைகள் பல உருவாகின.

பண்டிதர் க.சச்சிதானந்தன் (ஆனந்தன்) அ.செ.முருகானந்தன், அ.ந.கந்தசாமி, வ.அ.இராசரத்தினம், வரதர் (தி.ச.வரதராசன்), கனக.செந்திநாதன், சொக்கன், சு.வேலுப்பிள்ளை (சு.வே), க.சிவகுருநாதன், சு.நல்லையா, தாழையடி சபாரத்தினம், சு.இராஜநாயகம் போன்றோர் இக்காலகட்டத்தில் குறிப்பிடத்தக்க சிறுகதை எழுத்தாளர்களாவர். தமிழகத்தில் 'மணிக்கொடி'க்காலம் போன்று ஈழத்தில் இக்காலத்தை 'மறுமலர்ச்சி'க் காலம் எனவும் கூறுவர். 1945 ஆம் ஆண்டில் ஆரம்பமான 'மறுமலர்ச்சி' புதிய பல எழுத்தாளர்களை மட்டுமன்றிப் புதிய பல கருத்துக்களையும் அறிமுகப்படுத்தியது.

ஈழத்தில் 1956 இல் ஏற்பட்ட அரசியல் மாற்றம் தமிழ் இலக்கியத்துறையில் பாரிய மாற்றத்தை உருவாக்கியது. 1956-1960 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலகட்டம் ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியில் முக்கிய மானதோர் திருப்புமுனையாக அமைந்தது.

இக்காலகட்டத்தில், 'வீரகேசரி', 'தினகரன்', 'சுதந்திரன்', 'தேசாபிமானி' போன்ற பத்திரிகைகள் ஈழத்துச் சிறுகதை வளர்ச்சிக்கு ஊக்கமளித்தன. 'சுதந்திரன்' புதிய எழுத்தாளர் பலரை அறிமுகப்படுத்தியது. சிறுகதையின் உருவ, உள்ளடக்க அடிப்படையில் விரிவான சோதனை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சமூக, பொருளாதார அடிப்படையிலான முரண்பாடுகளின் விளைவுகளைச் சித்திரிக்கும் வகையில் சிறுகதைகள் பல வெளியாயின.

டொமினிக்ஜீவா, டானியல், எஸ்.அகஸ்தியர், எஸ்.பொன்னுத்துரை, செ.கணேசலிங்கம், என்.கே.ரகுநாதன், நாவேந்தன், பித்தன், சிற்பி, நவம், புதுமைலோலன், என்.எஸ்.எம்.இராமையா, காவலூர் இராசதுரை, நீர்வை, பொன்னையன், அ.முத்துலிங்கம், புதுமைப் பிரியை, மு.தளையசிங்கம், தேவன் - யாழ்ப்பாணம் போன்றோர் இக்காலகட்டத்தில் துடிப்புடன் பல சிறுகதைகளை எழுதினர்.

1960 - 1970 ஆண்டுக்காலப் பகுதியில் ஈழத்தில் மேலும் பல சிறுகதை எழுத்தாளர்கள் உருவாகினர். ஈழத்துப் பத்திரிகைகள் இவர்களுக்குப் பேரூக்கமளித்தன. இதன் பேறாகச் சிறுகதைத் தொகுதிகள் பல வெளியாயின. முனியப்பதாசன், செ.கதிர்காமநாதன், செ.யோகநாதன், நந்தி, யோ. பெனடிக்ற்பாலன், செம்பியன் செல்வன், செங்கையாழியான், கே.வி.நடராசன், தெணியான், க.சதாசிவம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெல்லை க.பேரன், குந்தவை, பவானி, நந்தி, தெளிவத்தை ஜோசப், மாத்தளை வடிவேலன், மலரன்பன், பூரணி, மலைச்செல்வன், சாரல் நாடன், மாத்தளைசோமு, திருச்செந்தூரன், நூரளை சண்முகநாதன், தையிட்டி அ.இராசதுரை போன்றோர் சிறந்த பல சிறுகதைகளைப் படைத்தனர்.

மலையகத் தொழிலாளர்களின் துயரம் தோய்ந்த வாழ்க்கையினைச் சித்திரிக்கும் சிறுகதைகள் பலவற்றை மலையக எழுத்தாளர்கள் எழுதினர். 1970 காலப் பகுதியில் சிறுகதை எழுதத் தொடங்கியவர்களுள் திக்குவெல்லை கமால், லெ.முருகபூபதி, பொ.பத்மநாதன், எஸ்.எம்.இக்பால், காவலூர் ஜெகநாதன், ப.ஆப்டீன், அ.பாலமனோகரன், அ.ஸ.அப்துல்ஸமது, சுதாராஜ், அன்ரனி ஜீவா, மு. கனகராசன், குப்பிளான் ஐ. சண்முகன், துரை சுப்பிரமணியன், மு. பொன்னம்பலம், ரஞ்சகுமார், என்.எஸ்.எம்.இராமையா ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர். எழுபதுகளின்பின் இன்றுவரை பல்வேறு சிறுகதை எழுத்தாளர்கள் ஈழத்தில் உருவாகியுள்ளனர். இவர்களின் படைப்புக்களின் கருப்பொருள்கள் மிக விரிவும், கூர்மையும் அடைந்துள்ளன. கிராமிய வாழ்க்கை, நகர்ப்புற வாழ்க்கை இரண்டுக்குமிடையிலான முரண்பாடுகள் மனித வாழ்வின் அவலங்கள், மற்றும் கண்ணில் படுகின்ற, மனத்தில் தைக்கின்ற அனைத்தும் சிறுகதைகளில் பிரதிபலிக்கின்றன. விமர்சிக்கப்படுகின்றன.

எண்பதுகளின் பின் படைக்கப்படும் சிறுகதைகளில் இனஒடுக்குமுறையும், அதன் தாக்கங்களும் விடுதலைப் போராட்டங்கள் தொடர்பான நிகழ்வுகளும் முக்கிய இடம் பெற்றுவருவதைக் காணமுடிகிறது. இடப்பெயர்வு, அகதிவாழ்க்கை, விடுதலை வேட்கை, பெண்ணிலைவாதச் சிந்தனைகள் போன்றவற்றை மையமாகக் கொண்ட அநேக சிறுகதைகள் இக்காலகட்டத்தில் வெளியாகியுள்ளன. முன்னர் எக்காலத்தையும் விட 1980 இன் பின் சிறுகதைத் தொகுதிகள் பல வெளிவந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

திருமதி கோகிலா மகேந்திரன், இணுவை சிதம்பர திருச்செந்திநாதன், சோ.ராமேஸ்வரன், மு.சட்டநாதன், மு.சிவலிங்கம், தாமரைச்செல்வி, கே.ஆர்.டேவிட், ச.முருகானந்தன், க. தணிகாசலம், உமாவரதராசன், சாந்தன், தி.ஞானசேகரன், ஆ.மு.சி.வேலழகன், ஓட்டமாவடி அறபாத், யோகேஸ்வரி சிவப்பிரகாசம், ஒலுவில் அமுதன், வாகரை வாணன் (எஸ்.அரியரத்தினம்) கெக்கிராவ ஸஹானா, திருக்கோவில் கலியுவன், இளையவன், எஸ்.எச்.நி ்.மத், முல்லைக் கோணேஸ், சித்ரா நாகநாதன், எஸ்,பி.கிருஷ்ணன் போன்றோர் இன்று புகழ்மிக்க பல படைப்புக்களைத் தந்துள்ளனர். புலம் பெயர்ந்து வாழும் ஈழத்து எழுத்தாளர்களது சிறு கதைகள், புலம் பெயர்ந்து அகதிகளாக வாழும் மக்கள் அனுபவிக்கும் இன்னல்களை அவர்களது வாழ்க்கைப் பிரச்சினைகளை நன்கு சித்திரிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுருங்கக் கூறின் தமிழ் நாட்டுச் சிறுகதை எழுத்தாளர்களை விட ஈழத்துச் சிறுகதை எழுத்தாளர்களின் படைப்புக்களில் சமுதாயப்பார்வை கூர்மை பெற்று விளங்குகின்றது எனலாம். இத்தகைய ஆராக்கியமான சூழ்நிலையில் ஈழத்துச் சிறுகதை வளர்ச்சி பெருமைப்படத்தக்க வகையில் அமைந்துள்ளது.

-புலவர் இளங்கோ-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13

இலங்கையர்கோன்

ஈழத்து இலக்கிய வானில் சுடர்விட்டுப் பிரகாசித்த எழுத்தாளர்களில் குறிப்பிடத்தக்கவர் 'இலங்கையர்கோன்'. இவரது இயற்பெயர் ந.சிவஞானசுந்தரம். 18 வயதிலேயே எழுத்துத்துறையிற் புகுந்த இவர் சமஸ்கிருதம், தமிழ், லத்தீன், ஆங்கிலம், ஆகிய மொழிகளில் ஆழ்ந்த பயிற்சியுள்ளவர். மண்வாசனை தவழும் இவரது படைப்புக்கள் ஈழத்தில் மட்டுமன்றித் தமிழகத்திலும் போற்றிப் புகழ்ப்பெற்றவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷேக்ஸ்பியரது படைப்புக்களில் மிகுந்த ஆர்வம் கொண்ட இலங்கையர்கோன் அதன் உந்துதல் காரணமாக ஒற்றையங்க, தொடர் நாடகங்கள் பலவற்றை எழுதினார். ‘பச்சோந்திகள்’, ‘லண்டன் கந்தையா’, ‘விதானையார் வீட்டில்’, ‘மிஸ்டர்குகதாசன்’, ஆதியாம் நாடகங்கள் எடுத்துக் காட்டுகளாகும். இந்நாடகங்கள் பன்முறை மேடையேற்றப்பட்டு வெற்றி பெற்றன.

‘ஈழகேசரி’, ‘கலைச்செல்வி’, ‘ஈழநாடு’, ‘தமிழின்பம்’, ‘வீரகேசரி’, ‘தினகரன்’, ஆகிய ஈழத்து இதழ்களிலும் ‘கலைமகள்’, ‘சூறாவளி’, ‘மணிக்கொடி’, ‘பாரதத்தாய்’, ‘சக்தி’, ‘சரஸ்வதி’, ஆகிய தமிழக இதழ்களிலும் இவரது படைப்புக்கள் வெளியாயின.

இவர் முப்பதுக்கு மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். 15 சிறுகதைகளைக் கொண்ட ‘வெள்ளிப்பாதசரம்’ என்னும் சிறுகதைத் தொகுதி 1962ஆம் ஆண்டில் வெளியாயிற்று. ‘மாதவிமடந்தை’, ‘மிஸ்டர்குகதாசன்’ நாடகங்களும் நூலுருப் பெற்றுள்ளன. இலங்கை நிர்வாக சேவையைச் சேர்ந்த ‘இலங்கையர்கோன்’ காரியாதிகாரியாகப் (தற்போதைய உதவி அரசாங்க அதிபர் பதவி) பணியாற்றி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவராவார். அவரது படைப்புக்கள் என்றும் அவரது பெயரை நினைவூட்டும் என்பது திண்ணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14

வெள்ளிப் பாதசரம்

தன் வீட்டுக்கு ஒரு அடுக்குப் பெட்டியும் தனக்கு ஒரு தையற் பெட்டியும் வாங்கவேண்டும் என்று நினைத்து வந்தவளுடைய உள்ளம் விம்மும்படி கோவில் வீதியெல்லாம் பெட்டிகளும் கடகங்களும் மலைமலையாய்க் குவிந்திருந்தன. குஞ்சுப்பெட்டி, அடுக்குப்பெட்டி, தையற்பெட்டி, மூடற்பெட்டி, பின்னற்பெட்டி.......... ஊ! எத்தனை வகை! அருகில் மாட்டை அவிழ்த்து அதன் வாயில் பொங்கிய நுரையை வழித்து அதன் மினுமினுக்கும் கரிய முதுகில் தேய்ப்பதில் கண்ணுங் கருத்துமாய் நின்ற தன் கணவனின் கையில் மெதுவாக, நுள்ளி ''மாடு தன் பாட்டுக்கு நிற்கட்டும் வாருங்கோ'' என்று கெஞ்சினாள்.

அஸ்தமிக்கும் சூரியனின் கடைசிக் கிரணங்கள் பனை மரங்களின் தலைகளை இன்னுந் தடவிக் கொண்டிருந்தன. கிழக்கு அடிவானத்தில் சந்திரன் வெளுக்க ஆரம்பித்தான்.

அன்று வல்லிபுரக் கோவில் கடைசித் திருவிழா, ''எவ்வளவு சனம் பாத்தியளே! இதுக்காலை எப்பிடிப் போறது'' என்று சொல்லிக் கொண்டே நல்லம்மா தன் கணவனின் அருகில் ஒதுங்கினாள். செல்லையா தன் தோளில் கிடந்த சால்வையை எடுத்து இடுப்பில் வரிந்து கட்டிக்கொண்டு. ''பயப்பிடாமல் என்னோடை வா'' என்று தன் மனைவியின் கையைப் பற்றினான்.

கோவில் வீதிகளிலும் கடைகளிலும் காணப்பட்டதெல்லாம் நல்லம்மாவின் மனத்தில் ஒரு குதூகலத்தை உண்டாக்கின. வாய் ஓயாது தன் கணவனுக்கு ஏதோ சொல்லிக்கொண்டே சென்றாள். ஐந்து வயதுச் சிறுமியைப் போல, முழங்கால்கள் தெரியும்படி, தன் ஆடையைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு வீதியைச் சுற்றி ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கெந்தல்' போட வேண்டும் போல் அவளுக்குத் தோன்றியது. செல்லையா மௌனமாகத் தன் மனைவியின் குதூகலத்தில் மெய்மறந்து அவள் இழுத்த வழியெல்லாம் போய்க் கொண்டிருந்தான்.

யாழ்ப்பாணத்தின் நீர் வளமற்ற சொற்ப நிலத்தைத் தம் தளராத முயற்சி ஒன்றினாலேயே வளம்படுத்திச் சீவியம் நடத்தும் புதல்வர்களில் அவனும் ஒருவன். இரக்கமற்ற பூமியுடன் தினசரி நடத்தும் போரினால் அவனுடைய தசை நார்கள் முறுக்கடைந்து வச்சிரம் போல இருந்தன. மன ஒருமைப்பாட்டினால் வாய் மௌனமாகவே இருந்தது.

மூன்று மாதங்களுக்கு முன்புதான் அவன் தன் வாழ்க்கைத் துணைவியைத் தேடிக்கொண்டான். அவளுடைய கலகலத்த வாயும், விடையில்லா ஒரு கேள்வியைக் கேட்பது போல அவனுடைய பார்வையை முறித்து நோக்கும் அவளுடைய விழிகளும், மார்பின் பாரம் தாங்க மாட்டாதது போல் ஓடியும் நூலிடையும் நிர்மலமாக இருந்த அவனுடைய தனிமை வாழ்வில் ஒரு கிளர்ச்சியை உண்டாக்கின. சதா மண்ணைக் கிண்டுபவனுக்கு மண்ணிற்குள் எத்தனையோ ரகஸ்யங்களும் மணங்களும் புதுமைகளும் மறைந்திருக்கும். ஆனால், அவைகளை விட மேலான ரகஸ்யங்களும் மணங்களும் புதுமைகளும் வாழ்க்கையில் எத்தனை மறைந்து கிடக்கின்றன! ஓ! வாழ்வு எவ்வளவு அற்புதமானது! செல்லையா இன்று அணிந்திருக்கும் நாற்பது ரூபா பெறுமதியுள்ள மாறுகரைச் சால்வையை விட இதற்கு வேறு என்ன அத்தாட்சி வேண்டும்?

கோவிலிலுள்ள சனங்கள் தங்கள் இஷ்டப்படி கூக்குரலிட்டுக் கொண்டிருந்தனர். மூலைகளில் கிடத்தப்பட்டிருந்த கைக் குழந்தைகள் அழுதன. பஞ்சகச்சம் அணிந்த பூசகர்கள் அங்குமிங்கும் ஓடினர். இந்த ஆரவாரங்களுக்கிடையில் கர்ப்பக்கிருகத்தில் மணிச் சத்தங் கேட்டது. கூப்பிய கைகள் தலைகளுக்கு மேல் உயர்ந்தன. செல்லையா ஒரு தூணருகே கைகளைக் கட்டியபடி சனங்களின் தலைகளைப் பார்த்துக் கொண்டு நின்றான். நல்லம்மா அவனருகில் கை கூப்பியபடி மூலஸ்தானத்தை ஒரு தரம் பார்ப்பதற்காக அங்கும் இங்கும் தலையை அசைத்தாள். எங்கோ தொலைவில் இருளில் சில தீபங்கள் மின்னின. அவைகளின் அருகில் ஒரு தொந்தி பெருத்த பூசகரின் கரும்பட உருவம் கைகளை அசைத்துக் கொண்டு நிற்பது தெரிந்தது. அதற்குப் பின்னால் அதுதானோ வல்லிபுரப் பெருமாள்?

திருமாலின் திருமண் பிரசாதத்தைப் பெறுவதற்கு ஆரவாரப்பட்ட சனங்கள் ஒரு பக்கத்தில் மேளச்சமா ஆரம்பமாகவே அவ்விடம் நோக்கி நகர்ந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லையாவும் நல்லம்மாவும் கோவிலை வலம் வந்து வணங்கினர்.

தவிற்காரன் தாளவரிசைகளை மெய்மறந்து பொழிந்து கொண்டிருந்தான். அவனுடைய குடுமி அவிழ்ந்த தலையோடு வேறும் ஆயிரம் தலைகள் அசைந்தன. நல்லம்மாவுக்குச் சிரிப்பாகவிருந்தது. தன் கணவனின் உடலோடு தன் உடலை உராய்ந்து கொண்டு ''எல்லோருக்கும் பைத்தியம் பாருங்கோ'' என்றாள். மௌனியான செல்லையா மௌனம் கலைந்து ''போதும் இனி, வாணை வெளியாலை போவம்'' என்றான்.

வெளி வீதிகளிலும் தெருக்களிலும் சன சமுத்திரம் அலைமோதிப் புரண்டது. முத்தையும் வைரத்தையும் பொடியாக்கிச் சிதறிவிட்டது போன்ற அந்த அகன்ற வெண் பரப்பிலே கன்னித்தாயின் உள்ளத்திலே அன்பு வெள்ளம் பாய்வது போல நிலவு வெள்ளத்தை அள்ளிப் பெருக்கும் முழுச் சந்திரனின் கீழ் இரண்டொரு இரவுகளுக்கு வாழ்க்கைப் போரினால் ஏற்பட்ட அலுப்பைக் கொஞ்சம் தீர்த்துக் கொள்வதற்காக யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் வந்து மனிதர்கள் நிரம்பியிருந்தனர்.

சர்பத் கடைக்காரன் பல வர்ணங்கள் கொண்ட போத்தல்களை ஒரு தடியால் அடித்து ஜலதரங்கம் வாசித்தான். மினுக்கு மினுக்கு என்று எரியும் ஒரு கைவிளக்கின் அருகில் உட்கார்ந்து, பொலிஸ்காரர்களின் காக்கியுடுப்பு எங்காவது தெரிகிறதா என்று கடைக் கண்ணால் பார்த்தபடி 'ஒண்டுக்கு நாலு' க்காரன், ''ஓடிவா ஓடிவா போனால் கடலைக் காசு, வந்தால் தேத்தண்ணிக்காசு'' என்று ஓலமிட்டான்.

நல்லம்மாவும் செல்லையாவும் தம்மை அறியாமலே ஒரு வளையற்கடையின் முன்னால் போய் நின்றனர். விளக்கொளியில் சுடர்விடும் கண்ணாடி வளையல்களின் லாவண்யத்தில் நல்லம்மாவின் மனம் லயித்தது. செல்லையா அவளுக்கு ஐந்து ஜதை வளையல்கள் வாங்கிக் கொடுத்தான். ஒரு கண்ணாடிப் பெட்டியில் அழகாக வளைத்து வைக்கப் பட்டிருந்த புதுமாதிரியான ஒரு பாதசரம் செல்லையாவின் கண்களை ஈர்த்தது. நெருக்கமாகப் பின்னப்பட்ட வெள்ளி வளையம் ஒவ்வொன்றிலிருந்து ஒவ்வொரு வெள்ளிக்குண்டும் வேல் போன்ற ஒரு தகடும் தொங்கிக் கொண்டிருந்தன. முகப்பில் சிங்கமுகம். அதுபோன்ற ஒரு பாதசரம் அவன் முன் ஒருபோதும் பார்த்ததில்லை.... அவன் தன் மனைவியின் முகத்தைப் பார்த்தான்.

குவளை மலரைப் பழித்த அவளது விழிகள் ''காஸ்லைட்'' ஒளியில் அகல விரிந்து பளபளத்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளிடம் சாதாரணமான காற்சங்கிலிகூட இல்லை. உருண்டையாகவும் வழுவழுப்பாகவும் இருந்த அவளுடைய கணைக்கால்களில் இதுபோன்ற ஒரு பாதசரத்தை அணிந்து பார்க்கவேண்டும் என்ற ஆசை செல்லையாவின் மனத்தில் தோன்றியது. இந்த ஆசையோடு வேறு எத்தனையோ ரகஸ்யமான இன்ப நினைவுகள் அவன் உள்ளத்தை மயக்கின... அதை எப்படியும் வாங்கிவிட வேண்டும்! அதன் விலை என்னவென்று கடைக்காரனைக் கேட்டான்.

''முப்பத்தைந்து ரூபாய்; வேறு விலை கேட்க வேண்டாம்.'' செல்லையாவின் மடியில் முப்பத்தொரு ரூபாய்தான் இருந்தது.

''இருபத்தைந்து தரலாம். சாமானைக் குடுத்துப் போடு''

''தம்பி! இது நாட்டுப் பெண்கள் போடுகிற கால்ச் சங்கிலிகள் அல்ல, ராசாத்தியின் கால்களுக்கேற்றது. இந்தியாவிலிருந்து ஸ்பெஷலாய் வந்தது. உமக்கு இது சரிவராது ராசா. கடைசி விலை; முப்பது ரூபாய் குடுப்பீரா?

''சரி இந்தா...''

பாதசரங்கள் கைமாறி, அவ்விடத்திலேயே நல்லம்மாவின் பாதங்களில் ஏறின.

வெண் மணலில் கால்கள் புதைய இருவரும் மறுபடி கடைகளைச் சுற்றி வந்தனர். மிச்சமாக இருந்த ஒரு ரூபாயைக் கொண்டு ஒரு தையற் பெட்டியும் வாங்கி, ஆளுக்கொரு சர்பத்தும் குடித்தனர். அடுக்குப் பெட்டி வாங்கவில்லை.

நல்லம்மாவின் கால்கள் ஓய்ந்துபோயின. ''இனி வண்டிலடியில் போய்க் கொஞ்ச நேரம் இருந்திட்டு, திருவிழாப் பார்த்துக் கொண்டு விடியப் போவம்'' என்று இருவரும் முடிவு செய்தனர். செல்லையா அவளை ஒரு சனக்கும்பலுக்கூடாகக் கையில் பிடித்து நடத்திக்கொண்டு சென்றான். கும்பல் கழிந்து கொஞ்சம் வெளியான இடத்திற்கு வந்ததும் நல்லம்மா திடீரென நின்று தன் இடக்காலை உயர்த்திக் கையால் தடவிப் பார்த்தாள்.

''ஐயோ! காற் சங்கிலியைக் காணேல்லை..''

''என்ன? வடிவாய்ப்பார்!''

''ஒரு காலான் எங்கையோ மணலுக்குள்ளை கழண்டு விழுந்திட்டுது.''

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

''கொஞ்சம் கவனமாய் வாறதுக்கென்ன? உனக்கு ஆட்டம் மெத்திப் போச்சு. ஊதாரி நாய்!"

மறுகணம் செல்லையா தன் நாக்கைக் கடித்துக் கொண்டான்.

குண்டூசியால் துளைக்கப்பட்ட றப்பர் பலூனைப் போல நல்லம்மாவின் உற்சாகம் அப்படியே சப்பளிந்து போய்விட்டது. மூன்று மாத மணவாழ்க்கையில் இதுதான் முதல் தடவையாக இப்படி ஏச்சுக் கேட்கவேண்டிவந்தது. அதுவும் அம்பலத்தில் கூட்டிக்கொண்டு வந்துவிட்டு...! அவள் மனத்தில் கோபம், அவமானம், துயரம் ஆகிய எல்லா உணர்ச்சிகளும் ஒருங்கே தோன்றின. கண்களில் நீர் மல்கியது.

''போதும் உங்களோடை கோவிலுக்கு வந்த வண்டவாளம். இனி நடையைக் கட்டுவம்."

செல்லையா ஒரு படி கீழே இறங்கினான் ''நல்லம்மா ஆத்திரத்திலை சொல்லிப் போட்டன். இஞ்சை பார்..."

''வேண்டாம், இப்பவே போகவேணும். வண்டிலைக் கட்டுங்கோ. நீங்கள் வராட்டி நான் தனியாகக் கால் நடையாய்ப் போறன். வழியிலை காறுக்குள்ளை வசுவுக்குள்ளை ஆப்பிட்டு நெரிஞ்சு போறன்."

செல்லையா மறுவார்த்தை பேசாமல் தன் திருக்கல் வண்டியை இழுத்து, மாட்டை அவிழ்த்துப் பூட்டினான். அவன் ஆண் மகன்.

மாட்டின் கழுத்தில் கட்டியிருந்த வெண்டயங்களின் தாளத்திற்கு ஏற்பக் கரடுமுரடான தெருவில் வண்டிச் சக்கரங்கள் 'கடக், கடக்' என்று சப்தம் செய்தன. யாரோ மணமகன் ஊர்வலம் வருவதற்காக விரித்து விட்ட நிலபாவாடை போல் வளர்ந்து கிடந்த தெருவின் இரு மருங்கிலும் நெடிய பனைமரங்கள் மௌனப் பூதங்கள் போல் வரிசையாக நின்று ஆலவட்டம் பிடித்தன.

செல்லையா நாணயக் கயிற்றை இளக்கிவிட்டு, மாட்டின் கால்களுக்கிடையில் தன் காலை வைத்தான். ரோசம் மிகுந்த அந்த இளம்காளை உன்மத்தம் கொண்டது போல் ஏற்காலைத் தன் ஏரியில் பட்டும் படாமலும் தாங்கிக் கொண்டு பறந்தது... ஆத்திரத்தில் சிந்தனையில்லாமல் கூறிய வார்த்தைக்கு இவ்வளவு கோபமா..? நிலத்தில் வியர்வை சொட்ட, கை கால் வலியினால் செயலற்றுப் போக, புகையிலைத் தோட்டத்தைக் கிண்டிப் பாடுபட்டவனுக்குத்தான் காசின் அருமை தெரியும்! அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்பிள்ளை. இரண்டு வார்த்தை பேச உரிமையுண்டு. அதைப் பெண் பொறுத்துக்கொண்டால் என்ன...? கொண்டு வந்த காசெல்லாம் அவளுக்காகத்தானே செலவு செய்தான்..., தனக்கு ஒரு சுருட்டுக்கூட வாங்கிக் கொள்ளவில்லையே.

கால்களை வண்டியின் பின்புறம் தொங்கப் போட்டுக் கொண்டு, வண்டியின் கீழ் ஓடும் தெருவைப் பார்த்தபடி நல்லம்மா சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். எவ்வளவு அற்ப காரியம்!

ஒரு கஷ்டமும் இல்லாமல் திருவிழாப் பார்த்து விட்டுச் சந்தோஷமாக வந்திருக்கலாமே... எல்லாம் அவளுடைய பிழைதான். கணவன் இரண்டு வார்த்தைகள் கடுமையாகச் சொல்லிவிட்டால்தான் என்ன?

மாடு களைப்பினால் பலமாக மூச்சுவாங்கியது. நெல்லியடிச் சந்தியில், ஒரு பூவரச மரத்தின் கீழ்ச் செல்லையா வண்டியை நிற்பாட்டினான். அந்த நடுயாமத்திலும் கோவிலுக்குப் போகிறவர்களுக்காகக் கடைகள் எல்லாம் திறந்து வைக்கப்பட்டிருந்தன. சந்தையில் இரண்டு பெண்கள் அப்பம் சுட்டுக் கொண்டிருந்தனர். தேநீர்க் கடைகளில் தேநீர் கலக்கும் ‘கட கட’ என்ற சத்தத்தை விட, மற்றெங்கும் ஆழ்ந்த நிசப்தம் குடிகொண்டிருந்தது.

செல்லையா மாட்டின் களை தீர அதைத் தடவிக் கொடுத்த பின், ஒரு தேநீர்க் கடை இருந்த பக்கமாகச் சென்றான். அவனுடைய மடியில் ஒரு ஐந்து சதம்தான் இருந்ததென்பது நல்லம்மாவுக்குத் தெரியும். அன்று மத்தியானம் வீட்டில் சாப்பிட்டதுதான். அதன் பிறகு ஒன்றுமே இல்லை... ‘‘ஐயோ அவருக்கு எவ்வளவு பசியாயிருக்கும், வாய் திறந்து ஒன்றுமே சொல்லாமல் இருக்கிறாரே...” என்று அவள் அங்கலாய்த்தாள். அவளுடைய இதயம் இளகிக் கரைந்தது. தன் கணவனுடைய மனத்தின் பண்பும் அவன் தன்பால் வைத்துள்ள அன்பின் ஆழமும் அவள் மனத்தில் தெளிவாயிற்று. விவாகம் செய்து கொண்ட புதிதில் ஒரு நாள் அவன் கூறிய வசனம் ஒன்றை அவள் ஞாபகப்படுத்திக் கொண்டாள். ‘‘பெட்டை உனக்காக வேணுமெண்டால் என்ரை உசிரையும் கொடுத்து விடுவேன். நீ ஒண்டுக்கும் பயப்பிட வேண்டாம்.!”

அவளுடைய நெஞ்சுக்குள் ஏதோ ஒன்று உடைவது போல்.. கண்கள் பொருமி உவர் நீரைப் பொழிந்தன. தன் கணவனை ஒரு குழந்தை போல் மடியில் வைத்துத் தாலாட்டி அவனுடைய உடலின் ஆயாசத்தையும் மனக் கவலையையும் போக்கவேண்டும்போல் அவளுக்குத் தோன்றியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லையா வாயில் ஒரு சுருட்டுடன் வந்து.. மனைவியருகில் ஒரு வெற்றிலை பாக்குச் சுருளை வைத்து விட்டு, அவளுடைய முகத்தைப் பார்த்தான்.. அவளுடைய கண்ணீர் தோய்ந்த முகத்தின் ஒளி அவனை உலுக்கியது. தன்னுடைய நாற்பது ரூபா பெறுமதியுள்ள மாறுகரைச் சால்வையால் அவளுடைய கண்ணீரைத் துடைக்க வேண்டும் என்று அவன் மனம் அவாவியது.

''என்ன, நல்லம்...''

நல்லம்மாவின் கண்ணீர் வடிந்த முகத்தில், நாணம் கலந்த ஒரு புன்னகை அரும்பியது. ''ஒண்டுமில்லை, உங்களுக்குப் பசி இல்லையே? வெளிக்கிடுங்கோவென் கெதியாய் வீட்டை போவம்.''

செல்லையா அதன் அர்த்தத்தைப் புரிந்து கொண்டான். மாட்டின் வெண்டயம் மறுபடியும் பனந்தோப்புக்களில் எதிரொலித்தது.

வல்லை வெளி!

இந்த அகன்ற பூமிப் பரப்பின் மகிமையை அறிந்தது போல இதுகாறும் வேகமாய் ஓடிவந்த மாடு. தன்கதியைக் குறைத்து அடிக்குமேல் அடி எடுத்து வைக்க ஆரம்பித்தது.

பேய்க் காற்று 'ஹோ' என்று சுழன்றடித்தது. வானம் கவிந்து, நாற்புறமும் நிலத்தைக் கவ்விக்கொண்டிருந்தது. வெளியின் நடுவே தேங்கி நின்ற நீரோடை, ஒரு அரக்கனது பிரம்மாண்டமான மார்பில் அணியப்பட்ட மரகதச் சரடுபோல் ஜ்வலித்தது. வான முகட்டின் உச்சியில் தொங்கிக் கொண்டிருந்த பளிங்குத் தகடு போன்ற சந்திர தீபம் கீழே விழுந்துவிட எத்தனிப்பது போலக் கனிந்து பிரகாசித்தது.

சின்ன மனிதர்களையும் பெரிய எண்ணங்கள் எண்ணும்படி தூண்டும் இந்த வெளிப் பிரதேசத்தில்தான் மனிதனின் ஜீவநாடி நவநாகரிக முறைகளால் நலிந்து படாமல் இன்னும் அந்தப் பழைய வேகத்தோடு அடித்துக் கொண்டிருக்கிறது.

எங்கோ வெகு தொலைவில் நிலத்தில் இருந்து இரண்டு அடி உயரத்தில் பொட்டிட்டது போன்ற ஒரு ஒளி தோன்றிக் கொஞ்சம் கொஞ்சமாகத் தெருவை நோக்கி நகர்ந்து வந்தது. செல்லையா அதைக் கண்டதும் அதை நோக்கிக் காறியுமிழ்ந்தான். நல்லம்மா, ''அது என்ன?'' என்று கேட்டாள்.

''ஆரோ மீன்பிடிகாரர் சூள்கொண்டு போகிறான்கள்'' என்று ஒரு பொய் சொல்லி மழுப்பி விட்டுச் செல்லையா மாட்டின் வாலைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்து முறுக்கினான்.

அந்த வெளிச்சம் தெருவைக் கடந்து வேகமாய் மற்றப் பக்கத்தில் போய் 'பக்' கென்று அவிந்தது.

செல்லையாவின் இடக்கை அவன் மனைவியின் இடையை நோக்கி நகர்ந்தது.

அவனுடைய மனம் வல்லை வெளிபோல் விரிந்தது. மெய் மறந்த ஒரு மகிழ்ச்சி அவனை ஆட்கொண்டது. தன் குரலை எழுப்பி. ''ஞானகுமாரி'' என்ற தேவகாந்தாரி ராகப்பாட்டைப் பாடினான்.. அவனுக்குப் பசியில்லை தாகம் இல்லை எத்தனை கொள்ளிவாய்ப் பிசாசுகள் சேர்ந்தும் அவனை என்ன செய்துவிட முடியும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15

இலங்கையர்கோன் சிறுகதைகள் - ஒரு நோக்கு

ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை வரலாற்றில் தமக்கெனத் தனியிடம் பெற்றவர் இலங்கையர்கோன். மண்வாசனை தவழும் கதைகள் பலவற்றையும் சரித்திர இதிகாசக் கதைகளையும் படைத்த பெருமைக்குரியவர். ஈழத்துச் சிறுகதை மூலவர்களில் ஒருவராகக் கருதப்படுபவர். ஆங்கிலப் புலமை மிக்கவர். மேலைத்தேய சிறுகதைப் பண்புகளையும் நவீன வளர்ச்சி நிலைகளையும் நன்குணர்ந்தவர். இதன் பேறாக உணர்வுபூர்வமான சித்திரிப்புக்களுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் இவரது சிறுகதைகள் அமைந்திருந்தன.

இலங்கையர்கோன் 18 வயதிலேயே எழுத்துத்துறையில் ஈடுபட்டார். ஆரம்பத்தில் ஆங்கிலக் கதைகள் பலவற்றை மொழிபெயர்த்துத் தமது எழுத்தார்வத்தை வெளிக்காட்டினார். பின்னர் இதிகாச சரித்திரக் கதைக் கருக்களை மையமாகக் கொண்ட கதைகளைப் படைத்தார். இவற்றிற்கு அனுலா, சிகிரியா, கடற்கோட்டை, மணப்பரிசு, யாழ்பாடி முதலிய சரித்திரக் கதைகளும் மரியா மதலேனா, மேனகை, தாய் முதலிய இதிகாசக் கதைகளும் ஏற்ற எடுத்துக்காட்டுக்களாகும்.

துறவியின் துறவு, ஒருநாள், ஓரிரவு, சதிர்காரி, என் தமக்கை, முதற்சம்பளம்,வெள்ளிப்பாதசரம், மனிதக் குரங்கு, தாழைமர நிழலிலே, சக்கரவாகம், அனாதை, பாரதத்தாய், தந்திவந்தது, நாடோடி, மச்சாள், கடற்கரைக் கிளிஞ்சல், வஞ்சம், முதலான கதைகள் இலங்கையர்கோனின் சமூகப் பார்வை சம்பந்தமான கதைகளாகும். இக்கதைகளில் நம் நாட்டின் மண்வாசனையும் மக்கள் வாழ்க்கை முறைகளும் நன்கு சித்திரிக்கப்பட்டுள்ளன. இலங்கையர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோனின் வெள்ளிப் பாதசரம் என்னும் கதை யாழ்ப்பாண மண்வாசனைக்குரிய சிறந்த கதையாகப் பலராலும் பாராட்டப் பெறுகிறது.

கலைமகள், பாரததேவி, சக்தி, சூறாவளி, கிராமஊழியன், மணிக்கொடி, கலாமோகினி, சரஸ்வதி முதலிய தமிழகப் பத்திரிகைகளிலும் ஈழகேசரி, மறுமலர்ச்சி, தினகரன், ஈழநாடு, வீரகேசரி, கலைச்செல்வி முதலான ஈழத்து இதழ்களிலும் இவரது படைப்புக்கள் பெருமளவில் வெளியாகியுள்ளன. இவரது பதினைந்து கதைகளின் தொகுப்பாக வெள்ளிப்பாதசரம் வெளிவந்துள்ளது. இக்கதைகளின் மூலம் இலங்கையர்கோன் தலைசிறந்த படைப்பாளி என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம். சமூகம் சார்ந்த கதைகளில் இயல்பான பழகு தமிழைப் பயன்படுத்திய இலங்கையர்கோன் சரித்திர, புராணக் கதைகளை எழுதும் போது கம்பீரமான தமிழ்நடையைக் கையாண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவரால் படைக்கப்பட்ட கதைகளில் வெள்ளிப்பாதசரம், வஞ்சம், கடற்கரைக் கிளிஞ்சல் என்பன சிறந்த கதைகளெனலாம்.

வெள்ளிப்பாதசரம்

யாழ்ப்பாணத்து மண் வாசனைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்வது வெள்ளிப்பாதசரம் என்னும் கதையாகும். வல்லிபுரக் கோயில் கடைசித் திருவிழாவுக்குச் சென்ற புதுமணத் தம்பதியரிடையே ஏற்பட்ட ஊடலைத் தத்ரூபமாகச் சித்திரிக்கும் வகையில் யாழ்ப்பாணத்து கிராமிய மண்வாசனை தவழும் வகையில் இக்கதை வெகுஅற்புதமாகப் புனையப்பட்டுள்ளது. மண்ணை நம்பி வாழ்வை நடத்தும் நல்ல உழைப்பாளியான செல்லையாவும் அவன் மனைவி நல்லம்மாவும் வல்லிபுரக்கோயில் திருவிழாவுக்குச் சென்ற காட்சியினையும் அவர்களது மனநிலையினையும் ஆரம்பத்தில் அழகுறச் சித்திரிக்கும் இலங்கையர்கோன் கிராமியப் பண்பாட்டிற்கமையப் பேச்சுவழக்குத் தமிழைப் பெரிதும் பயன்படுத்தியுள்ளமையை இக்கதையில் காணமுடிகிறது. கணவன், மனைவியருக்கிடையேயான அந்நியோன்னியம்,பாசம், கோபதாபம், ஊடல் முதலியவற்றை இக்கதை மிகவும் சிறப்பாக வெளிக்காட்டுகிறது. மனைவியை மகிழ்விக்கக் கருதிய செல்லையா வாங்கிக் கொடுத்த பாதசரமே ஈற்றில் அவர்களுக்கிடையே ஊடல் உருவாகக் காரணமாயிற்று என்பதை வெகு அழகாகப் புலப்படுத்தும் ஆசிரியர், அவர்கள் இருவரும் வீடுதிரும்பும் வழியில் கோபதாபங்களை மறந்து அன்பில் இணைந்து கொள்வதையும் அழகாகச் சித்திரித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16

சி. வைத்தியலிங்கம்.

ஈழத்து சிறுகதை மூலவர்களில் ஒருவராகப் போற்றப்படுபவர் அமரர் சி.வைத்தியலிங்கம். யாழ்ப்பாண மண்வாசனை தவழும் இருபத்தைந்து சிறுகதைகளைப் படைத்தவர் இவர். மனிதனின் மென்மையான உணர்வுகள், மன உணர்வுப் போராட்டங்கள் ஆண்-பெண் உறவு, கிராமியப் பண்புகள் ஆகியன இவரது கதைகளில் முக்கியம் பெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஈழகேசரி', 'ஆனந்தவிகடன்', 'கல்கி', 'கலைமகள்', 'கிராம ஊழியன்' ஆகிய இதழ்களில் இவரது படைப்புக்கள் வெளியாகியுள்ளன. கு.ப.ராஜகோபாலனையே தமது ஆதர்ச எழுத்தாளராகக் கொண்டவர். கு.ப.ரா.வின் படைப்புக்களை வாசிக்கும் சுகானுபவத்தை நம்மண்ணினூடாக இவரது எழுத்துக்கள் நமக்கு நல்கின. இவரது மூன்றாம் பிறை என்ற சிறுகதை அல்லயன்ஸ் கம்பனி வெளியிட்ட கதைக் கோவையில் வெளிவந்துள்ளது.

1939 தொடக்கம் 1956 வரையான காலகட்டத்திலேயே இவரது சிறுகதைகள் யாவும் வெளிவந்துள்ளன. ரவீந்திரன் என்ற புனைபெயரிலும் இவர் எழுதியுள்ளார்.

இவரது சிறுகதைத் தொகுதி 'கங்கா தீபம்' 1990இல் வெளியாயிற்று. அத்தொகுதியில் இடம் பெற்ற 'பாற்கஞ்சி' படிப்போர் உள்ளங்களில் ஆழப்பதியும் பண்புமிக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17

பாற்கஞ்சி

"ராமு என் ராசாவன்னா குடிச்சிடுவாய், எங்கே நான் கண்ணை மூடிக்கொள்கிறேன். குடிச்சிடு பார்க்கலாம். நாளைக்குப் பாற்கஞ்சி..."

"சும்மாப் போம்மா. நாளைக்கு நாளைக்கென்று எத்தனை நாளா ஏச்சுப்பிட்டாய். என்னதான் சொல்லேன். கூழ் குடிக்க மாட்டேம்மா."

"இன்னும் எத்தனை நாள் பஞ்சமடா? வயலிலே நெல் முத்தி விளைஞ்சு வருது. ஒனக்கு வேணாம்னா பாற்கஞ்சி தாரனே"

"கூழைப் பார்த்தாலே வவுத்தைப் புரட்டுதம்மா. முடியாதுன்னா முடியாது" என்று சொல்லி அழத் தொடங்கினான்.

"அப்பா பசியோட காத்துண்டிருப்பாரடா வயல்லே. கூழ் கொண்டு போகணும். என்ன பாடுபட்டும் நாளைக்குக் கஞ்சி தந்துடுறேன். ஆம்... என் கண்ணோல்லியா?"

"நிச்சயமாய்ச் சொல்றயாம்மா? நாளைக்குப் பாற் கஞ்சி தருவாயா..?"

சட்டென்று பக்கத்திலிருந்து சிறுவர்கள் தம்பளப்பூச்சி பிடித்து விளையாடும் சப்தம் கேட்டது. அவதி அவதியாய்ப் பத்து வாய் கூழ் குடித்தான் ராமு. எல்லாவற்றையும் மறந்து விளையாட ஓடினான்.

அந்தக் கிராமத்தில் முருகேசனுடைய வயல் துண்டு நன்றாய் விளையும் நிலங்களில் ஒன்று. அதற்குப் பக்கத்திலே குளம், குளத்தைச் சுற்றிப் பிரமாண்டமான மருத மரங்கள். தூரத்திலே அம்பிகையின் கோயிற் கோபுரம். இவை எல்லாவற்றையும் சுற்றி வேலிபோட்டாற் போல தூங்கிக்கிடந்தன குடி மனைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்கழி கழிந்துவிட்டது. இப்பொழுது மேகத்திலே புகார் ஓடுவதில்லை. ஞான அருள் பெற்ற நாள் வெண்ணிறம் பெற்று வந்தது. ஆம், தை மாதம் பிறந்து துரிதமாய் நடந்து கொண்டிருந்தது.

மாரிகாலம் முழுவதும் ஓய்ந்து தூங்கிக்கிடந்த ஜீவராசிகள் பாட்டுடன் வேலை தொடங்கிவிட்டன. முருகேசனும் வயலிலே வேலை செய்து கொண்டிருந்தான். பனியிலே ஒடுங்கிக் கிடந்த நரம்புகளிலே சூரிய ஒளி வெள்ளம் பாயவே, அவன் தேகத்தில் ஒரு சுறுசுறுப்பு உண்டானது. வலிந்து இறுகியிருந்த நரம்புகள் விண்போல் தெறித்தன. எழுந்து நின்று கண்களைச் சுழற்றித் தன் வயலைப் பார்த்தான். நெற்கதிர்கள் பால்வற்றி, பசுமையும், மஞ்சளும் கலந்து செங்காயாக மாறிக் கொண்டிருந்தன. 'இன்னும் பதினைந்து நாட்களில்...' என்று அவனை அறியாமல் அவன் வாய் முணுமுணுத்தது.

முருகேசன் மனத்தில் ஒரு பூரிப்பு, ஓர் ஆறுதல், ஒரு மன அமைதி. அவன் ஒரு வருஷமாய்ப் பாடுபட்டது வீண் போகவில்லையல்லவா? ஆனால் இவற்றுக்கிடையில் காரணமில்லாமல் ''சிலவேளை ஏதேனும்... யார் கண்டார்கள்?'' என்ற இன்பமும் துன்பமும் கலந்த ஒரு மன ஏக்கம்...!

முருகேசனுக்கு வயலை விட்டுப்போக மனம் வரவில்லை. பொழுது உச்சிக்கு வந்துவிட்டது. பசி வயிற்றைக் கிள்ளியது. என்றாலும் பயிருக்குள் நுழைந்து ஒவ்வொரு கதிராக தன் கைகளால் அணைத்து தன் குழந்தைகள் போலத் தழுவிக் கொண்டிருந்தான்.

கண்ணை மின்னிக் கொண்டிருந்த அந்த வெயிலிலே காமாட்சி கூழுடன் அப்பொழுதுதான் வந்தாள். கூழ் குடித்துக் கொண்டிருக்கும் பொழுது முருகேசன் அவளைப் பார்த்து, ''போனவருசந்தான் மழை இல்லாமல் எல்லாம் சப்பையும், சாவியுமாய்ப் போயிருந்தது. காமு, அதோபார், இந்த வருசம் கடவுள் கண் திறந்திருக்கிறார். கருப்பன் செட்டி கடனைத் தீர்த்துப்புடலாம். நமக்கு ஒரு வருடத்துக்குச் சோத்துக்குக் குறைவு வராது. எங்க ராமனுக்கு ஒரு சோடி காப்பு வாங்கணும்...''

''எனக்கு ஒட்டியாணம்''

''ஏன், ஒரு கூறைச் சேலையும் நன்னாயிருக்குமே''

''ஆமாங்க, எனக்குத்தான் கூறைச்சேலை, அப்படின்னா ஒங்களுக்கு ஒரு சரிகை போட்ட தலப்பா வேணுமே''

''அச்சா, திரும்பவும் புது மாப்பிள்ளை பொம்புளையாட்டம் ரெண்டு பேரும்... ஓ... ஒரே சோக்குத்தான்'' என்று சொல்லி அவளைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்து இளித்தான்.

காமாட்சி வெட்கத்தினால் தன் சீலைத் தலைப்பால் முகத்தை அரை குறையாய் மூடிக்கொண்டு ''அதெல்லாம் இருக்கட்டும்... எப்போ அறுவடை நாள் வைக்கப்போறீங்க" என்றாள்.

''இன்னிக்குச் சனிக்கிழமை, சனியோடு சனி எட்டு, மற்றச் சனி பதினைந்து, ஆம் நல்ல நாள். அதே சனிக்கிழமை வைத்திடுவமே."

''தாயே, இதுக்கிடையில் ஒரு விக்கினமும் வந்திடப்படாது" என்று மனதில் சொல்லிக்கொண்டாள் காமாட்சி.

ஒரு பெருநாளை எதிர்பார்ப்பது போல் காமாட்சியும் முருகேசனும் அறுவடை நாளை எதிர்நோக்கி இருந்தார்கள். காமாட்சி தன் வீட்டிலுள்ள களஞ்சிய அறையைக் கோலமிட்டு மெழுகி வைத்திருந்தாள். லட்சுமி உறையப்போகும் அந்த அறைக்கு ஒவ்வொரு நாளும் தீபம் ஏற்றி வந்தாள். மணையாகக் கிடந்த அரிவாள்களைக் கொல்லன் பட்டடையிற் கொண்டுபோய்த் தேய்த்து வந்தான் முருகேசன். கதிர்ப்பாய்களை வெய்யிலிலே உலர்த்தி, பொத்தல்களைப் பனை ஓலை போட்டு இழைத்து வைத்தான். ஐந்தாறு நாட்களுக்கு முன்னரே அயல் வீட்டுக் கந்தையனிடமும் கோவிந்தனிடமும் ''அறுவடை, வந்திடவேணும் அண்ணமாரே" என்று பலமுறை சொல்லி வந்தான். இருவருடைய மனதிலும் ஓர் ஆவல் துடித்து நின்று இவற்றை எல்லாம் செய்து வந்தது.

அறுவடை நாளுக்கு முதல் நாள், அன்று வெள்ளிக்கிழமை பகல் தேய்ந்து மறைய இன்னும் மூன்று நாழிகை தான் இருந்தது. நிஜ்களங்கமாய் இருந்த வானத்திலே ஒரு கருமுகிற் கூட்டம் கூடியது. வரவரக் கறுத்துத் தென் திசை இருண்டு வந்தது. அந்த மேகங்கள் ஒன்று கூடி அவனுக்கு எதிராகச் சதி செய்வதாக முருகேசன் நினைத்தான். அந்தக் கருவானம் போல் அவன் மனதிலும் இருள் குடி கொண்டது. காமாட்சி அவள் மனதிற்குள் அம்பிகைக்கு நூறுவாளி தண்ணீரில் அபிஷேகஞ் செய்வதாகப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள். சிறு நேரத்தில் ஒரு காற்று அடித்தது. கூடியிருந்த முகிற் கூட்டம் கலைந்து சிறிது சிறிதாய் வானம் வெளுத்துக்கொண்டு வரவே, முன்போல் ஆகாயம் தெளிவுடன் விளங்கிற்று. தன்னுடைய பிரார்த்தனை அம்பிகைக்குக் கேட்டுவிட்டதென்று காமாட்சி நினைத்தாள்.

முருகேசன் படுக்கப்போகுமுன் அன்றைக்குப் பத்தாவது முறை கந்தையனுக்கும், கோவிந்தனுக்கும் காலையில் அறுவடையைப் பற்றி நினைப்பூட்டிவிட்டு வந்து படுத்துக்கொண்டான். அவன் நித்திரைக்குப் போன பொழுது நேரமாகிவிட்டது. அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுக்கையிலேயே புரண்டு படுத்துக்கொண்டிருந்தான். நித்திரை அவனுக்கு எப்படி வரும்? அவனுடைய மனம் விழிப்பிற்கும், தூக்கத்திற்கும் இடையே ஊசலாடிக்கொண்டிருக்கிறது. ஆயிரஞ் சிந்தனைகள் பிசாசுகளைப் போல் வந்து அவன் மனதிலே ஓடிக்கொண்டிருந்தன.

அவன் வயலிலே நெல் அறுத்துக் கொண்டிருக்கிறான். பக்கத்திலே கோவிந்தனும் கந்தையனும் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் அறுத்துவைத்ததைக் காமாட்சியும், பொன்னியும். சின்னம்மாவும் கட்டுக்கட்டாய் அடுக்கிக் கொண்டிருக்கிறார்கள், கிளிகளையும், காக்காக்களையும் துரத்திக்கொண்டு திரிகிறான் ராமு. அப்பொழுது காமாட்சி, ''பள்ளத்து பள்ளன் எங்கேடி போய்விட்டான்'' என்று பள்ளு பாடத் தொடங்கினாள்.

அதற்குப் பொன்னி ''பள்ளன் பள்ளம் பார்த்துப் பயிர் செய்யப்போயிட்டான்!'' என்று சொல்ல, காமு, ''கொத்துங்கொண்டு கொடுவாளுங்கொண்டு...'' என்று இரண்டாம் அடியைத் தொடங்கினாள்.

அதற்குப் பொன்னி ''கோழி கூவலும், மண்வெட்டிகொண்டு'' என்று சொல்ல, இருவரும் சேர்ந்து ''பள்ளன் பள்ளம் பார்த்துப் பயிர் செய்யப் போயிட்டான்!'' என்று முடித்தார்கள்.

உடனே காமு, '' ஆளுங்கூழை அரிவாளுங்கூழை'' என்று சொன்னதும், முருகேசன் ''யாரடி கூழை!'' என்று அரைத் தூக்கத்திலிருந்து கத்திக் கொண்டு எழுந்திருந்தான்.

முருகேசன்- ஆள் கூழை, பாவம், தன்னையே அவள் கேலி செய்வதாக நினைத்து அப்படிக் கோபித்துக் கொண்டான். இப்பொழுது நித்திரைவெறி முறிந்ததும், தான் செய்ததை நினைக்க அவனுக்கு வெட்கமாயிருந்தது. தனக்குள்ளே சிரித்துக்கொண்டு திரும்பவும் படுத்துக்கொண்டான். அந்தக் கனவுதான் எவ்வளவு அழகான கனவு! அதன் மீதியையும் காண வேண்டும் என்று ஆவலாயிருந்தது. ஆனால், நித்திரை எப்படி வரப்போகிறது? கனவுதான் மீண்டும் காணப்போகிறானா? தன் கற்பனையிலே மீதியை சிருஷ்டித்துப் பார்த்து அவன் மகிழ்ந்து கொண்டிருந்தான்.

பாட்டுடன் அறுவடை சென்று கொண்டிருக்கிறது. வயலிலே நின்று நெல்மூட்டைகளை வண்டியில் போடுகின்றான். வண்டி வீட்டு வாசலிலே வந்து நிற்கிறது. அவனுடைய களஞ்சியம் நிறைந்து பரிபூரணமாய விட்டது. ராமன் வயிறு நிறையப் பாற்கஞ்சி குடித்துக்கொண்டிருக்கிறான். காமு ஒட்டியாணத்துடன் வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனை...

அப்பொழுது வீட்டுக்கூரைக்கு மேலிருந்து ஒரு சேவல் கூவிற்று. முருகேசனுடைய கற்பனை அறுந்துவிட்டது. அக்கிராமத்திலுள்ள சேவல்கள் தொடர்ந்து ஒவ்வொன்றாகக் கூவிக்கொண்டு வந்தன. அவன் வீட்டுக்கு முன்னால் கட்டியிருந்த ஆட்டுக்குட்டி ''மேய்மேய்'' என்று கத்தத் தொடங்கியது. எங்கிருந்தோ கள்ளத்தனமாய் உள்ளே நுழைந்த மெல்லிய காற்று அவன் மேல்படவே மீண்டும் குளிர்ந்தது. முருகேசன் பரபரவென்று எழுந்திருந்தான். வாசலை அடைந்து வானத்தை அண்ணாந்து பார்த்தான்.

அவன் படுக்கைக்குப் போன பொழுது வானத்திலே பூத்திருந்த நட்சத்திரங்கள் ஒன்றையும் காணவில்லை. வானம் கறுத்துக் கனத்து எதிலோ தொங்கிக் கொண்டிருப்பது போல் தோன்றிற்று. வீட்டு முற்றத்திலே வந்து நின்றான். ஒரு மழைத்துளி அவன் தலைமேல் விழுந்தது. கையை நீட்டினான். இன்னும் ஒரு துளி! மற்றக் கையையும் நீட்டினான். இரு துளிகள் வீழ்ந்தன. அவன் தலையிலே வானமே இடிந்துவிழும் போல் இருந்தது.

உக்கிப்போய்த் தன் வீட்டுத் திண்ணையிலே அவன் குந்திக் கொண்டான். பொலுபொலுவென்று மழை தொடங்கியது. இடி இடித்தது. மின்னி மழை சோனாவாரியாய்க் கொட்டிக் கொண்டிருந்தது.

காலை ஏழு மணியாகியும் மழை விடவேயில்லை. ராமு ஓடி வந்து தந்தைக்குப் பக்கத்திலே குளிர் காய்ந்து கொண்டிருந்தான். காமாட்சி இடிந்துபோய் நின்றாள். மழையுடன் காற்றும் கலந்து 'ஹோ' வென்று இரைந்து கொண்டிருந்தது.

''அம்மா, இன்னைக்குப் பாற்கஞ்சி தாரதாய்ச் சொன்னியே, பொய்யாம்மா சொன்னாய்?'' என்று தாயைப் பார்த்துக் கேட்டான் ராமு.

காமாட்சிக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. அவள் வயிறு பற்றி எரிந்தது. பச்சைக் குழந்தையை எத்தனை நாட்களாய் ஏமாற்றிவிட்டாள்? மழையையும் பாராமல் பக்கத்து வீட்டிற்கு ஓடினாள். காற்படி அரிசி கடனாய் வாங்கிக் கொண்டு வந்தாள்.

முருகேசன் ஒன்றும் பேசாமல் வானத்தைப் பார்த்தபடி இருந்தான். அவனுடைய பார்வை வயல்வெளியை ஊடுருவிச் சென்று எங்கேயோ லயித்துப் போயிருந்தது.

''வெள்ள வாய்க்காலிலே தண்ணீர் கரை புரண்டோடிக் கொண்டிருக்கிறது. இப்பொழுது குளம் நிறைந்து தண்ணீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருக்கெடுத்து விடும். என்னுடைய நெற் பயிர்கள் கீழே விழுந்து உருக்குலைந்து விட்டன. நெற் கதிர்கள் உதிர்ந்து வெள்ளத்துடன் அள்ளுண்டு போய்க் கொண்டிருக்கின்றன" என்று அவன் எண்ணி ஏங்கினான்.

காமாட்சி களஞ்சிய அறைக்குப் போனாள். அது வெறுமனே கிடந்தது. அதைப் பார்த்ததும் அவளுக்கு அழுகை விம்மிக்கொண்டு வந்தது. அங்கே நிற்கத் தாங்காமல் வெளியே வந்தாள். ராமு "நாளைக்கும் தாரியாம்மா பாற்கஞ்சி" என்று கெஞ்சிக் கேட்டான். அவன் கஞ்சி குடித்த கோப்பை அவளுக்கு முன்னே காலியாகக் கிடந்தது.

அநேகநாள் பழக்கத்தினாலே "நாளைக்..." என்று மட்டுமே அவளால் சொல்லமுடிந்தது. அந்த அரை குறையான வார்த்தை முருகேசன் வயிற்றிலே நெருப்பை அள்ளிக்கொட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18

சி.வைத்தியலிங்கத்தின் சிறுகதைகள்- ஒரு பார்வை

ஈழத்துச் சிறுகதை முன்னோடிகளுள் ஒருவராகக் கருதப்படும் சி.வைத்தியலிங்கம் இருபத்தைந்து சிறுகதைகள் வரை எழுதியுள்ளார். அவை சரித்திர, சமூகக்கதைகளாக உள்ளன. ஈழகேசரி, ஆனந்த விகடன், கலைமகள், கிராம ஊழியன் ஆகிய இதழ்களில் இவரது கதைகள் பிரசுரமாகியுள்ளன. தமிழக எழுத்தாளர் கு.ப.ராஜகோபாலனைத் தமது ஆதர்ச எழுத்தாளராகக் கொண்டவர் வைத்தியலிங்கம். இதன்காரணமாக இவரது கதைகளில் கு.ப.ரா.வின் எழுத்துக்களின் தாக்கத்தை, செல்வாக்கினைக் காணலாம்.

இவரது சிறுகதைகளிற் பெரும்பாலானவை தூய தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளன. ஈழத்தவரும் தமிழகத்தவரும் படித்து விளங்கிக் கொள்ளக் கூடிய முறையில் அவை அமைந்துள்ளன. இலங்கையர்கோனைப் போன்று இவரும் சரித்திர, சமூகக் கதைகளையே எழுதியுள்ளார். இவரது சமூகம் சார்ந்த சிறுகதைகளில் கிராமிய மக்களின் அன்றாட வாழ்க்கையோடு தொடர்பான அம்சங்கள்- கிராமிய மண்வாசனை கலந்ததாக மிளிர்கின்றன. கங்காகீதம், பாற்கஞ்சி, மூன்றாம்பிறை, நெடுவழி என்பன இதற்குச்சான்றாகும்.

இவரது பதினேழு சிறுகதைகள் கொண்ட கங்காகீதம் என்னும் சிறுகதைத் தொகுதி 1990இல் வெளியிடப்பட்டது. மூத்த எழுத்தாளர் சோ.சிவபாதசுந்தரம் இதனைத் தொகுத்திருந்தார். சி.வைத்தியலிங்கம் தமது பதினைந்தாவது வயதில் சிறுகதை எழுத ஆரம்பித்தவர்; தமது முப்பத்தைந்தாவது வயதில் சிறுகதை எழுதுவதை நிறுத்திக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டார். 1939 தொடக்கம் 1956 வரையான 17 ஆண்டுகளில் அவருடைய சிறுகதைகள் வெளிவந்துள்ளன.

இவர் எழுதிய களனிகங்கைக் கரையிலே, ஏன்சிரித்தார். தியாகம், பார்வதி, ஏமாளிகள், நந்தகுமாரன், பூதத்தம்பி கோட்டை, அழியாப் பொருள், பைத்தியக்காரி, மூன்றாம்பிறை ஆகிய பத்துக் கதைகளும் தமிழகத்திலிருந்து வெளிவரும் கலைமகளில் வெளியாயின. கங்கா கீதம் கிராம ஊழியனிலும் பாற்கஞ்சி ஆனந்த விகடனிலும் வெளிவந்தன. குப்புசாமி ஐயர் தொகுத்து வெளியிட்ட அல்லயன்ஸ் கம்பனி கதைக் கோவையில் மூன்றாம்பிறை இடம் பெற்றது. இவரது பன்னிரண்டு சிறுகதைகள் ஈழகேசரியில் வெளிவந்துள்ளன.

மின்னிமின்னி மறைந்த வாழ்க்கை, கோட்டை இடிந்தது, விதவையின் இருதயம், இரவு கழிந்தது, நெடுவழி, என்காதலி, இப்படிப் பலநாள், உள்ளப்பெருக்கு, கடல் கடந்து வந்த சிலை, சுபாசினி, புல்லுமலையில், மரணத்தின் நிழல் என்பனவே ஈழகேசரியில் பிரசுரமான கதைகளாகும்.

இவரது தியாகம், நந்தகுமாரன், பூதத்தம்பி கோட்டை என்பன சரித்திரம் சார்ந்த கதைகளாகும். ஏனையவையாவும் சமூகச் சீர்திருத்தக் கதைகளாகவே விளங்குகின்றன.

பாற்கஞ்சி

ஆனந்தவிகடனில் பிரசுரமான பாற்கஞ்சி வைத்தியலிங்கத்தின் சிறந்த சிறுகதையெனப் பாராட்டப் படுகிறது. இக்கதை யாழ்ப்பாணக் கிராமம் ஒன்றில் வாழும் ஏழை விவசாயக் குடும்பத்தைப் படிப்போர் மனக்கண்முன் கொண்டுவருகிறது. ஏழைத்தாய் ஒருத்தியையும் அவரது பிள்ளையையும் தத்ரூபமாகச் சித்திரிக்கிறது. தன் பிள்ளைக்குத் தினந்தோறும் வறுமை காரணமாக வெறும் கூழை வழங்கிவரும் தாயைப் பார்த்து பாற்கஞ்சி தரும்படி மகன் கேட்கிறான். வெறும் கூழைக் குடித்துக் குடித்து அலுத்துவிட்டான் அவன். ''இன்னும் எத்தனை நாள் பஞ்சமடா? வயலிலே நெல் முத்தி விளைஞ்சு வருது. ஒனக்கு வேணாம்னா பாற்கஞ்சி தாரனே'' என்று தாய் வாக்குறுதியளிக்கிறார். நாளை நாளை என்று காலம் கடத்துகிறார். அறுவடை முடிந்ததும் ஆசைப்பட்டவற்றை வாங்குவோம் எனத்திட்டமிடுகிறாள். ஆனால்......................!

அறுவடை நாளுக்கு முதல்நாள் இரவு பொழிந்த பெருமழை அவர்களது வயல் விளைச்சலை முற்றாக அழித்து விட்டது. பாற்கஞ்சி பருகும் குழந்தையின் எதிர்பார்ப்பைத் தரைமட்டமாக்கிவிட்டது. ஏழை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயக் குடும்பம் ஒன்றின் நிறைவேறா ஆசைகளை இக்கதை தத்ரூபமாகக் காட்டுகிறது.

இயல்பான பேச்சு வழக்கினைக் கையாள்வதன் மூலம் படிப்போர் மனதில் 'பாற்கஞ்சி' ஆழப்பதியும்படி செய்துள்ளார் வைத்தியலிங்கம். அவரது மொழிநடை கதை படிக்கும் ஆவலைத் தூண்டும் வகையில் அமைந்துள்ளது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19

மாதிரி வினாக்களும் விடைகளும்

01. புதுமைப்பித்தனின் 'ஒருநாள் கழிந்தது' கதை முருகதாசருடைய வறுமை நிலையை எவ்வாறு புலப்படுத்துகின்றது? விளக்குக.

புதுமைப்பித்தனின் 'ஒருநாள் கழிந்தது' என்னும் சிறுகதை ஏழை எழுத்தாளரான முருகதாசரின் வறுமை நிலையைச் சித்திரிக்கும் வகையில் அமைந்துள்ளது. முருகதாசர், அவர் மனைவி கமலம், அவர்களது மகள் அலமு ஆகிய மூவரையும் முக்கிய பாத்திரங்களாகக் கொண்டு அவர்கள் வாயிலாக வீட்டின் வறுமை நிலையையும் பற்றாக்குறையையும் படம் பிடித்துக் காட்டும் வகையில் கதையினை நகர்த்திச் சென்றுள்ளார் புதுமைப்பித்தன். கதை முழுவதும் முருகதாசரது வறுமை நிலையைப் பிரதி பலிக்கும் வகையிலேயே அமைந்துள்ளது. நாளையைப் பற்றிய எவ்வித கவலையுமின்றி இன்றைய தினத்தைக் கழித்தாலே போதும். அதுவே பெரும் நிம்மதி என்று கூறும் வகையில் முருகதாசர் வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவரது நிலை மிகவும் கவலைக்குரியது. அவரது வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவரது வறுமை நிலையைச் சித்திரிப்பதாகவே காணப்படுகிறது. வாடகைக்கு குடியிருக்கும் ஓட்டுக் குடித்தன வீட்டைப் பற்றியும் அதன் நிலைமை பற்றியும் கூறுகையில், முருகதாசரின் வறுமை நிலையை வாசகர் மனதில் நன்கு பதியும் வகையில் புதுமைப்பித்தன் தமக்கே உரித்தான தனித்துவ நடையில்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விவரித்துள்ளார். ''கையில் இருக்கும் கோரைப் பாயை விரிப்பதே ஒரு ஜாலவித்தை. நெடு நாள் உண்மையாக உழைத்தும் பென்சன் கொடுக்கப்படாததால் அது நடுமத்தியில் இரண்டாகக் கிழிந்து ஒரு கோடியில் மட்டும் ஒட்டிக் கொண்டிருந்தது............" என்பதன் மூலம் முருகதாசர் வீட்டு முன்னறையில் கிழிந்த பாயோடு படும் அவதியினைச் சித்திரிப்பதன் ஊடாக அவரது வறுமை நிலையைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

அவர் தீப்பெட்டி தேடிச் சமையலறைக்குச் சென்றபோது ''இங்கே குச்சியுமில்லை, கிச்சியுமில்லை. அலமுவைத் தீப்பெட்டி வாங்க அனுப்பிச்சேன்." என்று அவர் மனைவி கூறுவதன் மூலம் அவர் வறுமை நிலை சுட்டிக்காட்டப்படுகிறது. மேலும் ''ஆமாம் சொல்ல மறந்தே போயிட்டுதே............. செட்டியார் வந்துவிட்டுப் போனார். நாளை விடியன்னை வருவாராம்!" என்று முருகதாசரின் மனைவி கூறுவது அவர்கள் வீட்டுவாடகை செலுத்தக் கூட வழியின்றித் தவிப்பதையே சுட்டிக்காட்டுகிறது.

ரிக்ஷோவில் ஏறி ரிக்ஷோக்காரனுடன் உரையாடிக் கொண்டிருந்த அலமு ரிக்ஷோக் காரனைக் குறிப்பிட்டு ''அப்பா, அவன் பங்கஜத்தே மாத்திரம் கூட்டிக்கிட்டுப் போறானே" என்று முருகதாசரைப் பார்த்துக் கேட்கிறாள். ''பங்கஜம் எதிர்வீட்டு சப்ரிஜிஸ்திராரின் குழந்தை. அது ரிக்ஷாவிலும் போகும்! மோட்டாரிலும் போகும்." என்று அவர் நினைவுகள் ஓடுகின்றன. இதிலும் அவர் தம் வறுமை நிலையே அலமுவின் கேள்வி மூலம் வெளிக் கொணரப்படுகிறது.

முருகதாசர் கடைக்காரனிடம் சென்று தீப்பெட்டி கேட்டபோது ''சாமி! இந்தமாதிரியிருந்தாக் கட்டுமா? போன மாசத்திலே தீர்க்கலியே. நானும் சொல்லிச் சொல்லிப் பார்த்தாச்சு. பாக்கியை முடிச்சு, கணக்குத் தீர்த்திடுங்க! எனக்குக் குடுத்துக் கட்டாது. நான் பொளைக்க வந்தவன்!" என்று அவன் கூறுவதன் மூலம் அவரது வறுமை நிலை கடைக்காரன் மூலம் வெளிக்காட்டப்படுகிறது. தமது வீட்டுக்குவந்த நண்பர் சுப்பிரமணியபிள்ளையிடம் முருகதாசர் மூன்று ரூபா கடன் கேட்பதன் மூலம் அவரது வறுமை நிலையை அவரே வெளிக்காட்டிக் கொள்கிறார். சுப்பிரமணியம் கொடுத்த எட்டணாவையும் மனைவி காப்பிப்பொடி வாங்கிவருமாறு கூறியபோது முருகதாசர் கடைக்காரனுக்குக் கடனடைக்க வேண்டுமே என்கிறார். ''திங்கட்கிழமை தானே தருவதாகக் கூறினீர்களாம்" என்கிறாள் மனைவி. திங்கட்கிழமைக்கு என்ன செய்வது? எனக் கேட்கிறார் முருகதாசர். ''திங்கட்கிழமை பார்த்துக் கொள்கிறது" என்கிறாள் மனைவி. அவளது பதிலே கதையின் முத்தாய்ப்பாய் அமைகிறது.

சுருங்கக் கூறின் கதை முழுவதும் முருகதாசரின் வறுமை நிலையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிபலிக்கப்படுகிறது எனலாம். ஏழை எழுத்தாளர் முருகதாசர் என்ற கதாபாத்திரத்தின் ஊடாக புதுமைப்பித்தன் தமது சொந்த வாழ்க்கையில் அனுபவித்த வறுமையின் தாக்கத்தையே வெளிப்படுத்தியுள்ளார். தமக்கே உரித்தான நகைச்சுவையும் கிண்டலும் கலந்த வார்த்தைகளால் தமது வறுமை நிலையையும் புலப்படுத்தியுள்ளார்.

02. சி. வைத்தியலிங்கத்தின் 'பாற்கஞ்சி' என்ற சிறுகதையிற் சித்திரிக்கப்படும் முருகேசன் குடும்பத்தின் சிதறிப்போன எதிர்பார்ப்புகளை விவரிக்குக.

முருகேசன் உளப்பூரிப்புடன் தன் வயலைப் பார்த்தான். நெற்கதிர்கள் பால்வற்றி, பசுமையும் மஞ்சளும் கலந்து செங்காயாக மாறிக் கொண்டிருந்தன. "இன்னும் பதினைந்து நாட்களில்....." என்று அவனது வாய் முணுமுணுத்தது. பயிருக்குள் நுழைந்து ஒவ்வொரு கதிராகத் தன் கைகளால் அணைத்துத் தன் குழந்தைகள் போலத் தழுவிக் கொண்டிருந்தான். கூழுடன் வந்த காமாட்சி தன் கணவனுக்குக் கூழைக் குடிக்கும்படி கொடுக்கிறாள். முருகேசன் கூழ் குடித்துக் கொண்டிருக்கும் போது தன் மனைவியைப் பார்த்து முந்திய வருட நிலைமையைக் கூறி "இந்த வருசம் கடவுள் கண்திறந்திருக்கிறார். கருப்பன் செட்டி கடனைத் தீர்த்திடலாம். நமக்கு ஒருவருடத்துக்குச் சோத்துக்குக் குறைவு வராது. எங்க ராமனுக்கு ஒரு சோடிக் காப்பு வாங்கணும்..." என்று தன் எதிர்பார்ப்புகளைக் கூறுகிறான். அதேவேளை தனக்கு ஒரு ஒட்டியாணம் வாங்கவேண்டும் என்ற விருப்பத்தை அவன் மனைவி காமாட்சி கூறுகிறாள்.

ஒரு பெருநாளை எதிர்பார்ப்பது போல் அறுவடை நாள் எப்போ வரும்? என்று முருகேசனும் காமாட்சியும் எதிர்நோக்கியிருக்கிறார்கள். காமாட்சி தன் வீட்டுக் களஞ்சிய அறையைக் கோலமிட்டு மெழுகி வைக்கின்றாள். தினந்தோறும் அங்கு தீபமேற்றி வருகிறாள். மணையாகக் கிடந்த அரிவாள்களை கொல்லன் பட்டடையிற் கொண்டு போய் தேய்த்து வந்தான் முருகேசன். கதிர்ப்பாய்களை வெய்யிலிலே உலர்த்தி பொத்தல்களைத் தைத்து வைத்தான். "தாயே ஒரு விக்கினமும் வந்திடப் படாது" என்று காமாட்சி அம்பிகையை வேண்டிக் கொண்டாள். முருகேசன் அறுவடைக்கான அனைத்து ஒழுங்குகளையும் செய்த பின்னர் அறுவடை செய்தற்கு உதவிக்குவருமாறு அயல் வீட்டுக் கந்தையனிடமும் கோவிந்தனிடமும் சொல்லி வைத்தான். முருகேசனதும் காமாட்சியினதும் மனம் அறுவடை நாளையே எண்ணிய வண்ணமிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுவடைக்குக் குறித்த நாளுக்கு முதல்நாள் மாலை வானத்தில் கருமுகில்கள் கூட, முருகேசனது மனதிலும் இருள் குடி கொண்டது. காமாட்சி அம்பிகைக்கு அபிஷேகம் செய்வதாக வேண்டிக் கொண்டாள். சிறிது வானம் வெளுக்கவே அவள் மனம் மகிழ்ந்தாள். அன்றிரவு முருகேசன் கனவு காண்கிறான். காமாட்சி ஓட்டியாணத்துடன் வருவதையும் வீட்டில் களஞ்சிய அறையில் நெல்மூட்டைகள் நிறைந்து காணப்படுவதையும் ராமன் வயிறு நிறையப் பாற்கஞ்சி குடித்துக் கொண்டிருப்பதையும் காண்கிறான். வீட்டின் கூரைமேல் சேவல் கூவுகிறது. பரபரப்புடன் எழுந்து முற்றத்தில் வந்து நிற்கிறான். மழைத்துளி ஒவ்வொன்றாக விழவும் வானமே அவன் தலையிலே இடிந்து விழுவது போல இருந்தது. விடாது பெய்த பெருமழையினால் வெள்ளம் கரை புரண்டு ஓடியது. ராமு காமாட்சியிடம் பாற்கஞ்சி தருமாறு கேட்கிறான். அவள் வயிறு பற்றி எரிகிறது. பக்கத்து வீட்டில் காற்படி அரிசி கடன் வாங்கி வந்து கஞ்சி காய்ச்சிக் கொடுக்கிறாள். ராமு ''நாளைக்கும் தாரியாம்மா பாற்கஞ்சி" என்று கெஞ்சிக் கேட்கிறான். 'நாளைக்கு' என்று காமாட்சி கூறிய வார்த்தை முருகேசன் வயிற்றிலே நெருப்பை அள்ளிக் கொட்டியது போல இருந்தது.

முருகேசன் என்னும் ஏழை விவசாயியின் குடும்ப எதிர்பார்ப்புக்கள் யாவும் சிதறிப் போயின. அவர்களது ஆசைகள் நிராசைகளாயின.

03. ''வெள்ளிப்பாதசரம்'' என்னும் சிறுகதையில் கிராமியப் பண்பாடு நன்கு புலப்படுத்தப்படுகிறது. ஆராய்க.

ஈழத்து மண்வாசனையை - கிராமியப் பண்பாட்டினை எடுத்துக்காட்டும் சிறுகதைகளில் ஒன்றாக 'வெள்ளிப்பாதசரம்' விளங்குகிறது. இக்கதையில் குறிப்பாக யாழ்ப்பாணக் கிராமியப் பண்பாட்டினை நாம் நன்குணரலாம். வல்லிபுரக் கோயில் கடைசித் திருவிழாவை மையமாக வைத்துப் புனையப்பட்ட இச்சிறுகதை யாழ்ப்பாணப் பேச்சுவழக்குத் தமிழில் பெரிதும் அமைந்துள்ளது.

கதை நிகழும் இடமாக வல்லிபுரக் கோயில், வல்லைவெளியை அடுத்துள்ள பகுதி என்பன குறிப்பிடப்படுகின்றன. இப்பகுதியின் இயற்கைச் சூழலும் மக்களின் வாழ்க்கை முறைகளும் கதாபாத்திரங்களின் உரையாடல்களும் கிராமியப் பண்பாட்டினைப் பறைசாற்றுவனவாகவே அமைகின்றன.

''கோயில் வீதியெல்லாம் பெட்டிகளும் கடகங்களும் மலைமலையாகக் குவிந்திருந்தன. குஞ்சுப்பெட்டி, அடுக்குப்பெட்டி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையற்பெட்டி, மூடற்பெட்டி, பின்னற்பெட்டி....... ஊ! எத்தனைவகை......" என நல்லம்மா அதிசயிப்பதன் மூலம் யாழ்ப்பாணக் கிராமியச் சூழலில் பனையோலை கொண்டு இழைக்கப்பெற்ற பெட்டிகளின் வகை வெளிப்படுத்தப்படுகிறது.

"எவ்வளவு சனம் பாத்தியளே! இதுக்காலை எப்பிடிப்போறது?" என நல்லம்மா சொல்வது யாழ்ப்பாணக் கிராமியப் பேச்சு வழக்கினை நன்கு புலப்படுத்துகிறது. செல்லையா தன் தோளில் கிடந்த சால்வையை எடுத்து இடுப்பில் வரிந்து கட்டிக்கொண்டு "பயப்படாமல் என்னோடை வா" என்று மனைவியை அழைத்துச் செல்கிறான். இதன் மூலம் ஆலயத்திற்குள் செல்வோர் தோளில் போடும் சால்வையை இடுப்பில் கட்டிக்கொள்ளும் யாழ்ப்பாணக் கிராமியப் பண்பாடு-கிராமிய உடை சுட்டிக்காட்டப்படுகிறது. செல்லையா மாறுகரைச் சால்வை அணிந்துள்ளான் என்பதும் புலப்படுத்தப்படுகிறது.

"தவிற் காரன் தாள வரிசைகளை மெய்மறந்து பொழிந்து கொண்டிருந்தான். அவனுடைய குடுமி அவிழ்ந்த தலையோடு வேறு ஆயிரந் தலைகள் அசைந்தன" என்பதன் மூலம் மேளச் சமாவை (தவிற் கச்சேரியை) இரசிப்போர் கூட்டம் நிறைந்திருந்தது என்பது வெளிப்படுத்தப்படுகிறது. கிராமியச் சூழலில் ஆலயங்களில் இடம்பெறும் தவிற் கச்சேரியைக் கிராமமக்கள் பெருமளவில் கூடியிருந்து இரசிப்பது வழக்கம். இக்கிராமியப் பண்பாட்டினையே இங்கும் காணமுடிகிறது.

"சர்பத் கடைக்காரன் பல வர்ணங்கள் கொண்ட போத்தல்களை ஒரு தடியால் அடித்து ஜலதரங்கம் வாசித்தான்." கண்ணாடி வளையல்களின் லாவண்யத்தில் நல்லம்மாவின் மனம் லயித்தது. செல்லையா அவளுக்கு ஐந்து ஜதை வளையல்கள் வாங்கிக் கொடுத்தான்." இவையெல்லாம் திருவிழாக்காலங்களில் கோயில் வீதிகளில் இடம்பெறும் நிகழ்ச்சிகளைத் தத்ரூபமாகக் காட்டுகின்றன. வெள்ளிப்பாதசரம் ஆடம்பரப் பொருளாக இங்கு காட்டப்படுகிறது.

நெல்லியடிச் சந்தியில் செல்லையா வண்டியை நிறுத்துகிறான். "நடு யாமத்திலும் அங்கு கடைகள் எல்லாம் திறந்திருக்கின்றன. சந்தையில் இரண்டு பெண்கள் அப்பம் சுட்டுக் கொண்டிருந்தனர். தேநீர்க் கடைகளில் தேநீர் கலக்கும் 'கடகட' என்ற சத்தத்தைவிட மற்றெங்கும் ஆழ்ந்த நிசப்தம் குடிகொண்டிருந்தது." என்ற வரிகள் திருவிழாக் காலங்களில் நடு யாமத்திலும் கோயிலுக்குப் போகிறவர்களுக்காகக் கடைகள் திறந்திருக்கும் கிராமியப் பண்பாட்டின் பிரதிபலிப்பை உணர்த்துகின்றன.

"செல்லையா வாயில் ஒரு சுருட்டுடன் வந்து மனைவி அருகில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு வெற்றிலை பாக்குச் சுருளை வைத்துவிட்டு அவளுடைய முகத்தைப் பார்த்தான்......" இதன் மூலம் மனைவியின் கோபத்தைத் தணித்திட அவன் விரும்புவதையும் உணர முடிகிறது. கணவன்-மனைவிக்கிடையேயுள்ள அந்நியோன்னியத்தையும் கிராமியப் பண்பாட்டையும் இவை வலியுறுத்துகின்றன. வல்லைவெளியில் செல்லையா தன்குரலை எழுப்பி ''ஞானகுமாரி" என்ற தேவகாந்தாரி ராகப் பாட்டைப் பாடினான். வண்டியோட்டுவோர் உற்சாகம் கொள்ளும் போது பாடல்களைப் பாடியவண்ணம் வண்டியை ஓட்டிச் செல்லும் கிராமிய வழக்கத்தையே இங்கு காணமுடிகிறது.

இக்கதையின் மூலம் கிராமிய மக்களின் பழக்கங்கள், பண்பாட்டு விழுமியங்கள் பலவும் எடுத்துக் காட்டப்படுகின்றன. தங்கள் தேவைக்கான பாவனைப் பொருள்களையும் கோவில் திருவிழாக் காலங்களில்தான் கிராமமக்கள் கொள்வனவு செய்வர். சிறுதொகைப் பணத்துடனும் குறைந்த தேவைகளுடனும் மலிவான பொருட்களுடனும் திருப்தியடையும் எளிமையான வாழ்க்கைப் பண்புடையவர்கள் கிராமிய மக்கள் என்பதை இக்கதை நன்கு புலப்படுத்துகிறது. கடும் உழைப்பாளர்களான விவசாயிகள் உழைப்பினாலான அலுப்பை மறந்து மகிழ்ந்திருக்க, மன மகிழ்ச்சிகொள்ளக் கோவில் திருவிழாக்கள் ஏற்ற வாய்ப்பினை அளிக்கின்றன. வாழ்க்கைப் போரினால் ஏற்பட்ட அலுப்பைக் கொஞ்சம் தீர்த்துக் கொள்வதற்காகவே வல்லிபுரக் கோயிலுக்கும் யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் வந்த மனிதர்கள் நிரம்பி இருந்தார்கள் எனக் கதாசிரியர் குறிப்பிடுகின்றார். கிராமியப் பின்னணியைக் கொண்டு கணவன்- மனைவிக்கிடையே நிலவும் பாசம், ஊடல், நேசம் ஆகியவற்றை வெளிக்காட்டும் வகையில் புனையப்பட்ட இக்கதையில் ஆரம்பம் முதல் இறுதிவரை கிராமியப் பண்பாடே அடிநாதமாக மிளிர்கின்றதெனலாம்.

04. 'ஒருநாள் கழிந்தது' என்னும் சிறுகதையிற் புதுமைப்பித்தன் படைத்துள்ள 'அலமு' பாத்திரம் குறித்து விளக்குக.

புதுமைப்பித்தன் படைத்த 'ஒருநாள் கழிந்தது' என்னும் சிறுகதையில் 'அலமு' என்னும் பாத்திரம் முக்கிய இடத்தைப் பெறுகிறது. முருகதாசரின் செல்ல மகளான அலமு கடைக்குத் தீப்பெட்டி வாங்கச் செல்கிறாள். கடைக்காரன் கொடுக்க மறுத்து விட்டான். அலமு சந்தில் நின்ற ஒரு ரிக்ஷாவில் ஏறி அமர்ந்து கொண்டு ரிக்ஷாக்காரனுடன் சம்பாஷணையில் ஈடுபடுகிறாள். இவ்வேளையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலமுவைத் தேடிக் கொண்டு முருகதாசர் வருகிறார். அங்கு நடைபெறும் சம்பாஷணையைக் கவனிக்கிறார்.

அதனை அவரே கூறும் வகையில் புதுமைப்பித்தன் அழகாகப் படைத்துள்ளார்.

அலமு ஒரு சுண்டெலிமாதிரி கம்மென்று மெத்தையில் உட்கார்ந்திருக்கிறாள். ரிக்ஷா வண்டி, ஏர்க்கால் பக்கத்தில் வண்டிக்காரன் உட்கார்ந்து கொண்டிருக்கிறான். அலமுவின் ராஜ்யம் நடக்கிறது.

''ஏட்டி!'' என்றார் முருகதாசர்.

''இல்லையப்பா! நீ இனிமே என்னை அலமுன்னு கூப்பிடுவேன்னியே!'' என்கிறாள். எதிர்வீட்டு பங்கஜத்தைப் போல ரிக்ஷா வண்டியில் போகும் தன் ஆசையை வெளிப்படுத்துகிறாள். தகப்பனுடன் பாதிவழி போகையில் அப்பா! என்று அழைக்கிறாள். கடினமாகப் பேசிய தகப்பனிடம் ''நீதான் கோவிச்சுக்கிறியே அப்பா! நான் சொல்லமாட்டேன்'' என்கிறாள். பின்னர் ''அதோ பார் பல்லுமாமா'' எனக் காட்டுகிறாள். தகப்பனாரின் கையிலிருந்து வழுகி விடுவித்துக் கொண்டு வீட்டுக்கு ஓடுகிறாள். பாவாடை தடுக்கி விழுந்து எழுகிறாள். பாட்டுப் பாடிக்கொண்டு எழுகிறாள். ''பல்லு மாமா வந்துவிட்டார்.'' என்று உச்சஸ்தாயியில் விளம்பரம் செய்து கொண்டு ஓடுகிறாள்.

''அப்பா! காப்பியாயிட்டுது. நீதான் வந்து எடுத்துக்கிட்டுப் போகணும் சுடுது'' என்று நிலைப்படி இரண்டையும் தொட்டவண்ணமாய், ஒற்றைக்காலை ஆட்டிக் கொண்டு நின்று தகப்பனை விடாது வற்புறுத்தி அழைக்கிறாள்.

மாமா! நீ என்ன கொண்டாந்தே என்று சுப்பிரமணியபிள்ளையின் மடிமீது உட்கார்ந்து கொண்டு அவரது கழுத்திலிருக்கும் 'டையை' பிடித்து இழுத்து விளையாடுகிறாள்.

காப்பிச் செம்பை ஏந்திய வண்ணம் வந்த தகப்பனைப் பார்த்து ''என்னப்பா மூணு டம்ளர் கொண்டாந்தே! எனக்கில்லையா?'' என்று கேட்கிறாள். ''உனக் கென்னட்டி இங்கே! அம்மா கூடப் போய்ச் சாப்பிடு'' என்று கூறிய தகப்பனைப் பார்த்து மாட்டேன் என்று கூறி ஒரு டம்ளரை எடுத்து வைத்துக் கொள்கிறாள் அலமு.

''மாமா, எனக்கில்லையா?'' என்று சுப்பிரமணிய பிள்ளையிடம் போய் ஒட்டிக் கொள்கிறாள். ''வாடி, நாம் ரெண்டு பேரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிடுவோம்" என்று அழைக்கிறார் முருகதாசர். ''மாமா கூடத்தான்" என்று கூறிய வண்ணம் அலமு சுப்பிரமணியபிள்ளை கையிலிருந்த டம்ளரில் குடிக்கிறது. பாதியானதும் போதும் என்று கூறுகிறது. துடுக்குத்தனமும் விவேகமும் உடனுக்குடன் பதில் கூறும் ஆற்றலும் உள்ள சிறுமியாக அலமு இக்கதையில் சித்திரிக்கப்படுகிறாள். இப்பாத்திரத்தின் மூலம் அலமுவின் துடுக்குத்தனம் விவேகம் மட்டுமன்றி முருகதாசரின் வறுமை-அவல வாழ்க்கை நிலையும் நன்கு வெளிப்படுத்தப்படுகிறது. வயதொத்த பாத்திரமாக அலமுவைப் படைத்துள்ள புதுமைப்பித்தன் அவள் மூலம் கதைக்கு நன்கு அழுத்தம் கொடுத்துள்ளார்.

05. நவீன காலச் சிறுகதைகளின் முக்கிய பண்புகளை விவரிக்குக.

நவீன காலச் சிறுகதைகள் முன்னைய காலச் சிறுகதைகளிலும் பார்க்கத் தரத்திலும் நடையிலும் யதார்த்தப் பண்பிலும் மேலோங்கியுள்ளமையை எளிதிற் காணமுடிகிறது. குறிப்பாக நவீன காலச் சிறுகதைகள் யதார்த்தப் பண்புடையனவாய்த் திகழ்கின்றன. முன்னையகாலக் கதைகள் வெறும் கற்பனையையே மையமாகக் கொண்டு படிப்போரைக் கற்பனை உலகில் தவழவிட்டனவே தவிர மக்கள் சமுதாயத்தின் உண்மைநிலையை அவர்களது ஆசாபாசங்களைப், பிரச்சினைகளை வெளிக் கொணருவனவாக அமையவில்லை. சமுதாயத்துக்கு அவை எத்தகைய செய்தியையும் விடுப்பதாக அமைய வில்லை.

ஆனால் நவீனகாலச் சிறுகதைகள் சமூக உணர்வுடையனவாக சமூகத்தின் எழுச்சிக்கு வழிகாட்டுவனவாக, சமூகக் கொடுமைகளைச் சித்திரிப்பனவாக, சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துவனவாக மிளிர்கின்றன. பழைய புராணக் கதைகளைக் கூட நவீன காலத்துக்கு ஏற்றபடி நோக்கும் போக்கினைக் காணமுடிகிறது. புதுமைப் பித்தன் எழுதிய அகலிகை என்னும் கதை இதற்கு நல்லதோர் எடுத்துக் காட்டாகும்.

நவீனகாலச் சிறுகதைகளில் காணப்படும் மற்றோர் பண்பு அவை பேச்சுவழக்கினைப் பெரிதும் கொண்டிருப்பதாகும். மக்களுக்குப் புரியும் வகையில் பழகு தமிழில்- பேச்சுவழக்கினைப் பெரிதும் கையாளும் போது கதைகளை வாசிப்போர் பாத்திரங்களின் இயல்பை, அவை வெளிப்படுத்துவனவற்றை இலகுவில் விளங்கிக் கொள்ள முடிகிறது. படிப்போர் வாசக நிலையில் இல்லாமல் கதாபாத்திரங்களோடும் கருத்தோடும் தாமும் கலந்துவிடும் நிலையை உருவாக்குகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீனகாலச் சிறுகதைகள் இறுக்கமும் கட்டுக்கோப்பும் உடையனவாகவும் அளவிற் சிறியனவாகவும், முழுமையும், ஒருமைப்பாடும் கொண்டனவாகவும் திகழ்கின்றன. நவீனகாலச் சிறுகதைகளில் செம்மையான பாத்திர அமைப்பும் சொற்சிக்கனமும் பெரிதும் காணப்படுகின்றது. இது சீரிய சிறுகதைப் பண்புகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது.

நீண்ட உரையாடல்களுக்கோ, வார்த்தை ஜாலங்களுக்கோ, வர்ணனைகளுக்கோ இடமளியாது சிலவற்றைக் கூறிப் பலவற்றைச் சிந்திக்க வைக்கும் சிறப்புடையனவாக நவீனகாலச் சிறுகதைகள் விளங்குகின்றன. உயிர்த்துடிப்பும் பொருட் செறிவும் திட்பமும் நுட்பமும் கற்பனை நயமும் கலந்ததாக நவீன காலச் சிறுகதைகள் திகழ்கின்றன.

கதைகளைப் படிப்போர் அவற்றைப் படித்தபின்பு ஏதாவது ஒரு உணர்வைப் பெற வேண்டும். வாசகர் நெஞ்சில் கதையின் பாத்திரங்கள் ஏதாவது உணர்வினைத் தோற்றுவிக்க வேண்டும். இத்தகைய பண்பு நவீன காலச் சிறுகதைகளில் பெரிதும் காணப்படுகிறது.

சிறுகதை படைப்போர் மனித வாழ்க்கையை ஆதாரமாகக் கொண்டு அதன் பல்வேறு அம்சங்களைச் சித்திரிக்கும் வகையில் சிறுகதைகளைப் படைக்க வேண்டும். எழுதி முடித்தபின் கதைக்கு முன்னேயும் பின்னேயும் உள்ள எழுதாத கதைத் தொடர்புகள் படித்தோரது உள்ளங்களில் மலரவேண்டும். எழுதப்பட்ட நோக்கம், படைப்பாளியின் குறிக்கோள், உணர்வு என்பன சிறிதும் சிதறாமல் இருக்க வேண்டும். இத்தகைய பண்புகள் உடைய கதைகளே சிறந்த கதைகளாக விளங்க முடியும். நவீன காலச் சிறுகதைகள் பலவற்றில் இப்பண்புகள் நிறைந்திருப்பதை நாம் காண முடிகிறது.

06. கு. அழகிரிசாமியின் 'தவப்பயன்' என்னும் கதையூடாக வெளிப்படுத்தப்படும் தத்துவ உண்மை யாது?

தவப்பயன் என்னும் கதையில் முக்கிய பாத்திரமாக விளங்குபவர் சுவாமி நிர்மலானந்தர். இவரது ஆச்சிரம வாழ்க்கை, பக்தர்களுக்கு அருளும் பண்பு, செயற்பாடுகள் யாவும் வெகுஅழகாக இக்கதையில் சித்திரிக்கப்பட்டுள்ளன. கடும் தபசை மேற்கொண்ட சுவாமிகள் தமது உடலை ஒரு பெரும் பாரமாகவே கருதி வந்தார். இப்பாரத்தை இறக்கும் நாளும் வந்தது. பாம்பு தீண்டி அவர் இறந்தார். ஆனால் அவரது ஜீவாத்மா பரமாத்மாவுடன் ஐக்கியப் படவோ, இரண்டறக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலக்கும் அத் வைத நிலையை எய்தவோ முடியவில்லை சுவர்க்கத்திலும் சுகம் காணவில்லை. பரப்பிரம்மத்திலும் சுகம் காணப்போவதில்லை.

இறைவன் இவருக்கு மீண்டும் உலகில் பிறந்து இன்ப வாழ்வை அனுபவிக்கும் ஒரு பிறப்பை அளிக்கவே விரும்பினார். அதன் பயனாகவே அணில் குஞ்சாக அவர் பிறந்துள்ளார் எனக் கதாசிரியர் சுட்டுகின்றார்.

'நான்' என்னும் ஆணவச் செருக்கு அகலவில்லை. 'அவன்' இன்னும் அவனாகத்தான் இருக்கின்றான். 'அவன்' 'நான்' ஆகவில்லை. 'நான்' அவனாக இல்லை. இந்த நிலை நீங்கினாற்றின் பிரம்ம ஐக்கியம் கிட்டும். நான் என்னும் ஆணவம் நீங்கி, உலகப் பற்றுயாவும் துறந்து பரிக்குவ நிலையை எய்தும் ஜீவான்மாவே பரமாத்மாவுடன் சங்கமமாக முடியும் என்ற உண்மையை-தத்துவத்தை இக்கதை உணர்த்துகிறது.

''முக்தியும் முதல்வனும் சாலையோரச் சத்திரங்களாகிவிட்டன. லட்சிய ஸ்தானங்களாக இல்லை'' என்னும் கதாசிரியரின் கூற்று போலிச் சந்நியாசிகளுக்குச் சாட்டையடி கொடுப்பதாகவே அமைந்துள்ளது. எனினும் நிர்மலானந்தரைப் பொறுத்த வகையில் அவர் கடும் தபசி என்பதையும் அத்தபசிற்குப் பயனாகவே சுகமான வாழ்க்கையை உணர்ந்து துய்க்கும் ஒரு பிறப்பை, பழையபடியும் அதே பூலோக வாழ்க்கையை அளித்திடக் கடவுள் விரும்பினார் எனவும் கதாசிரியர் கூறுகின்றார். தவம் எத்தகையதோ அதன் பயனும் அத்தகையதே.

சுருங்கக் கூறின் சகலபற்றுக்களையும் துறந்து, ஆணவம் வலியிழந்து, எல்லாம் அவனே எனக் காணும் நிலையினை எய்தும் ஜீவாத்மாவே பரமாத்மாவுடன் ஐக்கியப் படமுடியும் என்னும் தத்துவ உண்மையைத் 'தவப்பயன்' என்னும் கதை துலக்குகிறது.

07. ''பெண்ணின் மென்மையான மனநிலையை உணர்த்துவதாகக் கு.ப.ராஜகோபாலனின் 'கனகாம்பரம்' என்னும் கதை அமைகின்றது'' - ஆராய்க.

'கனகாம்பரம்' என்னும் கதையின் முக்கிய கதாபாத்திரமாகத் திகழ்பவள் சாரதா. மணியின் மனைவியான இவள் படித்த பெண்ணல்ல. சுத்த கிராமாந்தரம். சோழ நாட்டுக் கிராமத்துப் பெரிய பண்ணையாரின் மகள். அவளுடைய நடை, உடை, பாவனை, சேலைகட்டியிருக்கும் விதம், தலைமயிர் பின்னிய முறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்துமே அவள் அசல் கிராமத்துப் பெண் என்பதை நினைவூட்டின.

சாரதா பட்டணத்து நாகரிகத்துக்கு ஏற்ப நடந்து கொள்ள வேண்டுமென அவள் கணவன் மணி கூறியவற்றை நன்கு உள்வாங்கிக் கொண்டு அதற்கேற்ப செயல்படுபவளாக விளங்கினாள். கணவன் பாராட்டும் வகையில் நடந்து கொள்ள வேண்டுமென விரும்பினாள்.

தனது கணவனுடைய நண்பன் ராமு வீடுவந்தபோது அவள் பட்டண நாகரிகத்திற்கேற்ப அவனை வரவேற்றாள். ''இதோ வந்து விடுவார். உள்ளே வந்து உட்காருங்கள்'' என்று கூறுகிறாள். கணவன் வீடு திரும்பியதும் இச்செய்தியை அவனிடம் தெரிவிக்கிறாள். தான் பட்டண நாகரிகத்திற்கேற்ப நடந்து கொண்டதை அவன் பாராட்டுவான் என்ற எண்ணத்திலேயே அவ்விதம் கூறினாள். பெண்ணின் மென்மையான மனநிலையினையே இது எடுத்துக் காட்டுகிறது. ஆனால், அவள் எதிர்பார்த்ததற்கு மாறாக அவள் கணவன் கூறியமை அவளது மென்மையான மனநிலையைப் பெரிதும் பாதிப்பதாகவே அமைந்து விட்டது.

''எவ்வளவு தரம் சொல்லுகிறது உனக்கு? யார் என்று கேட்பதற்கு என்ன கேடு உனக்கு? ஒரு வார்த்தை கேட்டுவிட்டால் என்ன மோசம், உன் கையை பிடித்து இழுத்து விடுவானோ?'' என்று மணி வார்த்தைகளை வீசினான். வேண்டிய மட்டும் பேசட்டும் என்று சாரதா வாயை மூடிக்கொண்டிருந்தாள். பின்னர் அமைதியாகப் பதில் சொன்னாள். ''யார் என்று கேட்டேன். சினேகிதன் என்று சொன்னார். பேர் சொல்லவில்லை. உள்ளே வந்து உட்காருங்கள், வந்துவிடுவார் என்றேன். அப்புறம் வருவதாகச் சொல்லி போய் விட்டார்.'' எனச் சாரதா மகிழ்ச்சியுடன் கூறுகிறாள். மணி மகிழ்ச்சியடைவான் என்ற எதிர்பார்ப்புடனேயே சாரதா இவ்விதம் கூறினாள். ஆனால், மூன்றாம் பேர்வழியை வீட்டுக்குள் அழைத்தமை குறித்தும் கனகாம்பரம் பூ வைத்துக் கொள்வதும் குறித்தும் அவன் கூறியமை சாரதாவின் மென்மையான மனத்தில் ஆழமான வெறுப்பை ஏற்படுத்திவிட்டன.

''முகத்தில் ஓர் ஆழ்ந்த வெறுப்புக்குறி தோன்றியது. பாதி போட்ட பின்னலை அவிழ்த்து முடித்துக் கொண்டு கனகாம்பரப் பூவைத் தட்டுடன் அப்படியே எடுத்து அலுமாரியில் வைத்துவிட்டுச் சமையலறைக்குப் போய்விட்டாள்'' எனக் கதாசிரியர் அவளது கோபத்தையும் அவளது மென்மையான மனநிலையையும் படம்பிடித்துக் காட்டுகின்றார்.

எனினும் பின்னர் அவளது மனம் சாந்தியடைகிறது. எப்படியிருப்பினும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவனுடைய மகிழ்ச்சியே தன்னுடைய மகிழ்ச்சியெனக் கருதுகிறாள். கணவனது மனதில் தோன்றிய தவறான உணர்வை உணர்ந்தவளாக, அவனை மன்னிக்கும் மனநிலை உடையவளாகச் சாரதா விளங்குகிறாள். இதன் பிரதிபலிப்பாகவே "கனகாம்பரம் எனக்குப் பிடிக்காதே! நீங்கள் சொன்னதில் தப்பென்ன?" எனச் சாரதா கூறுகிறாள். பெண்ணின் மென்மையான மனநிலையையே அவளது இக்கூற்று நன்கு புலப்படுத்துகிறது.

இக்கதையின் ஊடாகக் கதாசிரியர் சாரதா என்னும் பாத்திரத்தின் மூலம் பெண்ணின் மென்மையான மனநிலையை நன்கு படம் பிடித்துக் காட்டியுள்ளார் எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலில்...

- கதைகள்
- கதாசிரியர்கள் பற்றிய குறிப்புக்கள்.
- மாதிரி வினா - விடைகள்.
- சிறுகதை வளர்ச்சி தொடர்பான கட்டுரைகள்.

அனைத்தும் கொண்ட புதிய பதிப்பு

விற்பனையாகின்றன !



விற்பனையாளர் :

லங்கா புத்தகசாலை

F.L. 1-14, டயஸ் பிளேஸ்,
குணசிங்கபுர, கொழும்பு - 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org